பக்கங்கள் : முப்பத்திரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (02.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :126

# அடுத்த கட்டத்துக்கு நகர மஹிந்த அரசுக்கு வாய்ப்பு

## அதற்கும் அவகாசம் வழங்கப் புலிகள் தயார் தேர்தல் முடிவு குறித்து பாலகுமாரன் கருத்து

பளையிலிருந்து அலுவலகச் செய்தியாளர்

பளை,ஏப்ரல்2

**மஹிந்த ராஜபக்ஷவின் கரங்கள் ஏதோ வகையில் சிங்கள மக்களால் பலப்படுத்தப்பட்டுக்கொண்டிருப்பதை தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன. இனி அடுத்த கட்ட நகர்வுகளை அவர் துணிந்து முன்னெடுக்க முடியும். சர்வதேச சமூகமும் இனிமேல் அவரை நன்கு பயன்படுத்த முடியும். அதற்கான அவகாசத்தை அவருக்குக் கொடுப்பதற்குப் புலிகள் தயாராகவே உள்ளனர்.**

**- இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன்.**

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட வே. பாலகுமாரன், தேர்தல்கள் மற்றும் சமகால அரசியல் நிலைவரம் பற்றி வேட்பாளர்களுக்கு விளக்கமளித்தார்.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மஹிந்தவின் கட்சி பெருவெற்றியீட்டியிருப்பதன் பின்னர் அவரது அடுத்த கட்ட நகர்வுக்கு சாதகமாக உருவாகி இருக்கும் நிலைமை குறித்தும் பாலகுமாரன் கருத்துத் தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் பல செய்திகளைச் சொல்லியிருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷ இனிமேல் எந்தச் சாக்குப் போக்கும் சொல்ல முடியாது. 40 ஜே.வி.பி. எம்.பிக்களும் வேண்டுமானால் வெளியே போகலாம். ஆனால், அவர்கள் அப்படி வெளியே போகமாட்டார்கள். மீண்டும் மஹிந்தவின் காலடியிலேயே போய் விழுவார்கள்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகாந்தியில்...

- 'டோறா' படகுகளுக்கு என்ன நடக்கிறது?
- முதியோரின் அவலம்: ஒரு பார்வை....
- 'பாஸ்க்' தனிநாட்டுக் கோரிக்கை கைவிடப்பட்டதா?
- சோதனையா? கொள்ளையா? தேடுதலா? திருட்டா?

இவற்றுடன் -
* திலகம் * அறிவியலும் மருத்துவமும்
* சிறுவர் பொழில் * கவிதைகள்

## கடற்படையினர் ஆயுதம் பரீட்சிப்பு

மட்டக்களப்பு,ஏப்.2

மட்டக்களப்பு, நோர்வேத்தீவு பகுதி நோக்கி நேற்று நண்பகல் கடற்படையினர் சரமாரியாகத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர். தமது ஆயுதங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று கடற்படை தெரிவித்திருக்கின்றது. (ஐ -12-14)

## தனங்களப்பில் கிளைமோர் கண்ணிகள்

கொழும்பு,ஏப்.2

தென்மராட்சி, தனங்களப்புப் பகுதியில் இராணுவ நிலை ஒன்றின் அருகில் இருந்து மூன்று பழைய கிளைமோர் கண்ணி வெடிகளைப் படையினர் மீட்டிருக்கின்றனர் என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் கண்டெடுக்கப்பட்ட இந்தக் கிளைமோர் கண்ணிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு ஏற்ப

## வலி. வடக்கில் மக்களைக் குழுக்களாக குடியமர்த்தும் சாத்தியம் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 2

அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் வலி. வடக்குப் பகுதியில் மக்களைக் குழுக்களாக மீளக் குடியமர்த்துவதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட கிராமங்களில் மக்களைக் குழுக்களாக குடியமர்த்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், வலி. வடக்கு மீள் குடியமர்வு தொடர்பான வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கிராம சேவையாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வலி.வடக்கில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது இடம்பெற்று வரும் விசாரணைகளின்போது கடந்த 27ஆம் திகதி யாழ். அரச அதிபர் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில் மக்களைக் குழுக்களாக மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கலாம் என்று சிபார்சு செய்திருக்கிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுப்படைகளின் ஆயுதங்களை புலிகளே களையும் நிலை உருவானால் பேராபத்து!

### பதவிவிலகும் கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்து

கொழும்பு,ஏப்.2

துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசு மறுத்து அவற்றைப் புலிகளே களைகின்ற நிலைமை உருவாகுமானால் அது பேராபத்தை உண்டுபண்ணும்.

பதவி விலகிச் செல்லும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மேற்கண்டவாறு எச்சரித்திருக்கின்றார்.

கண்காணிப்புக் குழுவின், தலைவரான ஹொக்லண்டின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்ததுடன் புதிய தலைவர் அப்பதவிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

பதவிவிலகிய ஹொக்லண்ட் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையில் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை கடற்பிரதேசத்தில் கடற்படையினரின் நடமாட்டத்தைத் தடுக்கும் வகையிலான விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் கவலை அளிக்கின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர், ஒட்டுப்படைகள் இணைந்து மூன்று தாக்குதல்கள்!

### மட்டக்களப்பில் போராளி ஒருவர் காயம்

மட்டக்களப்பு,ஏப்.2

கிழக்கில் மட்டக்களப்பில் மூன்று இடங்களில் தாக்குதல்கள் நடத்தப் பட்டிருக்கின்றன. இவற்றில் போராளி ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார்.

வாகரை, சம்பூர், நோர்வேத் தீவு ஆகிய பகுதிகளிலேயே இராணுவத்தினரும் துணைப் படையினரும் இணைந்து இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. வாகரையில் புலிகள் மீது இராணுவத்தினர் நேற்று சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் போராளி ஒருவர் காயமடைந்துள்ளார்.

வாகரை பனிச்சங்கேணிக்கும் மருதங்கேணிக்கும் இடைப்பட்ட பகுதியில் காலை 8.30 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் பதவியேற்பு



கொழும்பு, ஏப்.2

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவரான சுவீடன் நாட்டைச் சேர்ந்த பிரிகேடியர் யு.எல்.எவ். ஹென்ரிக்சன் நேற்றுத் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக இதுவரை காலமும் பணியாற்றிய ஹக்ரப் ஹொக்லண்டின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

2002ஆம் ஆண்டு போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபின்னர் அதனைக் கண்காணிப்பதற்காக ஸ்கன்டிநேவியன் நாடுகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டது.

நோர்வே நாட்டவரான ஹக்ரப் ஹொக்லண்ட் இதுவரை நான்கு வருடகாலம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பணியாற்றி உள்ளார். பதவிக்காலத்தை நேற்றுடன் நிறைவு செய்துகொண்ட இவர் எதிர்வரும் 7ஆம் திகதி இங்கிருந்து நோர்வே திரும்புகிறார். (ஐ-14-12)



நேற்றுக்காலை பளை மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கான ஒன்றுகூடலிலும் மற்றும் அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வின்போதும் எடுக்கப்பட்ட படங்கள் இவை. தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றுகிறார். நிகழ்வில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களையும் எம்.பிக்களான மாவை. சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன், கி.சிவநேசன் மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரையும் அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. மலர்மாலை அணிவிப்பதையும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பளையிலிருந்து பிரதீபன்)

# தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் நேற்று பளையில் ஒன்றுகூடினர்

## எம்.பிக்களோடு இணைந்து அன்னை பூபதிக்கும் அஞ்சலி

பளை,ஏப்.2

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்கான ஒன்று கூடலும் தியாக தீபம் அன்னை பூபதி நினைவு தின வைபவமும் நேற்றுக்காலை பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

முதல் வைபவமாக தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன.

. தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றினார்.

பொதுச் சுடரினை நெடுந்தீவு பிரதேச எழுச்சிப் பேரவையின் செயலாளர் சு.கணேசலிங்கம், அதிபர் குணசீலன் ஆகியோரும் -

அன்னையின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோரும் ஏற்றினர்.

அன்னையின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், கி.சிவநேசன், செ.கஜேந்திரன் ஆகியோர் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான ஒன்றுகூடல் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் பின்னர் ஆரம்பமாகியது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மாவை சேனாதிராசா, கி.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் ஆகியோர் உரையாற்றினர்.

தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பாக தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்வது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (ஐ-7)

## இனப்பிரச்சினைக்கு இந்த ஆண்டு தீர்வு

இலங்கை இனப்பிரச்சினைக்கு எப்படியாவது இந்த ஆண்டுக்குள் தீர்வு ஏற்பட்டு விடும்.

இப்படி ஆருடம் தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் பிரபல ஜோதிடரான எஸ். கோவிந்து.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகள் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். அனைத்துத்துறைகளிலும் சிறிலங்கா பாரிய வெற்றியடையும்.

நாட்டு மக்கள் அனைவரும் ஒரு நாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை உண்ணாவிரதம் இருந்தால் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண உதவியாக இருக்கும்.

இப்படி அவர் கூறியுள்ளார். (ஐ)(30)

# சாதாரணதரப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியாகும்

## தேர்தல் பணிகளால் தாமதம் என்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.2

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையின் முடிவுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டதாலேயே பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதென பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

அடுத்த வார இறுதியில் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலேயே பரீட்சை முடிவுகள் முதலில் வெளியிடப்படும் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

சாதாரண தரப்பரீட்சைமுடிவுகள் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ஐ-12-14) (22)

# அச்சுவேலி தெற்குப் பகுதியில் வீட்டில் ஜன்னல் பிரித்து பணம், நகை சூறை!

அச்சுவேலி,ஏப்.2

அச்சுவேலி தெற்கு மாவடி பகுதியில் உள்ள ஒரு வீட்டினுள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புகுந்த திருடர்கள் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் 60 தங்கப் பவுண் நகைகள் என்பனவற்றை அபகரித்திருக்கின்றனர்.

மாவடி வீதியில் உள்ள இந்த வீட்டில் ஏழு பேர் உறக்கத்தில் இருந்த சமயம் திருடர்கள் ஜன்னல் கம்பியைப் பிரித்து உள்ளே நுழைந்திருக்கின்றனர்.

உள்ளே சூட்கேஸ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபா பணம் 60 பவுண் தங்கநகைகள் என்பனவற்றை திருடர்கள் தேடி அபகரித்துள்ளனர்.

திருட்டு இடம்பெற்ற வீட்டில் மூன்று வளர்ப்பு நாய்கள் உள்ளன. ஆனால் அவை அச்சமயம் குரைக்கவில்லை என்று வீட்டுக்காரர் கூறியுள்ளனர்.

இத்திருட்டுத் தொடர்பாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-11)(22)

# துணைப்படையின் ஒரு பிரிவு பயிற்சி முடித்து வெளியேற்றம்

## முழங்காவிலில் நேற்று மாலை வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

முழங்காவிலில் உள்ள மேஜர் ஜெயானந்தன் பயிற்சிப் பாசறையில் பயிற்சியை நிறைவுசெய்த துணைப்படை வீரர்களில் ஒரு பகுதியினர் நேற்று வெளியேறியுள்ளனர்.

பயிற்சி முடித்தவர்களின் நிறைவு வைபவம் முழங்காவில் மாவீரர் கலையரங்கத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

முழங்காவில் பிரதேச பாடசாலை ஆசிரியர் எஸ்.குவேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தேசியச் சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதிகளில் ஒருவரான கேணல் மகேந்தி அம்மான் ஏற்றினார்.

மேஜர் ஜெயானந்தனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை அரவரது துணைவியார் அணிவித்தார்.

சிறப்புரையை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து பயிற்சியை நிறைவுசெய்த 250 துணைப்படை வீரர்கள் வெளியேறினர்.

நிகழ்வில் போராளிகள், காவல்துறை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-14-415)(30)

# 'சாம்ரெக்' பணியாளருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ்ப்பாணத்தில் இயங்கிய 'சாம்ரெக்' (SAAMSTECH) நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்களில் இதுவரை டிசெம்பர், ஜனவரி, மாதங்களுக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பளை மாணவர் பேரவை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிவித்திருக்கின்றது. (ஐ)

# விபத்தில் காளைமாடு பலி!

நீர்வேலி மாசிவன் சந்திக்குச் சமீபமாக கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் காளை மாடு ஒன்று பலியாகியது.

மாட்டின் சொந்தக்காரர் மாட்டை அவிழ்த்து வீட்டிற்கு கொண்டுவரும் வேளையில் வீதியில் வந்த லொறியின் வெளிச்சம் மற்றும் சத்தம் காரணமாக மாடு மிரண்டு ஓடியபோது லொறியினுள் நசியுண்டு உயிரிழந்தது என்று கூறப்பட்டது. (ஐ-72)(22)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## பயணப் பாதுகாப்பு உத்தரவாதம் கோருவதன் பின்னணியில்...!

அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகளில் பங்குபற்றுவதாயின், அதற்காகக் கொழும்பு ஊடாக ஜெனீவாவுக்குச் செல்லும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவின் பயணப் பாதுகாப்புக்கு இலங்கை அரசும் இலங்கை ஜனாதிபதியும் நோர்வே அனுசரணைத் தரப்பும் உத்தரவாதம் வழங்கவேண்டும் என்று புலிகள் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுகள் எவ்வளவு இறுக்கமானவையாக - நெருக்கடி மிகுந்தவையாக - பகையுறவும் விரோத மனப்பாங்கும் விஞ்சி நிற்பவையாக - அமையப் போகின்றன என்பதற்குக் கட்டியம் கூறும் அங்கமாகவே புலிகளின் இந்த வற்புறுத்தலைக் கருதவேண்டியுள்ளது.

தற்போதைய அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களாகிவிட்டன. இந்தக் கால எல்லைக்குள் தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி, ஜப்பான், சுவிஸர்லாந்து என்று ஏழு சுற்றுப் பேச்சுகள் நடந்துமுடிந்துவிட்டன.

முதல்சுற்றுப் பேச்சுக்கு முன்னர் கடல் விமானம் மூலம் வன்னிக்கு வந்து திரும்பினார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம். அந்த முதல் சுற்றில் பங்குபற்றிய புலிகளின் பிரதிநிதிகள் குழு வெளிநாட்டிலிருந்தே அந்தப் பேச்சு நடைபெற்ற தாய்லாந்துக்கு வந்து திரும்பியது.

ஆனால், அதற்குப் பிறகு கடந்த பெப்ரவரி மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகள் வரை - அடுத்த ஆறு சுற்றுகளுக்கும் - வன்னியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் நேரடி வழிகாட்டுதல்கள், ஆலோசனைகள், ஆணையோடு வந்து அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் பிரதிநிதிகள் குழு பேச்சில் பங்குபற்றிச் சென்றுள்ளது. இக்குழு ஒவ்வொரு தடவையும் கொழும்பு கட்டுநாயக்கா விமானத்தளம் ஊடாகவே பேச்சு நடைபெற்ற வெளிநாட்டு மையங்களுக்கும் வந்து திரும்பியிருக்கிறது. ஆனால், முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் இப்போது கேட்பது போன்ற பயணப் பாதுகாப்பு உத்தரவாதத்தைப் புலிகளின் தரப்பு அழுத்தமாக - வற்புறுத்தலாக - கோரி நிற்கவில்லை.

கடந்த தடவை ஜெனீவாப் பேச்சுக்குப் புலிகள் புறப்பட்ட சமயம், புதிய ஜனாதிபதி மஹிந்தவின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பகையுணர்வும் பதற்றமும் உச்சத்தில் இருந்தன. எப்போதும் கொடும்போர் வெடிக்கலாம் என்ற அச்சம் நீடித்த காலகட்டம் அது. அப்போதுகூட தாங்கள் வற்புறுத்தாத பயணப் பாதுகாப்பை இப்போது புலிகள் வலியுறுத்துகின்றார்கள் என்றால் அதில் அர்த்தம் அதிகம் இருக்கவேண்டும்.

அப்படிப் புலிகள் வற்புறுத்துவதன் பின்னால் உள்ள அர்த்த பரிமாணங்களை அரசுத் தரப்பு புரிந்துகொண்டுள்ளதா என்பதும் கேள்விக்குறியே.

அடுத்த தடவை அமைதிப் பேச்சுக்குப் பங்குபற்றச் செல்லும் புலிகளின் உயர்மட்டப் பேச்சுக்குழுப் பிரதிநிதிகளுக்கு அதற்கான பயணத்தின்போது உயிர்த் தீங்கு செய்ய சில சக்திகள் திட்டமிட்டிருக்கலாம். அது பற்றிய புலனாய்வுத் தகவல்கள் வழமையாகவே உளவு வேலைகளில் நிபுணத்துவம் பெற்ற புலிகளுக்குக் கிடைத்திருக்கும். அதனால்தான் இம்முறை புலிகள் இப்படிப் பயணப் பாதுகாப்பு உத்தரவாதம் கோருகின்றார்கள் என்று சிலர் கருதுகின்றனர். ஆனாலும், இதற்கு அப்பாலும் விவகாரங்கள் உள்ளன என்று சிந்திக்க இடமுண்டு.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை - தமிழர் தரப்பைப் பொறுத்தவரை - இந்தப் பேச்சுகளில் அவர்கள் நம்பிக்கை இழந்து நீண்டகாலமாகி விட்டது. அமைதிப் பேச்சு என்ற பெயரில் ஆரவாரமாகக் கூடிப்பேசுவதும் முடிவுகளை எடுத்து அறிவிப்பதுமாகக் காலம் கழிகின்றதே தவிர, எட்டப்பட்ட முடிவுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவனவாக இல்லை. ஏமாற்று நாடகமே தொடர்ந்து அரங்கேறுகின்றது. கடந்த சுற்றுப் பேச்சில் எட்டப்பட்ட அடிப்படை விடயங்கள் கூட அமுல்படுத்தப்படவில்லை. தமிழர்களை மட்டுமல்லாமல், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி காதில் பூச்சுற்றி, காலத்தை இழுத்தடிக்கும் தனது காலாதிகாலப் போக்கை சிங்களம் தொடர்கிறது. அதைக் கைவிடுவதாக இல்லை. இத்தகைய சிங்களத் தரப்போடு இனிமேலும் சமரசப் பேச்சு- சமாதான முயற்சி - அமைதி எத்தனங்கள் - என்று நேரத்தை விரயம் செய்வது வெறும் வீண்வேலை என்ற நிலைப்பாட்டுக்கு புலிகளும் தமிழர் தரப்பினரும் வந்துவிட்டனர்.

எனவே, கடந்த சுற்றுப் பேச்சில் வழங்கிய உறுதிமொழியை - துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றின் வன்முறைக்கு முடிவு கட்டப்படும் என்ற வாக்குறுதியை - சொல்லிலும் செயலிலும் முற்றாக நடைமுறைப்படுத்திக் காட்ட சிங்கள அரசுத் தரப்பு தவறுமானால் இனிமேல் அமைதிப் பேச்சு என்று இழுபடுவதில்லை என்ற தீர்க்கமான முடிவுக்குப் புலிகளின் தலைமை வந்துவிட்டது. புலிகளின் மதியுரைஞர் மற்றும் அரசியல் பொறுப்பாளர் அண்மையில் வெளியிட்டுவரும் கருத்துக்கள் இதனைத்தான் ஊர்ஜிதம் செய்கின்றன.

எனவே, எதிர்வரும் 19, 20, 21ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறப்போவது பெரும்பாலும் கடைசிச் சுற்றுப்பேச்சாக அமையப் போகின்றது என்பதுதான் விடயமறிந்தவர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. சில சமயங்களில் இந்த மூன்று நாள் பேச்சை புலிகள் இடைவழியில் முறித்துக்கொண்டு பேச்சிலிருந்து வெளியேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அத்தகைய ஆயத்தத்துடன்தான் புலிகளின் அணி ஜெனீவா புறப்படுகின்றது என்பதை மறுப்பதற்கும் இல்லை.

தனது இராணுவப் புலனாய்வுத்துறையின் நடவடிக்கைகள் மூலம் தமிழர்களின் போரியல் சக்தியான விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வைக்கும் நரித் தந்திரத் திட்டங்களை இந்த அமைதி முயற்சிக் காலத்திலும் குயுக்தியோடு செயற்படுத்திவரும் அரசுத் தரப்புக்கு இதுதான் கடைசிப் பேச்சு என்ற மெய்மைநிலை புரியுமானால் -

அல்லது அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சை, அதில் தொடர்ந்து பங்குபற்றுவது அர்த்தமற்றது என்று கருதிப் புலிகள் இடைவழியில் முறித்துக் கொண்டு வன்னி திரும்பத் தீர்மானித்தால் -

இனிப் பேச்சில்லை, யுத்தம்தான் என்ற உறுதியான நிலைமை இவற்றின் வாயிலாக ஏற்படுமானால் -

அதன் பின்னர் இப்படி புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் - அரசியல் பொறுப்பாளர், காவல்துறைப் பொறுப்பாளர், தளபதி என்று மேனிலைப் போராளிகள் - தங்கள் கைகளில் ஒன்றாகச் சிக்கமாட்டார்கள் என்று கருதி அவர்களின் உயிருக்கு உலை வைக்கும் வேலையை அரசின் ஐந்தாம் படை ஆரம்பிக்கும் என நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

இத்தகைய எதிர்வு கூறல்களை - எதிர்பார்ப்புகளை - கருத்தில் கொண்டுதான் இந்தப் பயணப்பாதுகாப்பு உத்தரவாதத்தைப் புலிகள் கோரியிருப்பர் என்று கருத இடமுண்டு.

உண்மையோடும் நேர்மைத் திறத்தோடும் மனச் சுத்தியோடும் அமைதி முயற்சிகளை அரசுத் தரப்பு அணுகாவிட்டால், இனப்பிரச்சினைக்குச் சமாதான வழிகளில் தீர்வுகாணும் வாய்ப்பு ஒரேயடியாக அடிபட்டுப் போய்விடும். அந்த அந்தத்திற்கு - எல்லைக்கு - நிலைமை சென்றுவிட்டது என்பதையே பயணப் பாதுகாப்புக் குறித்து புலிகள் விடுத்துள்ள வற்புறுத்தல் எடுத்துக் காட்டுகின்றது.

தென்னிலங்கையின் உள்ளூர் அரசியலில் சிக்கி - பௌத்த, சிங்களப் பேரினவாதப் பிரசாரத்துக்குள் அழுந்தி - பொருளாதார அந்தகாரத்துக்குள் மூழ்கி - அவலத்தில் அல்லாடும் தென்னிலங்கை அரசியல் முறைமைக்கு இந்த நிலைமையின் ஆழம் - அவசரம் - புரியுமோ என்னவோ?

## தீவுப்பகுதிப் போக்குவரத்துக்கென அராலித்துறை ஊடாகப் புதிய பாலம்

### ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் தகவல்

ஊர்காவற்றுறை,ஏப்.2

தீவுப்பகுதிக்கு, அராலித்துறை ஊடாகப் பாலம் ஒன்றை நிறுவுவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பண்ணைப்பாலம் ஊடான போக்குவரத்துக்கு மாற்றீடாகவும், தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கத்துடனும் இதுகுறித்த முன்னேற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

மேற்படி பாலம் நிறுவுவது குறித்த ஆலோசனைகளை வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் முதுநிலைப் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் மற்றும் துறைசார் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தீவகப் பிரதேச செயலர்கள், தீவக நலன் விரும்பிகள் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதுதொடர்பாக அனுமதியும் ஆலோசனையும் வழங்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபரிடமும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அராலித்துறை ஊடான பாலம் அமைப்பது தொடர்பாக, துறைசார்ந்தோரின் ஆலோசனைகள் கிடைத்ததும், அது தொடர்பான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

மேற்படி பாலம் நிறுவப்பட்டதும், தீவக மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்படுவதுடன், தீவுப்பகுதிகளுக்கு யாழ். நகரிலிருந்து அபிவிருத்திசார் பொருள்களைக் கொண்டு செல்வதும் துரிதப்படுத்தப்படும்.

தீவுப்பகுதியின் வளர்ச்சிகருதி முன்னெடுக்கப்படும் இந்த முயற்சிக்கு சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் - என்று உதவி அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(எ-16)(33)

## நாச்சிமார் கோயிலில் நாளை மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலய ஜீர்ணோத்தாரண நவகுண்ட பசஷசுவர்ண பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (எ)(33)

## அறநெறிப் பாடசாலையில் நிறைவு விழா இன்று

கொழும்பு,ஏப்.2

கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தில் இயங்கும் அறநெறிப் பாடசாலையின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

ஆலயத்தின் அறங்காவலர் தெ.ஈஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பொன்னம்பலவானேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் டி.எம். சுவாமிநாதன் கலந்துகொள்வார்.

ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ எஸ். செல்வநாதக்குருக்களின் ஆசியுரை, அறங்காவலர் பொன். பாலசுந்தரத்தின் தொடக்கவுரை, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் உரை மற்றும் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (3)(18)

## தொழில்துறைத் தொழிலாளர் விவரம் பொறியியற் செயலகம் திரட்டுகின்றது

கிளிநொச்சி,ஏப்.2

தமிழீழ கட்டுமானப் பொறியியற் செயலகம் வன்னியில் தொழிற்றுறைத் தொழிலாளர்களின் விவரங்களைப் பதிவுசெய்து வருகின்றது.

ஏற்கனவே, பிரதேச ரீதியாக ஒருங்கமைக்கப்பட்ட மனிதவள செயலகங்கள், கிளிநொச்சி, விசுவமடு புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் தொழிற்றுறைத் தொழிலாளர்களின் தொழிற்தகைமையை உறுதிசெய்யும் வகையில் தொழிற்பதிவுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

எனவே, இதுவரை பதிவுசெய்யத் தவறிய தொழிலாளர்கள் குறித்த பிரதேசங்களில் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் பதிவுகளை செய்துகொள்ளவேண்டும் என்று பொறியியல் செயலகம் கேட்டுள்ளது.

ஏனைய மாவட்ட தொழிலாளர்களைப் பதிவுசெய்யும் செயற்பாடுகள் எதிர்வரும் புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் - செயலகம் அறிவித்துள்ளது.

(எ-352-202)(26)

## 'வெளிச்சம்' இதழ் வெளிவந்துள்ளது

கிளிநொச்சி,ஏப்.2

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சஞ்சிகையின் தொண்ணூற்றி நான்காவது (தை- மாசி, 2006) இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, தி.திருக்குமரன், சத்தியமலரவன், த.ஜெயசீலன், சோ.பத்மநாதன், தாமரை, வளநாடன் ஆகிய கவிஞர்களது கவிதைகளும் -

ஆசி.கந்தராசா, ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோரது சிறுகதைகளும் -

தூயவன், அமரதாஸ், தமிழவள், மகாநுபவன் ஆகியோரது கட்டுரைகளும் -

சு.மகேந்திரன், வின்சென்ற் புளோறன்ஸ் ஆகியோரது மொழிபெயர்ப்புகளும் தூது, அஞ்சலி, புதியவரவு இன்னும் பலவும் இடம்பெற்றுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ) (24)

## ஆறுமுகநாவலர் எழுதிய 'பாலபாடம்' சைவ பரிபாலனசபையால் மீள்பதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ். சைவபரிபாலன சபையினர் இரண்டு நூல்களை மீள்பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளனர்.

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய 'பாலபாடம்' - முதற் புத்தகம், அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய 'மஹோற்சவ விளக்கம்' ஆகிய இரண்டு நூல்களே இவ்வாறு மீள்பதிப்புச் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

முன்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் சமய நம்பிக்கை, சமய அறிவு, தமிழ் அறிவு வளர்க்கப் படவேண்டும். இதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 'பாலபாடல்' - முதற் புத்தகம் பெரும் உதவியாக இருக்கும்.

அதேபோல், இந்து ஆலயங்களில் வருடாந்தம் ஒழுங்குசெய்யப்படும் திருவிழாக்கள் எவ்வாறு நடத்தப்படல் வேண்டும், திருவிழாக்களினால் கிடைக்கும் பலா பலன்கள் எவை என்பது பற்றி சிவஸ்ரீகுமாரசுவாமிக்குருக்கள் எழுதிய 'மஹோற்சவம் விளக்கம்' என்னும் நூல் விரிவாக விளக்கிக் கூறுகின்றது. இந்த இரண்டு நூல்களும் இன்றைய காலகட்டத்தில் அவசியம் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு மேற்படி இரண்டு நூல்களையும் மீள்பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளோம் - என்று சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் கலாநிதி வ.கந்தசாமி தெரிவித்தார். (எ)(32)

## காரைநகரில் மூன்று கட்டடங்களுக்கு திங்களன்று அடிக்கல் நடும் வைபவம்

காரைநகர்,ஏப்.2

காரைநகரில் நாளை திங்கட்கிழமை மூன்று இடங்களில் வெவ்வேறு கட்டடங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

காரைநகர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம், காரைநகர் சமுர்த்தி வங்கிக்கான கட்டடம், ஈழத்துச் சிதம்பரத்தில் புதிய தேர்முட்டி நிறுவுதல் ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகளே நாளை சிறப்புற நடைபெறவுள்ளன.

காரைநகர் பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கம் ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு காரைநகர் வலந்தலைச் சந்தியில் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறும். ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் இந்த நிகழ்வுகளுக்கு தலைமை வகிப்பார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வடக்கு - கிழக்கு பெருந்தோட்டப் பிரதிப் பணிப்பாளர் எம். நடேசராசா, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (சுனாமி) பா.செந்தில்நந்தனன் -

காரைநகரின் முதலாவது உதவி அரசாங்க அதிபரும் வீடமைப்புப் புனர்நிர்மாணத்திட்ட யாழ். மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளருமான வே.சாம்பசிவம், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார், கட்டடத் திணைக்கள (மாகாணம்) பிரதம பொறியியலாளர் எஸ்.குகநேசன், கட்டடத் திணைக்களம் (மத்திய) பிரதம பொறியியலாளர் செல்வி கே.வசந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். ஆசியுரையைத் தத்துவக் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்கள் நிகழ்த்துவார்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் புதிய தேர்முட்டி அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தேர்முட்டிக்கான அடிக்கல்லை நட்டுவைப்பார். (எ-73)(32)

### நாளை

பங்குனி 20
திங்கட்கிழமை
03.04.2006
திதி : பஞ்சமி
முற்பகல் 09.19
நட்சத்திரம் : ரோகிணி
பிற்பகல் : 04.35
சுபநேரம் : 12.10 - 01.40
ராகுகாலம் : 07.40 - 09.10
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உள்ளத்தால் உன்னைக் குழி பறிக்கத் திட்டமிடுபவர் உனக்கு முன் கண்ணீர் சிந்துவர்.

*- சாலமோனின் நீதிமொழி.*

## பெயர் மாற்றம்

கைதடி நாவற்குழி தெற்கைச் சேர்ந்த *மகேந்திரம் சடகோபன்* ஆகிய நான் எனது பெயரை 28.08.2006 தொடக்கம் *மகேந்திரம் சஞ்ஜீபன்* என சட்டவரம்பிற்கு அமைய மாற்றி அமைத்துள்ளேன் என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

மகேந்திரம் சஞ்ஜீபன்.

*கைதடி,*
*நாவற்குழி தெற்கு.*

(48870)(27.26.11.17)


## திருக்குறள் மனனப்போட்டியில் 3ஆயிரம் மாணவர்கள் பங்கேற்பு

தென்மராட்சி,ஏப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டிகளில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களிடையே நடத்தப்பட்டஇந்தப் போட்டிகளில் 2 ஆயிரம் மாணவர்கள் தேர்ச்சிபெற்றனர்.

போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் அதிகூடிய அளவில் திருக்குறள் மனனம் செய்த 500 மாணவர்கள் வலயமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் - வலயமட்டப் போட்டிகள் எதிர்வரும் எட்டாம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும் என்றும் - வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எ.ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

வலய மட்டப் போட்டிகளில் 150 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு சிறப்புத் தேர்ச்சி சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)(24)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்தும் அழைப்பும்

**03.04.2006**

**திரு.திருமதி தெ.சிவராஜ்** தம்பதியரின்

**செல்வப் புதல்வி ராகினி**

தனது முதலாவது பிறந்தநாளை நாளை (*03.04.2006*) திங்கட்கிழமை திருநெல்வேலியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்பம்மா, அம்மையா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார்கள், சித்தி, மாமாமார்கள், மாமிமார்கள், அக்கா, அண்ணாமார்கள், மச்சாள்மார்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் காமாட்சி அம்பாள் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.




**அப்பா தெ.சிவராஜ்**
(திருநெல்வேலி).
'சிகரம்'
அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(48868) (24.11.17.26)



## வைத்திய நிலையம் இடம் மாற்றம்

**முன்பு கோப்பாய் சந்தியில் நடைபெற்றுவந்த *சிவன் கோயிலடி முறிவு நெரிவு வைத்தியசாலை* தற்பொழுது கொக்குவில் மேற்கு, நீதிராசா வீதி, ஐயனார் கோயிலுக்கும் ஞானபண்டிதா பாடசாலைக்கும் இடையில் கடந்த 31 ஆம் திகதிமுதல் இயங்குகின்றது. பார்வையிடும் நாள்கள், நேரம் வெள்ளி பிற்பகல் 4 மணிமுதல் இரவு 7 மணிவரை. சனி, ஞாயிறு காலை 9 மணிமுதல் இரவு 7 மணிவரை முன் கூட்டியே பதிவுசெய்யவும்.**

(48670) (25.26.11.17)

தொடர்புகளுக்கு: 0777 727798 **Dr.T.சோமசுந்தரம் விஜயன்.**



## வெளிநாட்டில் உயர்கல்வி

Your **VISA** to the World

Basic Qualification G.C.E. (O/L)

**STUDY IN LONDON**
CANADA, MALAYSIA, SINGAPORE CYPRUS & INDIA

ஒரு வருட மலேசியா Midas College இன் டிப்ளோமாவின் பின் London இல் பட்டப்படிப்பு

**Available Courses**

| | |
|---|---|
| *Management* | *Hotel Management* |
| *Business Ad. (BBA, MBA, Phds)* | *Travel & Tourism* |
| *Marketing* | *Engineering (Aerospace, Electrical & Electronical etc..)* |
| *HRM* | *Medicine* |
| *Law* | *Dental* |
| *Computer Science* | *Fine Arts* |
| *IT Networking.* | *Beauty Culture* |
| *Pattern Designing & Textile* | *Shipping Courses.* |
| *Nursing etc.* | |

All Courses are available in any field

- பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
- 15 % விலைக்கழிவுடன் விமானச்சீட்டு, பகுதிநேர வேலைவாய்ப்பு இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்.
- 1000 £ Scholarship for UK University

**COLLEGEVIEW International**
*(Professional Overseas Educational Consultants & Promoters)*
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk


## சதுரங்க சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.2

மெற்றோ பொலிற்றன் ஒப்பிஸ் மற்றும் நவகலா நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழ் செய்தி தகவல் மையம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் திறந்த சதுரங்கச் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமானது.

இந்தச் சுற்றுப் போட்டி யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் என்றும்-

விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் நேரில் வந்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து போட்டியில் பங்குபற்றலாம் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(3)(26)


## Vacancy - Immediate

COMITE INTERNATIONAL GENEVE

## Storekeeper - Purchaser

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a highly competent professional for the role of a Storekeper Purchaser in its Logistics Department.

The canditate should have the following **qualifications:**

- Minimum G.C.E. Ordinary level.
- 3 years experience in a similar capacity.
- Ability to handle Microsoft Office.
- Good communication skills, Fluent in English & Tamil knowledge of Sinhala will be an asset.
- Good Analytical skills.
- Responsible and adaptable.

**Core responsibilities** include:

- Reception and inspection of incoming goods and distribution.
- Ability to handle Delivery forms, packing lists Bin cards.
- Maintain a systematic inventory.
- Assist the Logistic Assistant in discharge of his duties such as purchasing, process purchasing orders, maintaining purchase register and up dating of item prices.

**Employment Conditions:**

According to ICRC's National scale and employment conditions.

Suitable candidates are invited to submit their complete CVs (inci, photocopy of valid driving licence) to ICRC's office in Kilinochchi until **Friday, 14th of April 2006.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS,**
**Subdelegation Kilinochchi,**
**Iranaimadhu Junction, Kilinochchi.**
**Phone: 071 237 5697 / 071 270 2403 / 071 270 6118.**

(C/48656)(32)



## FORUT

*Campaign for Development & Solidarity*

**AN ORGANISATION PROMOTING AL COHOL, DRUG, AND SMOKE FREE ENVIRONMENT**

**VACANCY Announcement: 1. Project Accountant (One Position)**
**2. Driver (One Position)**

**FORUT, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications for the above positions from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods the candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness and must adhere to FORUT's principles and guidelines.**

***Position: Project Accountant***

***Minimum Requirements***

- Chartered / CIMA ($2^{nd}$ stage completed) with minimum of five years experience in Accounting.
- Degree in Accountancy / HNDA with minimum of seven years experience.
- Familiar with accounting packages.
- Excellent proven command of English and Tamil, preferably some knowledge of sinhala.
- Excellent proven computer skills especially in spread sheet and data base management.
- Age-Not less than 28 years.

***Tasks/duties***

- Be in charge of the accounting section of the organisation - FORUT Vanni.
- Be responsible for the financial management to the organisation - FORUT Vanni.
- Monitoring of financial transaction of the organisation, following established financial system/practices require ments.
- Exercise finance / budget control and operating budget.
- Responsible for the preparation and rendition of accounting statements documents monthly/quarterly/ annually.
- Be co responsible for the preparation of program budget, costing together with program staff for project under different funding.
- Be responsible for the effective fun ctioning of internal auditing system.

**Position: Driver**

**Minimum Requirements**

- Minimum educational qualification of G.C.E(O/L).
- Should possess a valid driving licence to drive all cars, dual purpose vehicles,motor bikes and light motor lorries.
- Should have minimum of five (5) years of driving experience, preferably with International /National NGO's.
- Should have basic knowledge of vehicle maintenance and repairs.
- Should have thorough knowledge of Sri Lanka's roads, and of the Vanni in particular.
- Fluency in Tamil as well as basic English skills is required.
- Knowledge of Sinhala is an advantage.
- Age - Not less than 23 years.

***Tasks / duties***

- Driving staff / goods within and outside the Vanni.
- Responsibility for proper maintenan -ce of vehicles.
- Some work on holidays and tensed emergency situations is expected.

**Females are encouraged to apply.** Duration of contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. **Only short listed candidates will be called for interview.** Completed applications should be forwarded to reach **Programme Manager, FORUT Vanni, 155th Mile post, Jaffna - Kandy Road, Kilinochchi** on or before **15th of April 2006.**

**E-Mail :-** are.erikson@forut.lk

(C/48654)(26)

**ஜெனீவா இணக்கப்பாடு**

# அரசின் அசமந்தப் போக்கை உலகுக்கு எடுத்துவிளக்கும் களமாகும் 2ஆம் கட்டப் பேச்சு

ஸ்ரீலங்கா அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 2ஆம் கட்டப் பேச்சுகள் இன்னும் 17 நாள்களில் ஜெனீவாவில் நடைபெறப்போகின்றன.

பெப்ரவரி மாதம் 22ஆம், 23ஆம் திகதி இடம்பெற்ற முதலாம் கட்டப் பேச்சுகளில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் -

நடக்கப்போகும் 2ஆம் கட்டப் பேச்சுகள், தமிழர் தரப்பை சிங்களத்தரப்பு எவ்வளவு தூரம் கடந்த காலங்களில் ஏமாற்றி வந்துள்ளது என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துவிளக்கும் களமாக அமையப்போகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவது போன்ற விடயங்களில் முதலாம் கட்டப் பேச்சில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

அந்தப் பேச்சுகள் நடந்து 40 நாள்கள் கடந்தபோதும் இணக்கம் காணப்பட்ட எந்த விடயமும் நடைமுறைக்கு வரவில்லை. இதனால், தமிழர் தரப்பு ஏமாற்றம் அடைந்துள்ளது - அரசு மீது நம்பிக்கையை இழந்துள்ளது.

### தமிழர் தரப்பின் அவநம்பிக்கை

இந்நிலையில் தமிழர் தரப்பு தனது அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் களமாக 2ஆம் கட்டப் பேச்சு மேசையைப் பயன்படுத்தப் போகின்றது. இதன்மூலம் அரசின் முகத்திரை சர்வதேச மட்டத்தில் கிழியப்போகின்றது.

தமிழர் தரப்பின் அடுத்தகட்ட நகர்வுக்கு கால்கோள் இடும் மேடையாகவும் 2ஆம் கட்டப் பேச்சு மேசை அமையப் போகிறது. தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயப்பாட்டை மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்துக்கு எடுத்து விளக்கும் வாய்ப்பாக இந்தப் பேச்சைதமிழர்தரப்பு கையாளப்போகின்றது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நீர்வேலியில் நாட்டுப்பற்றாளர் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கொந்தளித்து எழுந்த மக்கள், படையினருக்கு எதிரான செயற்பாடுகளைத் தீவிரமாக்கினர். மக்கள்படை, பொங்கியெழும் மக்கள்படை என்ற பெயரில் வடக்கு - கிழக்கில் படையினரை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் படைத்தரப்பு பலத்த இழப்பை எதிர்நோக்கி நின்றது. பொதுமக்களும் இத்தாக்குதல்களில் சிக்கிப் பாதிக்கப்பட்டனர்.

டிசெம்பர், ஜனவரியில் தொடர்ந்த இந்தக் கொந்தளிப்பு நிலை, ஜனவரி 23ஆம் திகதி நோர்வேயின் தலையீட்டால் நிறுத்தப்பட்டது.

### பிரபா - சொல்ஹெய்ம் சந்திப்பு

வன்னி வந்த நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும், அந்நாட்டு அமைச்சருமான எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேசினார். அதன் பயனாக ஜெனீவாவில் இரு தரப்புகளும் நேரில் பேசவும், வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரவும் இணக்கம் ஏற்பட்டது.

அங்கு கண்ட இணக்கப்படி, பொதுமக்களின் கொந்தளிப்பு

## பேரினவாதிகளுக்குக் கிட்டிய தோல்வி அவர்களின் சிந்தனையை மாற்றுமா?

நிலை, படையினரின் தாக்குதல்கள் முடிவுக்கு வந்தன.

### படையினரின் நெருக்குவாரங்கள்

படையினரின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டபோதும், பொது மக்கள் மீதான அவர்களின் நெருக்குவாரங்கள், தேடுதல்கள், இரவுநேரச் சோதனைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. அவர்களின் பிரசன்னமும் தினமும் வீதிகளில் இடம்பெறுகின்றன.

எரிக்சொல்ஹெய்ம் - பிரபா பேச்சுடன் தமிழர் தரப்பு அமைதி காத்து வரும் நேரத்தில் அரசின் - படைகளின் - மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

ஜெனீவாவில் நடந்த பேச்சுகளில் எட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் களத்தில் மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை.

### ஒட்டுக்குழுக்களின் செயற்பாடு அதிகரிப்பு

அதற்கு மாறாக, படைகளின் அரசுத் தலைமையின் ஆசியுடன் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் தாயகப்பகுதியில் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றே கூறவேண்டும்.

மட்டக்களப்பில், வவுனியாவில், திருகோணமலையில், யாழ்ப்பாணத்தில் என மாறிமாறி கொலைகள், ஆள்கடத்தல்கள், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்கள் மீது தாக்குதல்கள் என்று படைத்தரப்பின்-ஒட்டுக்குழுக்களின் - செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தொடரும் சம்பவங்கள் இதனை மெய்ப்பித்து நிற்கின்றன.

ஜெனீவா இணக்கப்பாட்டின் பிரகாரம் ஒட்டுக்குழுக்கள் தொடர்பாக அரசுத்தலைமை எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றுதான் கருதவேண்டியுள்ளது.

மட்டக்களப்பில் மக்களை ஒன்றுதிரட்டி, படையினரின் பாதுகாப்புடன் ஒட்டுக்குழுக்கள் கூட்டம் நடத்திய செயற்பாடு இதற்கு நல்ல உதாரணமாகும். பகிரங்கமாக ஒட்டுக்குழுக்கள் மக்களைக் கூட்டி, அவர்களைத் தங்களுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று அழுத்தம் கொடுத்த செயல் மக்கள் மத்தியில் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது.

ஒட்டுக்குழுக்கள் சுதந்திரமாகச் செயற்பட அரசுத் தரப்பும் படைத்தரப்பும் அனுமதித்துள்ள செயல், ஜெனீவா இணக்கப்பாட்டை மீறும் செயல் என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### பேச்சுக்குழுவும் பாதுகாப்பு உத்தரவாதமும்

ஒட்டுக்குழுக்களைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்துள்ளமை, பேச்சுக்குழு கிளிநொச்சியில் இருந்து கட்டுநாயக்கா வந்து ஜெனீவா செல்வதற்கு அச்சுறுத்தலாக அமைவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

2ஆம் கட்டப் பேச்சுக்குவரும் விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் மதி

## சிங்கள மக்களின் மனதை வென்ற மஹிந்தர் தமிழ் மக்களின் மனதை வெல்வாரா?

யுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் நோர்வே அனுசரணையாளர்களிடம் கேட்டுள்ளார்.

இவ்வார நடுப்பகுதியில் லண்டனில் தம்மைச் சந்தித்த நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும், அந்நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மிடம் அன்ரன் பாலசிங்கம் இப்படிக் கோரியுள்ளார்.

இலங்கை அரசின் ஜனாதிபதியும், நோர்வே அனுசரணையாளர்களும் இந்தப் பாதுகாப்பு உத்தரவாதத்தைத் தந்தால் மட்டுமே விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவினர் 2ஆம் கட்டப் பேச்சில் கலந்துகொள்வர் என அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

### விசேட தூதரின் வன்னி வருகை

இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுகளை நடத்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் ஹன்ஸன் போவர் நாளை இலங்கை வருகின்றார்.

புதிய பதவியை ஏற்ற பின்னர் முதன்முதலாக மேற்கொள்ளும் கன்னிப்பயணத்தின்போது அவர் எதிர்வரும் புதன்கிழமை வன்னியில் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கின்றார்.

இந்தச் சந்திப்பின்போது கள நிலைவரங்களை அறிவதில் அவர் ஆர்வம் காட்டுவார். அத்துடன், பேச்சுக்குழுவின் கொழும்பு ஊடான பயணத்துக்காக பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும் விவகாரம் குறித்தும் பேசுவார்.

சமாதான முயற்சிகளில் புதுமுகமாகவரும் இவர், விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேசும் விடயங்கள் குறித்து மறுநாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் பேசப்போகின்றார்.

### சொல்ஹெய்மின் ஒரு நாள் விஜயம்

ஒருநாள் விஜயம் மேற்கொண்டு அன்று கொழும்புவரும் அனுசரணைக் குழுவின் தலைவரும், அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மும் போவருடன் ஜனாதிபதியைச் சந்திக்கின்றார்.

2 ஆம் கட்டப் பேச்சுகளின் நிகழ்ச்சிநிரல், விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவின் பாதுகாப்பு உத்தரவாதம் உட்பட பலவிடயங்கள் தொடர்பாக இந்தப் பேச்சில் ஆராயப்படவிருக்கின்றன.

ஜெனீவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தாததால் விடுதலைப் புலிகளின் தலைமை கொண்டுள்ள அவநம்பிக்கை நிலை குறித்தும் அவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறப்போகின்றார்கள்.

இலங்கை இனப்பிரச்சினையில் பாகிஸ்தானும் சீனாவும் தலையீடு செய்யும் ஆபத்தான புறநிலை உருவாகியிருப்பதாகவும்-

இந்நிலைமை தென்னாசியப் பிராந்தியத்தில் சமாதானத்துக்கும் உறுதி நிலைக்கும் பெரும் பங்கத்தை ஏற்படுத்தும் அச்சத்தை உருவாக்கியிருப்பதாகவும்-

முஸ்லிம்களின் ஜிகாத் குழுவுடன் பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினருக்கு தொடர்பு இருக்கின்றது என்றும்-

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எரிக் சொல்ஹெய்முக்கு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகவும் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் கவனத்துக்குக்கொண்டு வரவிருக்கின்றார்.

ஜெனீவாவில் இடம்பெறப்போகும் 2ஆம் கட்டப் பேச்சுக்கள் சுமுகமாக நடப்பதற்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டினால், பேச்சுகள் ஆக்கபூர்வமான திசையில் போகும். இல்லாவிட்டால் கூடிப்பேசிக் கலைந்து செல்லும் பேச்சாக மட்டும்தான் அது அமையப்போகின்றது.

ஜனாதிபதியின் காய்நகர்த்தல் மூலம் சமாதானப் பேச்சு ஆக்கபூர்வமான திசையை நோக்கிச் செல்லப்போகின்றதா? அல்லது சிங்களத்தரப்பு தமிழர் தரப்பை ஏமாற்றிவரும் வரலாற்றின் ஓர் அங்கமாக இந்தப் பேச்சுகள் அமையப் போகின்றனவா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எதுவாக இருந்தாலும் சிங்களத் தலைமைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். ஜெனீவா இணக்கப்பாடு ஏற்பட்டு ஒருமாதம் கடந்தும் எதுவும் செய்யாத இந்தத் தலைமையைத் தொடர்ந்தும் எப்படி நம்புவது என்ற செய்தியை சர்வதேச சமூகத்துக்கு விடுக்கும் களமாக 2ஆம் கட்டப் பேச்சைதமிழர் தரப்பு பயன்படுத்தப் போகின்றது என்பது மட்டும் உண்மை.

### பேரினவாதிகளுக்குப் பலத்த அடி

இந் நிலையில், தெற்கில் மினித்தேர்தல் ஒன்று நடந்தேறி முடிந்துள்ளது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.

'நோர்வேயே வெளியேறு' என்று குரல் கொடுத்து வந்த பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமயவுக்கு சிங்கள மக்கள் நல்ல பாடம் புகட்டியுள்ளனர்.




தேர்தல் நடந்த 266உள்ளூராட்சிச் சபைகளில் ஒரேயொரு சபையை மட்டும் ஜே.வி.பியினால் கைப்பற்ற முடிந்துள்ளது. ஹெல உறுமயவினால் எந்தச் சபையையும் கைப்பற்ற முடிய வில்லை.

மஹிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இருநூறுக்கு மேற்பட்ட சபைகளைக் கைப்பற்றி அமோகவெற்றியை நிலைநாட்டியுள்ளது.

நாடு ஒரு யுத்தத்துக்கு முகம் கொடுத்து வரும் இந்நேரத்தில், யுத்தம் மூலம் அல்ல சமாதான முயற்சிகள் மூலமே தீர்வைக்காணவேண்டும் என்ற சிந்தனையோட்டம் தெற்கு மக்களின் மனங்களில் புத்துயிர் பெற்றுள்ளது என்பதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்கின்றனர் நோக்கர்கள்.

பாகிஸ்தானிடமும், சீனாவிடமும் ஆயுதங்களுக்குக் கையேந்தி நிற்காமல், சமாதானம் மூலம் தீர்வைக்காண ஜனாதிபதி மஹிந்தவுக்கு தெற்கு சிங்கள மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். பேரினவாதச் சக்திகளுக்கு இடமளியோம் என்று சிங்கள மக்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

பாகிஸ்தானுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த நாடு திரும்பியதும், பேரினவாதிகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளின் பிடியில் இருந்து விடுபட்டு, ஜெனீவா பேச்சுகளில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை செவ்வனவே நடைமுறைப்படுத்தி சமாதானத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்.

அவ்வாறிலலாமல், தொடர்ந்தும் அந்தப்பேரினவாதச் சக்திகளின் ஆலோசனைப்படி செயற்பாட்டு, ஜெனீவா இணக்கப்பாட்டை கிடப்பில் போட்டு ஜனாதிபதி செயற்படுவராக இருந்ததால், தன்னைத் தெரிவு செய்த சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு இலக்காவார். இது வளர்த்த கடா மார்பில் குத்திய கதையாகத்தான் போகும்.

### பிரபா வழங்கிய அவகாசம்

கடந்த மாவீரர்தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வழங்கியுள்ள குறுகியகால அவகாசத்தை ஞாபகத்தில் நிறுத்தி - சிங்கள மக்கள் வழங்கிய ஆணையை மதித்து, ஜெனீவா இணக்கப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைந்து நடைமுறைப்படுத்த முனைந்தால், சிங்கள மக்களின் மனங்களை மட்டுமல்ல தமிழ்மக்களின் மனங்களையும் வென்றவராவார்.

அவ்வாறு செயற்படாவிட்டால் பேச்சுகளுக்கு முடிவு ஏற்பட்டு நாலாம் கட்ட ஈழப்போருக்கு வழிசமைத்தவர் என்ற பெருமையை மட்டும்தான் அவரால் பெறமுடியும். இதுதான் இன்றைய யதார்த்த நிலையாகும். [33-27-23]★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இலகு தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் சிறிது காலம் பாவித்த **Sharp Washing Machine,** ஆண்களின் துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 521, நாவலர் மண்டபம் முன்பாக, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 077 6365950** (48625)

## கார் விற்பனைக்கு

நிசான்சனி 13-**xxx** தொடர்இலக்கமுடைய 'புள் ஏப்சன்' கோல்ட் கலர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.55, கோயில் வீதி, சுண்டுக்குளி. **T.P. 0777 064467** (47812)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் பிஞ்சர் குறோஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.6 நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஸ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு. மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை பார்வையிடலாம். (48836)

**Pure Breed Boxer Pups** உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-48616)

கிரேட் டேயன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: **New R.S.K Farm,** மாண்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (48779)

2 மாத **Dobermann Pincher** நாய்க் குட்டிகள் விலை 5000/-,2 வயது **Great Dane** நீளம் 27 inch, உயரம் **31 inch, German Shepherd** நீளம் 27 **inch,** உயரம் **28 inch** ஆண் நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு **Dr. Sankar, Sivarajah Avenue, Post Box Junction, Palaly Road, Thirunelvely.** (48851)

## வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, உடையார் ஒழுங்கையில் சுற்று மதிலுடன் 6 பரப்புக் காணியில் அமைந்த 3 படுக்கையறை வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: **2593961** (சி48618)

பிறவுண் வீதியில் நல்ல சூழலில் நல்ல வசதிகள் உள்ள வீடு 1¼ பரப்புடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிற்பகல் 3 - 6 மணிவரை. செ.பொன்ராசா, இல.12, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 0776500321** (47881)

உரும்பிராய் தெற்கு **V.P.S** றோட்டில் 3¼ பரப்புக்காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P. 0112394360** (48850)

## கட்டர் விற்பனைக்கு

அச்சுக்கூடங்களுக்கு உகந்த கட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: கண்மணி. **T.P. 0779588569** (48774)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை). தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48580)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம்-வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி. உடுவில் ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர் - #19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48501)

## வீடு வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலியில் சகல வசதிகளும் கொண்ட ஆறு அறைகள், இணைந்த குளியலறை, சமையலறை, ஹோல் உட்பட்ட மேல்மாடி மட்டும் உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: **T.P. 077 9934783** (48840)

நல்லூர் செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நாள் வாடகைக்கும் வழங்கப்படும். தொடர்பு: **0773186842** (48852)

## கடைகள் வாடகைக்கு

இருபாலைச் சந்தியில் சிவபாதம் கட்டடத்தில் கீழ் கடைகளும் மேல் மாடியில் உள்ள கடைகளும் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: ரகுநாதன், இருபாலைச் சந்தி. (48863)

## வீடு வாடகைக்கு/ விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி- நல்லூர் வீதியில் 2¾ பரப்புக் காணியில் உள்ள 6 அறைகள் கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு (**NGO** விரும்பத்தக்கது)/ விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: **021 - 222 5283** (48853)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976ஆம் ஆண்டு, அவிட்டம் 3ஆம் பாதம், கிரகபாவம் 19, உயரம் 5'6" உள்ள 12இல் செவ்வாய் உள்ள **M.B.B.S** டாக்டர், அழகான மணமகளுக்கு, டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை. **0776248679.**(48854)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து 1971 இல் பிறந்த, ஆயிலிய நட்சத்திரம், கடகராசி, **B.S.M.S.** பட்டம் பெற்று, தற்போது மருத்துவராக பணிபுரியும் அழகிய பெண்ணுக்கு அதே தரமுடைய அல்லது பொறியியலாளர், கணக்காளர், **B.Sc.** படித்த பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2844. (48751)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1986ஆம் ஆண்டு, சித்திரை, உதயச் செவ்வாய் கிரகபாவம் 68 ½ உள்ள மிக அழகான படித்த பெண்ணுக்கு **U.K.** நிரந்தர மணமகன் தேவை. தொடர்பு: **0776248679** (48859)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975 ஆம் ஆண்டு, சுவாதி நட்சத்திரம், கிரகபாவம் 23, 8இல் செவ்வாய் உள்ள மிகவும் அழகான படித்த மணமகளுக்கு பட்டதாரி ஆசிரியர், நல்ல அரச உத்தியோகம், **U.K.** பிரஜா உரிமை உள்ள மணமகன் தேவை. தொடர்பு: **0776248679** (48854)

யாழ். கௌரவ குடும்பம், 1971 ஆம் ஆண்டு, பூராடம், கிரகபாவம் 30¾ செவ்வாய் தோஷம் அற்றதும், உயரம் 5'1" உள்ளதும் படித்த அழகான பெண்ணுக்கு பட்டதாரி ஆசிரியர், அரச உத்தியோகம், கொழும்பில் பெரிய சொந்த உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. தொடர்பு **0776248679** (48854)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976ஆம் ஆண்டு பிறந்த, அவிட்டம் 4ஆம் பாதம் செவ்வாய் தோஷமற்ற, 32 கிரகபாவம் உள்ள, பொறியியலாளர் மணமகனுக்கு மெல்லிய சிவப்புநிற நற்குண டாக்டர், எஞ்சினியர், **B.Sc.** கொழும்பு ஆசிரியை மணமகள் தேவை. தொடர்பு: **0776248679** (48854)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974ஆம் ஆண்டு பிறந்த, கார்த்திகை, செவ்வாய் தோஷமற்ற கிரகபாவம் 38 ¼ உடைய நிரந்தர கனடா பிரஜாவுரிமைபெற்ற மணமகனுக்கு படித்த, அழகான, மெல்லிய மணமகள் தேவை. தொடர்பு: **0776248679** (48854)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1973ஆம் ஆண்டு அனுஷம், கிரகபாவம் 17½ செவ்வாய் தோஷமற்ற **U.K.** நிரந்தர பிரஜாவுரிமை உடைய **M.B.B.S** டாக்டருக்கு மெல்லிய, சிவப்பு, அழகான டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மணமகள் தேவை. தொடர்பு: **0776248679** (48854)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1981ஆம் ஆண்டு , விசாகம் கிரகபாவம் 16¼ உள்ள நோர்வேயில் நிரந்தர பிரஜா உரிமை பெற்ற அழகான மணமகனுக்கு ஆங்கிலம் பேசக் கூடிய மெல்லிய,, சிவப்பு, அழகான பட்டதாரி மணமகள் தேவை. **0776248679**(48854)

## திருமண சேவை

நீங்கள் அடுத்து வெள்ளவத்தைக்கு வரும்போது வேல்அமுதனையும் சந்திக்கலாம்! தங்கள் மக்களுக்குப் பொருந்தக்கூடிய வாழ்க்கைத் துணையையும் சுயதெரிவு முறையில் தெரிந்தெடுக்கலாம் விவரங்களுக்கு தசாப்தவிழாக்கண்ட 'சுயதெரிவு முறை முன்னோடி, பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மாத்திரம் மாலை 4.30க்கு மேல் தொடர்புகொள்க. வேல் அமுதனின் நேரடித் தொலைபேசி இலக்கங்கள் - **2360488, 4514396, 0602158067.** (48636)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

தொடர்பு:- **BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி (பாம் ஸ்கூல் அருகில்)
T.P.021 4590907
32/3, ரெயில்வே அவனியூ, கொழும்பு -05.
(48357) T.P.0112 852269 (21.11.14)

## காரைநகரில் வைக்கோல் திருட்டு

காரைநகர் நெல்வயல்களில் உள்ள வைக்கோல்கள் களவாக ஏற்றிச் செல்லப்படுவதாக விவசாயிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகின்றது. வைக்கோலின் விலை என்றுமில்லாதவாறு இம்முறை அதிகரித்துள்ளமையால் சூடடிக்கப்பட்டு வயல் நிலங்களில் விடப்பட்டிருந்த வைக்கோல்கள் ஆள்கள் நடமாட்டம் இல்லா நேரத்தில் உழவு இயந்திரம் மற்றும் மாட்டு வண்டில்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுவதாகக் கூறப்பட்டது.

காரைநகரில் ஒரு பரப்பு வைக்கோல் நூறு ரூபா தொடக்கம் நூற்று இருப்பத்தைந்து ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது. (எ-73) (24)

## ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனி உற்சவம்

காரைநகர்,ஏப்.2

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய வருடாந்த பங்குனி மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவில் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து பஞ்சரத பவனியும் இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் 12ஆம் திகதி புதன் கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

மகோற்சவத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவைகளும் இடம்பெவுள்ளன. (எ-73)(24)


நீங்கள் கணனித் துறையில் கற்றவர்களா.....? உங்களிடம் திறமையிருந்தால்...
எங்கள் மூலம் நிரூபித்துக் காட்டுங்கள்...!
wanted
ANDRA DIGITAL IMAGE
நிறுவனத்திற்கு கணனியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை!
சான்றிதழ்களைவிட திறமைகளுக்கு முதலிடம்!
நேர்முகத் தேர்வு : 04, 05 -04-2006
தொடர்புகள் :
ANDRA DIGITAL IMAGE
கே.கே.எஸ். றோட், உப்புமடம் சந்தி, கோண்டாவில்
T.P 021 4590268,0776622981

புத்தாண்டை முன்னிட்டு திருமுருகன் கொம் நெற் வழங்கும் விசேட சலுகைகள்
FedEx express இன் புத்தாண்டு விசேட சலுகைகளை நீங்கள் அனுப்பும் கடிதங்கள், பொதிகள் எவையாயினும் 10% விசேட சலுகைகளுடன்
முதலாம் பரிசு தங்க நாணயம் மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

| சுவிஸ்லாந்துக்கான | லண்டனுக்கான |
| --- | --- |
| 5kg பொதி ஒன்றிற்கு | 5kg பொதி ஒன்றிற்கு |
| 1kg க்கான | 1kg க்கான |
| கட்டணம் 650/= | கட்டணம் 500/= |

குறிப்பு: இந்தச் சலுகை புத்தாண்டு வரை மட்டுமே.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.
யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்



# ஜெயிக்கப் போபவர் யாரு?

இலங்கைக்குச் சுற்றுலாவை மேற்கொண்டு விளையாடி வரும் பாகிஸ்தான் ஒருநாள் தொடரை கைப்பற்றிய நிலையில் தற்பொழுது டெஸ்ட் தொடரில் பங்குபற்றி வருகின்றது.

இலங்கைக்கு எதிராக இதுவரை டெஸ்ட்



தொடரை இழக்காத பாகிஸ்தான் அணி முதல் டெஸ்டில் தோல்வியடையக்கூடாது என்ற எண்ணத்துடன் மலிக்கின் உதவியுடன் திறமையாகப் போராடி சமனிலையில் முடித்தது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இரு அணிகளுக்கும் முக்கியமானதாக விளங்கப் போகின்றது.

முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை, பாகிஸ்தான் வீரர்கள் திறமையாகப் போராடினார்கள் என்றே கூறவேண்டும். முதல் நாள் ஆட்டம் பலத்த மழையின் இடையூறால் கைவிடப்பட இரண்டாம் நாளில் இருந்து ஆட்டம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் இலங்கையணியை துடுப்பெடுத்தாட அழைத்தார். இலங்கையணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக சனத்ஜெயசூரிய மற்றும் உபுல் தரங்க ஆகியோர் களமிறங்கினர்.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான நவீட் உல் ஹசன் தனது மனைவி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால் பாகிஸ்தான் புறப்பட்டு சென்றார். இதனால் இன்னொரு வேகப்பந்து வீச்சாளரான உமல் குல்லுக் வாய்ப்பு வழங்கப்பட்டது. தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை சரியாக பயன்படுத்தி கொண்ட உமர் குல் ஆஸிப்புடன் இணைந்து சிறப்பாக பந்து வீசி இலங்கையணியின் துடுப்பாட்டவீரர்களை திணறடிக்க செய்தார். ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கமிய சனத்ஜெயசூரியாவை (4) சொற்ப ஓட்டத்துடன் ஆட்டமிழக்கசெய்தார். அடுத்து உபுல் தரங்கவும் 28 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆஸிப்பின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த முன்னணி வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். நடுத்தர வரிசை வீரரான டில்சான் பந்து வீச்சாளர் மஷ்ருப்புடன் இணைந்து இலங்கையணியின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவு உயர்த்தினார். மஹ்ரூப் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 46 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார். மஹ்ரூப் ஆட்டமிழந்த சிறிது நேரத்துக்குள்ளேயே டில்சானும் (69) ஆட்டமிழந்தார். இவ் இருவரும் இணைப்பாட்டமாக 102 ஓட்டங்களைப் பெற்று இலங்கையணிகௌரவமான ஓட்டஎண்ணிக்கையைப் பெற உதவினர். இறுதியில் இல ங்கையணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான சொய்ப் மாலிக் மற்றும் இம்ரான் பர்கத் ஆகியோர் களமிறங்கினர். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களை பெற்று இலங்கையணியின் ஓட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வலுவான நிலையில் இருந்தது. இம்ரான் பர்கத் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 69 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். ஆடுகளத்தில் இன்ஸமாமும் (30), அப்துல் ரஸாக்கும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் இன்ஸமாம் மேலும் ஒரு ஓட்டத்தை பெற்று மஷ்ருப்பின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். இதனை தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி துடுப்பாட்ட வீரர்கள் முரளியினதும், மஷ்ருப்பினதும் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். இறுதியில் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களை மட்டுமே பெற்றது மஹ்ரூப் சிறப்பாக பந்துவீசி நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தி தான் ஒரு சகலதுறை ஆட்டக்காரர் என நிரூபித்தார். மற்றும் முரளி, மலிங்க ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். முதலாவது இன்னிங்ஸில் இலங்கையணி 9 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கையணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரானசனத் ஜெயசூரிய (1-3) சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.



அடுத்து வந்த சங்கக்காரவுடன் ஜோடி சேர்ந்த. உபுல் தரங்க நல்லதொரு இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கையணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். உபுல் தரங்க 72 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார். அடுத்ததாக களமிறங்கிய அணித்தலைவர் மறுமுனையில் நின்ற சங்கக்காரவுடன் இணைந்து தனது பங்களிப்பை சிறப்பாக கொடுத்துதவினார். மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கையணி இரு விக்கெட்டினை இழந்து 242 ஓட்டங்களை பெற்றிருந்தது. மஹேல ஜெய வர்த்தன 69 ஓட்டங்களுடனும் சங்கக்கார 71 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நான்காம் நாள் ஆட்டத்திலும் இலங்கையணியில் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. சதம் அடிப்பாரென எதிர்பார்க்கபட்ட அணித்தலைவர் மகேல ஜெய வர்த்தன 84 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார். ஆனால் மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சங்கக்கார சதமடித்தார். மஹேல ஆட்டமிழக்க களமிறங்கிய சமரவீர சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். குமார் சங்கக்கார 185 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை மலிக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இறுதியில் இலங்கையணி 5 விக்கெட்டுக்களை இழந்து 448 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆட்டத்தை இடை நிறுத்தி கொண்டது. 458 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற பெரும் இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களை பெற்றிருந்தது. களத்தில் மலிக்கும், இக்பாவலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இறுதிநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இலங்கையணியின் வெற்றிக் கனவைத் தகர்த்து ஆட்டத்தை சமநிலை படுத்தினர். 5 ஆம் நாள் ஆட்டத்தை மழையும் சிறிது நேரம் குழப்பியது. மலிக் சிறப்பாக துடுப்பெடுத்தாடி தனது கன்னிச்சதத்தை பெற்றார். இக்பால் 60 ஓட்டங்களையும்,இன்ஸமாம் 48 ஓட்டங்களையும் பெற்றனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தைசமநிலைப்படுத்தியது. ❊




## உலகக்கிண்ண கிரிக்கெட் ஆட்டம் அரங்குகள் அமைக்கும் பணி தீவிரம்

உலகக் கிண்ணத் தொடரிற்கிடையில் மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்றுவரும் அரங்க கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி நிறைவு பெற்றுவிடும் என ஐ.ஸி.ஸியின் மேம்பாட்டு இயக்குநர் டான் லக்கர்பி தெரிவித்துள்ளார்.

சிமெந்து பற்றாக்குறை காரணமாக அரங்கப் பணிகளை மேற்கொள்வதற்குப் பிரச்சினை ஏற்பட்டது. அது தற்பொழுது சீர் செய்யப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

'உலகக் கிண்ணத் தொடரிற்காக 9 மாகாணங்களில் அரங்க நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு இடத்திலும் சிமெந்து கிடைக்காததால் பணிகள் பாதிக்கப்பட்டன. இருந்தபோதிலும் முக்கிய திட்டங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் அரங்கப் பணிகளைப் பார்வையிட ஐ.ஸி.ஸி. ஆய்வாளர்கள் இம்மாத இறுதியில் வருகை தரவுள்ளனர். அப்போது அவர்கள் திருப்தியடையும் வகையில் பணிகள் முடிவு பெற்றுவிடும் எனத் தெரிவித்தார்.

சிமெந்து பற்றாக்குறையால் ஜமேக்கா, கயானா தீவுகள் ஆகிய இடங்களில்தான் அதிகம் பணிகள் பாதிக்கப்பட்டன. அத்தீவுகளுக்கு டிரினிடாடில் இருந்து சிமெந்து விநியோகம்செய்யப்பட வேண்டியிருந்தது. இருந்தாலும், திட்டமிட்டபடி பணிகள் நிறைவுபெறுவதற்கு ஒருவாரமே கால தாமதமாகும் என ஜமைக்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கயானா அதிகாரிகளும் திட்டமிட்டபடி பணிகளை நிறைவேற்ற உறுதியளித்துள்ளனர்.

ஜமேக்காவில் உள்ள டிரெலாவனி ஸ்டேடியத்தில் தான் தொடக்க நிகழ்ச்சியும் பயிற்சி ஆட்டங்களும் நடைபெறவுள்ளன.

அந்நாட்டின் சபீனா பார்க் அரங்கில் முதல் சுற்று ஆட்டங்களும் அரையிறுதி ஆட்டங்களும் நடைபெறவுள்ளன. மேற்கிந்தியத்தீவுகள் முதன்முதலாக உலகக் கிண்ணத் தொடரை நடத்துகின்றது.

இந்த ஆட்டங்கள் யாவும் 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வரை நடைபெறுகின்றன.

## உலகக் கிண்ண கால்பந்தாட்டம் விசேட சிறைகள் தயார் நிலையில்

உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஜேர்மனியில் ஆரம்பமாகின்றன.

ஒருமாதம் நடக்கும் இந்தக் கால்பந்துத் திருவிழாவைக்காண உலகெங்கிலும் இருந்து இலட்சக்கணக்கான ரசிகர்கள் வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. 12 நகரங்களில் மொத்தம் 64 ஆட்டங்கள் நடக்கவுள்ளன.

உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் இடையூறு விளைவிக்கும் ரசிகர்களைக் கைதுசெய்து தடுத்துவைப்பதற்காக தற்காலிக சிறைக்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஜேர்மனியின் வளர்மபாக் நகரில் தற்காலிக சிறைக்கூடங்கள் அமைக்கப்பட்டுவிட்டது. ஏனைய நகரங்களிலும் அமைக்கப் பட்டுவருகின்றன.

போட்டிகளைக் காணவரும் ரசிகர்கள் உற்சாகமிகுதியில் ஏனையவர்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடும். சில சமயத்தில் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறலாம். அவ்வாறு வன்முறைகளில் ஈடுபடுபவர்களை அரங்கத்தில் இருந்து வெளியேற்றி தடுத்து வைப்பதற்காக இச்சிறைக் கூடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஜேர்மன் பொலீஸின் செய்தித் தொடர்பாளர் மார்கே ஹாஸ் -

போட்டிகளைக்காணவரும் ரசிகர்கள் எங்கள் விருந்தினர்கள். உற்சாக மிகுதியில் அவர்கள் அமளியில் ஈடுபட்டால், கடும் நட வடிக்கை எடுத்து அவர்களைச் சங்கடப்படுத்த மாட்டோம். ரசிகர்களுக்கு என்று தனியாக தற்காலிக சிறைக் கூடங்கள் உருவாக்கி வருகின்றோம். அமளியில் ஈடுபடும் ரசிகர்கள் இங்கு இன்னல்கள் ஏற்படாதவாறு கண்ணியமாகச் சிறை வைக்கப்படுவார்கள். ஆனால், இச் சிறைகளுக்கு வேலை இருக்காது என நம்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

## தயாராகிறது காலி மைதானம்

எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் இடம்பெறவுள்ள தென்னாபிரிக்கத் தொடரிற்கு முன்னதாகவே காலி மைதானம் புனரமைக்கப்பட்டுவிடும் என இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால உறுப்பினர் மதிவண்ணனன் தெரிவித்துள்ளார்.

காலி மைதானம் கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் கடுமையாகச் சேதமடைந்தது. இந்த மைதானத்தின் பிரதான பார்வையாளர் அரங்கு, வீரர்கள் ஆடை மாற்றும் பகுதி மற்றும் வலைப்பயிற்சியில் ஈடுபடும் இடம் என்பன கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன், அந்த அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவோ மற்றும் இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் இயன் பொத்தம் ஆகியோர் மைதானத்துக்கு வருகைதந்து, சேதங்களைப் பார்வையிட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கென நிதியை வழங்கியுள்ள னர்.

ஓகஸ்ட்மாதம் இலங்கைவரும் தென்னாபிரிக்க அணி இலங்கையணியுடன் இரண்டு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இதில் ஒரு ஆட்டம் காலி மைதானத்தில் இடம் பறவுள்ளது.

இலங்கையணி காலி மைதானத்தில் 11 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 6 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Aim 01: Microsoft Office
Introduction,
Word, Excel, Access, PowerPoint.
Day & Night Batches
Day :10.00 am - 1.00 pm
Night :6.00 pm - 8.00 pm
Fast Track
1000/- only
Starts on 03-04-2006
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration, Introduction to Networks.
Aim 02: Hardware & Networking
10 நாட்கள் மட்டும்
Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி
Center for FOSS & LAMP

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 - 03 - 1920

உதிர்வு 14 - 03 - 2005

## திருமதி சதாசிவம் இராசம்மா

ஆண்டொன்று சென்றதம்மா
ஆறவில்லை எம்துயரம்
ஈன்று நீ வரவில்லை
இறைவனடி சேர்ந்தனையோ?

'சிவகிரி'
சரசாலை தெற்கு.
சாவகச்சேரி.

-குடும்பத்தினர்.

(48826)(26.11.16)

IELTS
INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM.
ESSENTIAL ENGLISH LANGUAGE EXAMINATION FOR HIGHER STUDIES, WORK OR MIGRATION PURPOSES IN U.K. AUSTRALIA, NEW ZELAND, CANADA, USA, ETC.
நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.
British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள்: வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள்: பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாட நெறிகளும் British Council – Colombo ன் நடைமுறை போன்றே.
சனி, ஞாயிறு நாட்களில் வகுப்புகள்
இரண்டு level களில் நடைபெறும் அடிப்படையில் இருந்து கற்க விரும்புவோருக்கு STEP UP TO IELTS PROGRAMME,
ஏனையவர்கட்கு ADVANCED EXAM – LEVEL PROGRAMME.
வகுப்புக்கள் 08-04-2006 ல் ஆரம்பமாகும். தனியாகவும், குழுவாகவும் வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
SURE RESULT OF BAND 8 OR BAND 9
CONTACT OR CALL OVER AT
BRITISH COLLEGE OF ENGLISH
141, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் நடுவில்)
TP. 0779934783

இதோ... 15 நாட்களில் நீங்களும் ஒரு சாதனையாளர்!
யாழ் ரெக் வழங்கும் 15 நாட்கள்
தொடர்ச்சியான டிப்ளோமா கற்கைநெறிகள்
DIPLOMA IN PHOTO DESIGN
DIPLOMA IN WEB DESIGN
DIPLOMA IN VIDEO & SOUND EDITING
DIPLOMA IN MULTIMEDIA
DIPLOMA IN 3D MODELING & ANIMATION
DIPLOMA IN HARDWARE
கொழும்பின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்...
10 பேர்கள் மட்டுமே ஒரு பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுவர்
ஏப்ரல் 3ம் திகதி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

கட்டணம் 3000/- மட்டுமே!
YTS
யாழ் ரெக்
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி,
கலட்டிச்சந்தி

# சந்தைப்படுத்தல் கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் மாவட்ட மாணவர்கள், தொழில்சார் ஆர்வலர்கள்,வங்கியாளர்கள் ஆகியோரது நலன்களைக் கருத்திற்கொண்டு தொழில்சார் கற்கை நெறிகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக இலங்கை சந்தைப் படுத்தல் நிறுவனத்துடன் இணைந்து இந்தக் கற்கைநெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.ஆரம்பகட்டமான **(PCM Preliminary Certificate in Marketing)** கற்கைநெறியினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (3)(26)

# முன்னாள் அதிபர் நினைவாக பெயர்வளைவு அன்பளிப்பு

தென்மராட்சி,ஏப்.2

வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் கந்தசாமி பஞ்சரட்ணத்தின் ஞாபகார்த்தமாக அப் பாடசாலைக்கு இரும்பிலான 'கேட்' ஒன்றும், 'பெயர் வளைவு' ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை அன்னாரின் குடும்பத்தினரும், நலன்விரும்பிகளும் இணைந்து வழங்கியுள்ளனர் என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-122)(26)

# காணி இடாப்பு தயாரிக்கும் பணிகள்

வலி.தென்மேற்கு,ஏப்.2

கீரமலை கமநல சேவை நிலையப் பிரிவில் நெற்காணி இடாப்பு தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளும் தத்தமது பகுதி விவசாயிகள் சம்மேளனங்களிடமிருந்து நெற்காணி பதிவு செய்வதற்கான படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி காணியின் உறுதி அல்லது குத்தகைக்கு பெற்ற ஆவணம் ஆகியவற்றின் நிழல் பிரதியை படிவத்துடன் இணைத்து விவசாய சம்மேளனத்திடம் கையளிக்க வேண்டும் என்றும்-

இந்த விண்ணப்பம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டியில் இயங்கி வரும் கீரிமலை கமநல சேவை நிலையத்தின் பதில் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா.குகநேசன் இத் தகவலைத் தெரிவித்தார்.

2006/2007 வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பெரும்போக நெற்செய்கைக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கும் போது மேற்படி நெற்காணி இடாப்பின் அடிப்படையிலேயே உரம் வழங்கப்பட விருப்பதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ-135)(26)

# நீங்கா நினைவில் ஆறாம் ஆண்டு



மலர்வு 29 - 03 - 1973

உதிர்வு 02 - 04 - 2000

## செல்வி கௌரி ஆனந்தராஜா

(மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)

நினைவு நாள் : 02-04-2006

ஆண்டுகள் ஆறாகின – இன்னும்
ஆறவில்லை எம்துயரம் – கௌரி
என்றும் மாறாது உன் நினைவுகள் – ஆண்டுகள்
எத்தனை சென்றாலும்
என்றும் உன் நினைவுகள் வாழும்.

தோப்பு,
அச்சுவேலி.

-குடும்பத்தினர்.

(48814)(26.11.16)

சுன்னாகம் ஊர் உதித்து தொல்புரத்தூர் வாழ்ந்து அமரரான

# செல்லையா செல்வகுமாரன் அவர்களின்

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 09 - 08 - 1971

இறப்பு 18 - 02 - 2006

(உரிமையாளர், ஐங்கரன் ஹாட்வெயர் வட்டு.வடக்கு, சித்தன்கேணி)

செல்ல மகனாக பெற்றோரின் பிடியிலிருந்து
வல்ல மகனாக வளர்ந்து வந்து
நல்லோன் என்றிடவே நண்பர்களோடிணைந்து
அல்லும் பகலும் அயராது உழைத்து
இல்லத்தைக் காத்தவனே செல்வக்குமாரா- நீ
இல்லையென்று சொல்வதற்கு யார்மனம் ஏவும்
எல்லோரும் எப்போதும் உன்னையே எண்ணி நாம்
கல்லாக கடலிலிட்டோம் மகவாக எழுந்திடுவாய்
அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுவதாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எனது அன்புக்குரிய தெய்வத்தினையும் என்னையும் விபத்து நடந்த இடத்தில் இருந்து வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற அன்பு நெஞ்சங்களுக்கும் சங்கானை வைத்தியசாலை நிர்வாகத்தினர்களுக்கும் அமரர் இறந்த செய்தி கேட்டு வைத்தியசாலைக்கு ஓடோடி வந்த நண்பர்கள்,உறவினர்கள்,அயலவர்களுக்கும் வீட்டிற்கும் வந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் மரணச் சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டோருக்கும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மலர் மாலை அணிவித்தோருக்கும் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் குறிப்பாக பத்திரிகை செய்திபார்த்து இந்த சோக நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் வட்டு.வடக்கு கற்பகசோலை இளைஞர்களுக்கும் ஐங்கரன் ஹாட்வெயர், மகாலக்ஷ்மி களஞ்சிய சாரதிகள், பணியாளர்களுக்கும் எல்லா நிகழ்வுகளையும் சிறப்புடன் செய்து முடிக்க பல வழிகளிலும் உதவிசெய்த தொல்புரம் வாழ் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் உற்றார், உறவினர், அயலவர்களுக்கும் இரு கரம் கூப்பி எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் நாளை (03-04-2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரினது நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு: *எமது தங்கையின் கணவனரின் எதிர்பாராத இழப்பினால் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டோரை இனம்காண முடியாத நிலையில் இருக்கின்றோம். எனவே எமது நிலையினை உணர்ந்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வீட்டுக்கிருத்தியத்தில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.*


மடத்துப்பிள்ளையார் கோயிலடி,
தொல்புரம்.

மனைவி, மகள்,
தனபாலசிங்கம் சிந்தாமணி,
(மகாலக்ஷ்மி களஞ்சியம், மடத்துப் பிள்ளையார் கோயிலடி, தொல்புரம்).

(48856)(26-11-16)


# இரத்தம் வழங்குங்கள்! அதை ஊக்குவிக்க திட்டம் வரையுங்கள்!

பல்வேறு அவசர, அவசிய காரணங்களுக்காக நோயாளிகளுக்கு குருதிமாற்றீடு செய்யப்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். சடுதியான குருதி இழப்பின் (விபத்துக்கள், மகப்பேற்று குருதிப் பெருக்கு) போது அதிகளவு குருதி உடனடியாக ஏற்றவேண்டிய தேவையேற்படுகின்றது. பல்வேறு குருதி சார்ந்த நோய்களின் போது (குருதி உறையா நோய், தலசீமியா நோய், என்பு மச்சை தொழிற்படாத நிலை) வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியான குருதி மாற்றீடு தேவைப்படுகின்றது. புற்றுநோயாளர்களின் சிகிச்சைகள் பராமரிப்புக்களுக்கும் அதிகளவு குருதி மாற்றீடு தேவைப்படுகின்றது. போசாக்கு குறைபாட்டினால் ஏற்படும் குருதிச் சோகை நிலையைப் பராமரிப்பதற்கும் குருதி மாற்றீடு தேவைப்படுகின்றது. இதைவிட நாளாந்தம் நடைபெறும் பல்வேறுவகைப்பட்ட சத்திரசிகிச்சைகளுக்கும் இரத்தத்தின் போதிய கையிருப்பு இன்றியமையாதது.



மேற்கூறிய தேவைகளுக்காக இரத்த வங்கியின் குருதித் தேவை அதிகமாக இருக்கும் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். இலங்கையின் வடபிராந்திய மக்களின் குருதி மாற்றீடு தேவைகளைப் பூர்த்திசெய்யும் முதன்மைப் பொறுப்பு யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் இரத்த வங்கியுடையதாகும். மந்திகை ஆதார வைத்தியசாலையினதும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையினதும் குருதித்தேவைகளையும் பூர்த்திசெய்யவேண்டிய பொறுப்பும் யாழ். இரத்த வங்கிக்கு உண்டு. இத்தகைய தேவைகளுக்காக எமக்கு நாளாந்தம் கணிசமான அளவு குருதி தேவைப்படுகின்றது. இத்தகைய குருதித் தேவைகளை நாம் தன்னார்வ குருதிக் கொடையாளர்களின் இரத்ததானத்தின் மூலமே ஈடுசெய்யக்கூடியதாக இருக்கும். போதிய, தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் செய்யமுன்வராது போனால், நோயாளர்களின் பராமரிப்பில் குறைபாடுகள், இழப்பாடுகள் ந[illegible] உயிர் பிரிதலுமே ஏற்படும். இரத்த வங்கியில் எல்லாவகை குருதிகளினதும் போதிய கையிருப்பு என்பது உயிர்காத்தலுக்கு அத்தியாவசியமாகின்றது.

தற்போது பெருமனது கொண்ட பல தன்னார்வ குருதிக்கொடையாளர்கள் தொடர்ச்சியாக இரத்த வங்கிக்கு வந்து இரத்ததானம் செய்கின்றனர். அதைவிட சமூகசேவை நோக்குடைய பலர் நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்கு செய்து இரத்தவங்கியின் குருதித் தேவைக்கு ஒத்துழைப்புத் தருகின்றார்கள். ஆனாலும், வைத்தியசாலைகளின்-வைத்திய சேவைகளின் விஸ்தரிப்பினால் அதிகரித்துவரும் குருதித் தேவைகளை இரத்த வங்கியினால் ஈடுசெய்ய முடியாதுள்ளது. கடந்த காலங்களில் எமது இரத்த வங்கியின் குருதித் தேவையை ஈடுசெய்ய ஏனைய பிராந்திய இரத்த வங்கிகளிடம் இருந்து (அனுராதபுரம், கொழும்பு) குருதியைப் பெற்றே சமாளித்து வந்துள்ளோம். தற்போதைய அதிகரித்த தேவையின் நிமித்தம் இத்தகைய உதவி கேட்பதும் அதிகரித்து வருகின்றது. எமது பிராந்திய நோயாளர்களின் குருதித் தேவையைப் பூர்த்திசெய்வது இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் கடமையல்லவா. இங்கு உள்ள சமூக சேவை உணர்வுள்ளவர்கள் முன்வந்தால் இத்தேவையை இலகுவில் பூர்த்திசெய்யலாம் என்பதே எமது கணிப்பீடு. இது எம்மால் அடையக் கூடிய இலக்கே.




இரத்த வங்கியின் தேவைக்காக குருதி வழங்கல் இரண்டு நிலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

1) இரத்த வங்கியில் இரத்ததானம் பெறப்படுகின்றது.

2) நடமாடும் இரத்ததான முகாம்கள் ஒழுங்கு செய்து அங்கு இரத்ததானம் பெறப்படுகின்றது.

1) இரத்தவங்கியில் இரத்ததானம் பெறுதல்.

தனி நபர்களாகவோ, குழுக்களாகவோ தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் இரத்தவங்கிக்கு வந்து இரத்ததானம் செய்கின்றனர். சனி, ஞாயிறு விடுமுறை நாள்கள் உட்பட கிழமையின் ஏழு நாள்களிலும் காலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணிவரையில் இரத்ததானம் செய்யலாம். ஒருவர் நான்கு மாதத்திற்கு ஒரு முறை என்ற கால இடைவெளியில் இரத்ததானம் செய்யலாம். இதைவிட தமது பிறந்ததினத்தின் போதும் திருமண நாள்களின் போதும் இரத்ததானம் செய்கின்றனர். இலகுவானதும், பாதுகாப்பானதும், ஏனையோரின் உயிர் காத்தலுக்கு உதவக்கூடியதுமான இரத்ததானத்தை சமூக உணர்வுள்ளவர்கள் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.

தனிநபர்களாக வந்து இரத்ததானம் செய்பவர்களைவிட குழுக்களாக வந்து இரத்ததானம் செய்பவர்களும் உள்ளனர். நண்பர்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள், வேலைத்தள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனத்தினர் ஆகியோர் முன்னறிவித்தல் கொடுத்து ஒழுங்கு செய்து குழுக்களாக வந்து இரத்ததானம் செய்யலாம். குழுவாக இரத்தவங்கிக்கு வந்து இரத்ததானம் செய்யும் முறையை அதிகரிக்கவேண்டியுள்ளது. இம் முறையை அதிகரிப்பதானால், நோயாளர்களின் பராமரிப்புக்கு பயனுள்ள பங்களிப்பைச் செய்யக்கூடியதாக இருக்கும். இதற்கு யாழ். மக்களிடம் இருந்து ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். குடாநாட்டில் இயங்கும் பல்வேறுபட்ட தொழில்நிறுவனங்கள், சனசமூக நிறுவனங்கள் இந்த உதவியைச் செய்யலாம். வருடமொன்றுக்கு மூன்று முறைகள் இரத்ததானம் செய்யக்கூடியதாக இருந்தாலும் வருடத்திற்கு ஒருமுறையாவது இத்தகைய குழு இரத்ததானத்தை ஒழுங்கு செய்து இரத்தவங்கிக்கு வந்து இரத்ததானம் செய்து ஒத்துழைக்கும்படி சமூக நிறுவனங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

டாக்டர் இ.சிவசங்கர்
வைத்திய அதிகாரி,
இரத்தவங்கி.
தொ.பே. 222 3063

## நடமாடும் சேவை

நடமாடும் இரத்ததான முகாம்களில் இரத்ததான நிகழ்வு சமூகத்தின் பல்வேறு இடங்களில் இத்தகைய நடமாடும் இரத்ததான முகாம்கள் நடைபெற்றுவருகின்றன. பாடசாலைகள், சமூக, சமய நிறுவனங்களில் இத்தகைய முகாம்களை ஒழுங்கு செய்யலாம். ஒரு நடமாடும் இரத்ததான முகாமில் முப்பதுபேர் அளவில் இரத்ததானம் செய்ய முன்வந்தாலே அம்முகாமுக்கு பயனுள்ளதாக அமையும். மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான நடமாடும் இரத்ததான முகாம்களையே எம்மால் நடத்தக்கூடியதாக இருக்கும். இவற்றை ஒழுங்கு செய்வதற்கான நாள்கள் எமது வங்கி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, ஏனைய வளங்கள் போன்றவற்றினால் ஒரு மாதத்திற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய நடமாடும் இரத்ததான முகாம்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுகின்றது. எனவே, ஒரு நடமாடும் இரத்ததான முகாமில் பெற்றுக் கொள்ளவேண்டிய குருதியின் அளவு போதிய அளவாக இருக்கவேண்டிய தேவை இருக்கின்றது. ஐம்பது பேரோ, அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலோ இரத்ததானம் செய்யக்கூடியவர்களை ஒழுங்குசெய்த நடமாடும் இரத்ததான முகாம்கள் தற்போதைய நிலையில் தேவையாகின்றது. இத்தகைய முகாம்களை ஒழுங்குசெய்து உதவ முன்வரும்படி வாய்ப்புள்ளவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன், இரத்ததான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும், இரத்ததானம் செய்பவர்களை ஊக்குவிக்கக்கூடிய நன்றிப் பொருள்களை வழங்குவதற்கும் பணம் படைத்தவர்கள் உதவிசெய்ய முன்வரவேண்டும்.

இந்த உயிர்காக்கும் சேவையை நடைமுறைப்படுத்துவதில் பங்காளர்களாக வரும்படி சமூக உணர்வுள்ளவர்களை வேண்டிநிற்கின்றோம். (33)*

# தீர்வுகாணப்படவேண்டிய முஸ்லிம் தனித்தரப்பு விவகாரம்

இலங்கை இனப்பிரச்சினையில் முஸ்லிம்களது பிரச்சினை ஒரு முக்கிய இடத்தைப்பிடித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

வடகிழக்கு போராட்டத்தின் ஆரம்ப காலகட்டங்களில் போராட்ட குழுக்களுடன் முஸ்லிம்களும் இணைந்தே செயற்பட்டிருந்தனர். எனினும், 80களின் இறுதியில் தமிழ் போராட்டக் குழுக்களின் மீது பல முஸ்லிம்கள் அதிருப்தி கொண்டவர்களாக நிலமை மாறியது.

இதற்கு அன்றைய ஆட்சியாளர்களது பிரித்தாளும் தந்திரமே காரணமென தமிழ்தரப்புகள் குற்றஞ்சாட்டின. தமிழ்த் தரப்புகளின் தவறான நடத்தையே காரணமென முஸ்லிம்கள் குற்றஞ்சுமத்தினர்.

எவ்வாறெனினும் உக்கிரம் பெற்ற யுத்தத்தின் காரணமாக தமிழ் மக்களைப் போலவே வடகிழக்கு முஸ்லிம் மக்களும் இழப்புகளை சந்தித்தனர்.

விசேடமாக கிழக்கில் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரங்களின் தொடர்ச்சியாக தமிழ் மக்களைப் போலவே ஆயுததாரிகளால் முஸ்லிம்களும் படுகொலை செய்யப்பட்டனர். பலர் அகதிகளாக இடம்பெயர நேரிட்டது.

இந்த நிலையில் 1990ல் வடபகுதி முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் புத்தளம் போன்ற பகுதிகளில் எவ்வித அடிப்படைவசதிகளும் இல்லாத நிலையில் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனை ஒரு இன சுத்திகரிப்பாகவே அம்மக்கள் பார்க்கின்றனர்.



இவ்வாறான பின்புலத்தில் 2002ம் ஆண்டு ஒப்பமிடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பிலும் பல அதிருப்திகளை முஸ்லிம் சமூகம் தெரிவித்திருந்தது.

அதேபோல வடகிழக்கில் சுனாமி மீள்கட்டுமான பணிகளுக்காக உருவாக்க முயற்சிக்கப்பட்ட பொதுகட்டமைப்பிலும் முஸ்லிம்கள் தொடர்பில் உரிய அவதானம் செலுத்தப்படவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இவ்வாறான சூழலில் போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பில் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்களில் முஸ்லிம்கள் தாம் தனித்தரப்பாக அனுமதிக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தனர்.

அது சாத்தியப்படாத நிலையில் தற்போது பல முஸ்லிம் அமைப்புகளும் கட்சிகளும் இனிவரும் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன.

இதேவேளை பேச்சில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக இடம் பெற்றால் அவர்கள் அரசசார்பாக செயற்படுவர் இதனால் அதிகாரசமநிலை பாதிக்கப்படும் என்ற சில தமிழ்த்தரப்புகளின் பயம்.

அதே போல இதே தனித்தரப்பு விவகாரத்தை தமிழ் முஸ்லிம் தரப்புகளுக் கிடையேயான மோதலாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்ற அரச செயற்பாடுகள், மற்றும் இது குறித்து விரிவாக முஸ்லிம் தரப்புடன் கலந்து பேசி தீர்வொன்றினைக் காண முயற்சிக்காத விடுதலைப்புலிகளின் அரசியல் தூரநோக்கற்ற செயற்பாடு மற்றும் இதனை விவாதமாக்கி வீரவசனம் பேசி பிழைக்கின்ற சுயநலவாத முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடு போன்றவை இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

எவ்வாறெனினும் இப்பிரச்சினை மேலும் மேலும் பெருப்பிக்கப்பட்டு மோசமான அரசியல் குழப்ப நிலை தேன்றுவதற்கு முன்னர் சகல தரப்புகளும் இதயசுத்தியுடன், விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமாகும். முஸ்லிம்களின் தனிதரப்பு உட்பட சகல அபிலாசைகளும் பேச்சுக்களில் நியாயமான முறையில் உள்வாங்கப்பட வேண்டும். இதற்கு சகல தரப்புக்களும் இதய சுத்தியுடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

– சுயாதீனன்

## இனியொரு விதி செய்வோம்

மானுடனே அறிவீர் - மலை
மானுடனே அறிவீர்
நிலம் மீட்கும் காலமிது
நீயறிவீர்

மேல் கொத்மலை எனச் சொல்லி
எமை மேய்த்திடவே பார்க்கிறான்
நம்
இனச்செறிவை
தேய்த்திடவே பார்க்கிறான்

கொத்மலை எனும் பெயரில்
கொடுங்கோலன் வருகிறான் - நாம்
கொண்ட நிலம் அத்தனையும்
குழி பறித்து
குகை தோண்டி
தண்ணீரில் அனுப்புதல் போல்
நம்மினத்தைத்
தாழ்த்திடத்தான் பார்க்கிறான்

வெளிச்சம் தருவோம் என்று எம்மை
வெளியேறச் சொல்கிறான்
வீடு தருவோமென்று எம்மை
விலகி நிற்கச் சொல்கிறான்
காணி தருவோமென்று
கைகழுவப்பார்க்கிறான்
கரு(த்)திட்டம் போட்டு எம்மைக்
காடனுப்பப் பார்க்கிறான் - சுடு
காடனுப்பப் பார்க்கிறான்

ஐப்பானின் உதவியோடு எம்மண்ணை
சொப்பனக்காடாக்கி அவன்
சொந்தக்காரனுக்கு
செப்பனிடப்பார்க்கிறான் -
சொர்க்கமாய்
செப்பனிடப்பார்க்கிறான்

இந்த சர்காரின் நாடகத்தில்
எம் தலைவன் எம்மையெல்லாம்
கோமாளி வேஷம் கொண்டு
கொடுத்திடத்தான் பார்க்கிறான் - பலி
கொடுத்திடத்தான் பார்க்கிறான்

நாம் போற்றும் நிலமாயும்
போராட்டக் களமாயும் - எம்மை
மாற்றும் நிலமாயும்
எதிர்காலத்தில்
மார்பு தட்டி எதிரியை
ஓட்டும் நிலமாயும்
கொண்டதுதான்
எங்கள் நிலம்
மாற்றிடுவோம் இவ் யுகத்தை
காத்திடுவோம் எம் நிலத்தை
இழிநிலைத் தலைவர்களை
இகழ்ந்திடுவோம்
இன்று முதல்
பகை வந்து சேர்ந்தாலென்ன
எம்முயிர்க்கு பாசக்கயிறு வந்து சேர்ந்தாலென்ன
இனியொரு விதி செய்வோம்

இழிநிலை தலைமை தம்மை
இழிவுரச்செய்வோம்
இளைஞர் பலம் சேர்த்திடுவோம்
மலையகம் எனும் தேசம்
மலரும் வரை உயிர் கொடுப்போம்
தவறிவிடமாட்டோம்
தாயகமாய் மாற்றிடுவோம்.

– மலைமகன்

## கண்டது.. கேட்டது.. படித்தது..

### திம்புப் பேச்சுவார்த்தைகள் - 1985

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வை காணும் குறிக்கோளுடன் 1985 இல் அனைத்து தமிழ் அரசியற் கட்சிகளின் பங்களிப்புடன் பூட்டான் நாட்டின் திம்பு நகரத்தில் இலங்கை அரசாங்க பிரதி நிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. இப்பேச்சுவார்த்தைகளில் EPRLF, EROS, LTTE, PLOTE, TELO, மற்றும் TULF ஆகிய தமிழ் கட்சிகளின் பிரதி நிதிகள் பங்கு பற்றினர்.

**திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் அரசியற் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள்**

1. தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் அவர்களை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளல்.
2. தமிழர் மரபுவழித்தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளல்.
3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல்.
4. இலங்கையை தமது தாய்நாடாக ஏற்றுக் கொள்ளும் அனைவரதும் பிரஜா உரிமையையும் ஏற்றுக்கொள்ளல்.
5. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்ளல்.

திம்புப்பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய தமிழ் ஆயுதக்குழுவினர் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றிய போதிலும் திம்புக்கொள்கைகள் பற்றி ஆழமானதும் தீவிரமான - து ம ா ன கலந்துரையாடலை அவர்கள் மத்தியில் முன்கூட்டியே ஒழுங்குபடுத்தவில்லை. பேச்சுவார்த்தைக்கு தேவையான நிகழ்ச்சி நிரலை மாத்திரம் அவர்கள் சமர்ப்பித்தனர். இந்நிகழ்ச்சி நிரலின் யோசனைகளை ஆழமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள அன்றைய ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையின் கீழான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

ஐக்கிய அரசின் கீழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தல் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை மரபுவழித்தாயகமாக ஏற்றுக் கொள்ளல் போன்ற பிரேரணைகள் இப்பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமைந்தன. இவை திம்பு யோசனைகள் என பகிரங்கப்படுத்தப்பட்டன. திம்பு யோசனைகள் நிகழ்காலத்திற்கு எவ்வகையில் ஏற்புடையதாகும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இலங்கையில் சமஷ்டி எண்ணக் கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005) எனும் புத்தகத்திலிருந்து பெறப்பட்டது

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 23

1. ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கும், அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கும், செய்யுந் தொழிலில் நியாயமானதும் அனுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைகளுக்கு உரியோராயிருப்பதற்கும், தொழிலின்மைக்கெதிரான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவர்.
2. ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி, சமமான தொழிக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

## கருத்தாடல் களம்

### சம உரிமையே மனித உரிமை

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு ஜிஹாத் என்ற ஒரு அமைப்பு இருப்பதாக உலகரீதியில் ஜெனீவா பேச்சுவார்த்தையின் போது புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் கூறிய கருத்து மிகவும் வேதனைக்குரியதாகும். முஸ்லிம்களும் தமிழர்களும் தனித்து வாழும் கிராமங்கள் இருப்பது போல இரு இனத்தவர்களும் சேர்ந்து வாழும் பிரதேசங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இப்படி வாழும் மக்களுடைய உள்ளத்தில் தப்பான கருத்துக்களையும் ஒருவரை ஒருவர் வெறுக்கும் நடவடிக்கைகளையும் உண்டு பண்ணாது இரு சமூகத்தில் உள்ள தலைவர்களும் ஒன்று சேர்ந்து உரிமைகளை சமமாக வழங்கி நாட்டில் ஐக்கியத்துடனும், சந்தோஷத்துடனும் மக்கள் வாழ வழிசமைக்க வேண்டும்.

மௌலவி ஈ. எல். நியாஸ்
மீரோவோடை

### எங்களை வாழ விடுங்கள்

கிழக்கு தமிழரான நாம் இந்த ஆயுத குழுக்களால் மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளோம். ஆயுதக்குழு இல்லை என்கிறார்கள். அப்படியென்றால் இங்கு கொலைகளை செய்வது யார்? கடத்துவது யார்? கலவரங்களை உருவாக்குவது யார்? எனவே இந்த பொய் பிரசாரங்களை கைவிட்டு மக்களை ஏமாற்றாமல் சமாதானத்திற்காக பாடுபட சம்பந்தப்பட்ட தலைவர்கள் முன்வர வேண்டும். தயவு செய்து எங்களை வாழவிடுங்கள்.

பா. கிருஷ்ணமூர்த்தி
கல்லடி, மட்டக்களப்பு

## இவ்வார விழிப்பில்...

- சமகால அரசியல்
- ஹிக்கடுவையின் இன்றைய நிலை
- சுனாமியும் மக்களும்
- காட்சிக்கோவை
- இழப்பும் தேவையும்

ரீ.என்.எல் - செவ்வாய் இரவு 7.25 மணிக்கு

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

## சமாதான செய்திகள்



கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள 'சகலருக்கும் உதவி' எனும் அமைப்பானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தையல் பயிற்சியினை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது 35 இளைஞர் யுவதிகளுக்கு தையல் பயிற்சிகளை வழங்கிக் கொண்டிருக்கும் இந்நிறுவனம் அவர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் கடந்த 2006 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி பயிற்சி யொன்றினை ஏற்பாடு செய்திருந்தது இதில் இந்திய திரைப்பட இயக்குனரும், யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதியுமான மகேஷ் பகாட் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். அத்தோடு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் அச்சிடப்பட்ட புத்தகங்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

விழிப்பின் பதிவுகள்

உதயன் YATV

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டிபி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# வவுனியா வடக்கில் கிராமங்கள் முன்னேற்றம் காண்பது எக்காலம்?


புளியங்குளம், ஏப்.2

வவுனியா மாவட்டத்தின் வடக்குப் பகுதி 20 கிராம சேவகர் பிரிவுகளின் கீழ் 94 கிராமங்களைக் கொண்ட ஒரு பெரிய பிரதேசமாகும். இப் பிரதேசம் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளால் ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடமிருந்து 1999 ஆம் ஆண்டு மீட்கப்பட்டதன் பின்னர் தற்போது மீளக் குடியமர்ந்து மூவாயிரத்து 939 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 51 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 90 வீதத்திற்கும் அதிகமான மக்கள் விவசாயத்தையே தமது ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கின்றனர். இம் மக்களுக்கான பல அடிப்படை வசதிகள், தேவைகள் இதுவரை மேம்படுத்தப்படவில்லை.

**சந்தைகள் இல்லை**

இம் மக்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதற்கு இதுவரை சந்தைகள் எவையும் இல்லை. தற்போது நெடுங்கேணியில் மட்டும் ஒரு சந்தை அமைக்கப்பட்டு வருகின்றது. முன்னர் சந்தை இருந்த இடங்களான கனகராயன் குளத்திலும், புளியங்குளத்திலும் சந்தை அமைப் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.



நெடுங்கேணி நகர்ப்பகுதியில் பிரதேச சபையினால் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகள். (இதனால் இங்கு துர்நாற்றம் வீசுகின்றது)

**வீதிகள் சீரில்லை**

பல வீதிகள் குன்றும் குழியுமாக, காடுகள், பற்றைகள் வளர்ந்து வீதிகளை மறைத்து ஒற்றையடிப் பாதையாகக் காணப்படுகின்றன. பல வீதிகளில் பாலங்கள், மதகுகள் உடைந்தும், இல்லாமலும் காணப்படுகின்றன. வீதிகளில் போடப்படுகின்ற சைகைக் குறியீடுகள் கூடப் போடப்படவில்லை.

**சூழல் சுகாதாரமும் கவனிக்கப்படுவதில்லை**

சூழலிலுள்ள கழிவுகளை அகற்றி சூழலின் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், இந்தப் பணியைச் செய்ய வேண்டிய உள்ளூராட்சிச் சபை நெடுங்கேணியில் மட்டும் வீதிகளைக் கூட்டியும், சூழலில் காணப்படுகின்ற கழிவுகளை எடுத்தும் நகருக்கு அருகில் போடுகின்றது.

இதனால், துர்நாற்றம் வீசுவதுடன் கடுமையான இலையான் பெருக்கம் காணப்படுகின்றது; சூழலும் மாசடைகின்றது.

வவுனியா வடக்கின் ஏனைய பிரதான பகுதிகளான புளியங்குளத்திலும், கனகராயன் குளத்திலும் கழிவுகள் அகற்றப்படுவதில்லை. இருந்தும், உள்ளூராட்சிச் சபையால் சூழல் பாதுகாப்பு உரிமத்திற்குரிய கட்டணம் அறவிடப்பட்டு உரிமம் வழங்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் மூன்று இறைச்சிக் கடைகள் இயங்கிவந்தன. தற்போது இம் மூன்று இறைச்சிக் கடைகளும் சம்மந்தப்பட்டவர்களால் மூடப்பட்டிருக்கின்றன. காரணம் விலங்கை அறுத்துச் சுத்தப்படுத்த உரிய கொல்களம் இல்லாமையே.

இதனால் இப்பகுதி மக்களின் இறைச்சித் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. மாறாக சட்டவிரோத விலங்கறுப்புப் வியாபாரமும் பரவலாக இடம்பெற்று வருகின்றது.

**தீராத பிரச்சினைகள்**

புளியங்குளம் சந்திப் பகுதியில் பிரதேச சபைக்குச் சொந்தமானதென தெரிவிக்கப்படும் காணி ஒன்றில் 20 வருடங்களுக்கு மேலாக புளியங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் வியாபாரம் மேற்கொண்டுவருகின்றார்.

**வன்னி மடல்**

1999 ஆம் ஆண்டு இராணுவத்திடமிருந்து புளியங்குளம் கைப்பற்றப்பட்ட பின்னர் 2002 ஆம் ஆண்டு மீளக்குடியேறிய அதேநபர் அங்கு 3 கடைகளைக் கட்டி அதில் ஒன்றில் தற்போதும் வியாபாரம் செய்து வருகின்றார். அக்காணியில் 2003 ஆம் ஆண்டு வவுனியா வடக்குப் பிரதேச சபை 2 மலசல கூடங்களை (ஒரு தொகுதியாக) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைத்தது. இதனையும் குறித்தவர்த்தகர் முட்கம்பி வேலி அமைத்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாதவாறு மறித்துள்ளார்.

அதற்கு அவர் சொல்லும் காரணம், இது எனது காணி இங்கு எனது அனுமதியின்றி மலசலகூடம் கட்டப்பட்டது. இதனாலேயே அடைத்து வைத்துள்ளேன் என்கிறார்.

ஆனால், வவுனியா வடக்குப் பிரதேச சபையோ உரிய சட்டநடவடிக்கை எடுக்காமல் அக்காணி பிரதேசசபையிடம் ஒப்படைக்கப்படும் வரை தாம் சந்தை ஒன்றைபுளியங்குளத்தில் அமைக்கப்போவதில்லை யென தெரிவித்திருக்கின்றது.

பிரதேச சபையானது தனது காணியில் மலசலகூடம் கட்டியிருந்தால் ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றது? பிரதேச சபையிடம் அக்காணி தனக்கானது என உறுதிப்படுத்த எந்த ஆவணங்களும் இல்லையா? அந்த வர்த்தகரோதான் வர்த்தகம் செய்யும் நிலையத்திற்குரிய காணிக்கான உறுதி யொன்றை வைத்திருக்கின்றார் என்று கூறுகிறார். நெடுங் கேணியில் நடந்த குறித்த காணி தொடர்பான விசாரணையில் அதனை அவர் காட்டியிருந்தார்.

இப்பகுதி மக்களில் 90 வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் இக் காணி பிரதேச சபைக்குச் சொந்தமானது. அங்கு சுமார் 20 வருடங்க ளுக்கு முன்னர் கட்டப்பட்ட கிணறும் உள்ளது என்கிறார்கள்.

**ஆளணிப்பற்றாக்குறையும் தீருவாதக இல்லை**

பிரதேச சபை தனது பணிகளைச் செய்ய ஆளணிப்பற்றாக்குறையுள்ளதாக தொடர்ந்தும் தெரிவித்துவருகிறது. இதனையே எதற்கெடுத்தாலும் சுட்டிக்காட்டுகிறது. உழவு இயந்திரம் ஒன்று ஒரு நிறுவனத் தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இதற்குக் கூட ஒரு சாரதி இதுவரை நியமிக்கப்படவில்லை.

வர்த்தகர்களிடம் வருடாந்தம் பிரதேசபையால் அறவிடப்படும் வரி மற்றும் உரிமக் கட்டணங்களை கனகராயன்குளம் வர்த்தக சங்கங்கள் இவ்வருடம் செலுத்துவதில்லையென தீர்மானித்து இதுவரை செலுத்தவில்லை.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், வரி மட்டும் வாங்கப்படுகிறது. பணியெதனையும் பிரதேச சபை மேற்கொள்வதில்லை என்பதேயாகும். இது நியாயமானதென்றே பல புத்தி ஜீவிகளும் தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் பிரதேச சபை வரிபெறுவதிலேயே உன்னிப்பாகவுள்ளது என்று பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபை மீள இயங்கிய நாள் முதல் இன்று வரை தமது அலுவலகங்களுக்குத் தேவையான கட்டடங்களைச் கட்டி தமது அலுவலகத்தை மட்டும் வளம்படுத்துவதிலேயே குறியாகவுள்ளதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஒரு உள்ளூராட்சி சபைக்கு தமது ஆதிக்க



புளியங்குளம் பிரதேச சபைக்குச் சொந்தமானது எனக்கூறப்படும் காணியில் அமைக்கப்பட்ட பொது மலசல கூடம் எவரும் பாவிக்கமுடியாத வகையில் முட்கம்பி வேலி போட்டு அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகள், பொழுதுபோக்கு அம்சங்கள் நீர் வசதிகள், வீதிகள் புனரமைப்பு உட்பட பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்புக்கள் உண்டு.

ஆனால் இவ்வசதிகள் எதுவும் மக்களுக்கு

**மன்னவன்**

இதுவரை போதியளவு கிடைக்கவில்லை. இவை மாற்றப்பட்டு மக்களுடைய தேவை கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமேயாயின் மக்களுடைய கருத்துக்களுக்கு பிரதேசசபை மதிப்பளித்துச் செயற்படவேண்டும். அல்லது பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் தலையிட்டு நேரடியாக உரிய பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுவே வவுனியா வடக்கு மக்களுடைய எதிர்பார்ப்பாகும்.

(39)

## கிளிநொச்சி ஆங்கிலக் கல்லூரியில் புதிய கற்றைநெறிக்கு விண்ணப்பம்

வட்டக்கச்சி,ஏப்.2

கிளிநொச்சி ஆங்கில மொழிக் கல்லூரியின் புதிய கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறி ஆறு மாத காலத்தைக் கொண்ட வதிவிடக் கற்கைநெறியாக நடைபெறும் எனவும்- இதற்குவிண்ணப்பிக்க ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியும் பெற்றிருக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுபவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்டுவதுடன் உணவு, தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தகுதியான சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடமுள்ள பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் மூன்று வருடங்கள் சேவையாற்ற அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக தமது சுய விவரங்களுக்கு " அதிபர் ஆங்கில மொழிக் கல்லூரி, A-9 சாலை, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-405) (39)

## 25 வருடகாலம் திருத்தப்படாத அக்கராயன்- வன்னேரிக்குளம் வீதி

அக்கராயன்,ஏப்.2

கிளிநொச்சியிலிருந்து அக்கராயன் வன்னேரிக்குளம் வீதி கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக முழுமையாக புனரமைக்கப்படாமல் உள்ளது.

வீதி அதிகார சபைக்கு சொந்தமான இவ் வீதி கடந்த போர்க்காலத்தில் மிக முக்கிய வீதியாக விளங்கியது.

1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளிநொச்சி இடப்பெயர்வின் போது கிளிநொச்சியின் மேற்குப் பகுதிகளான அக்கராயன், கந்தபுரம், வன்னேரிக்குளம், கோணாவில் ஆகிய பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருந்தனர்.

அவர்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாக இவ்வீதி அமைந்திருந்தது. இவ் வீதி புனரமைக்கப்படாமல் உள்ளதால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(த-420) (39)

## முல்லை. உதவி அரச அதிபர் செயலகங்களில் தொலைபேசி வசதிகள் இல்லாததால் சிரமம்

அக்கராயன்,ஏப்.2

முல்லைத்தீவு மாவட்ட உதவி அரச அதிபர் செயலகங்களில் தொலைபேசி வசதிகள் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு அரச செயலகங்களில் இடம்பெறும் கூட்டங்களில் உதவி அரச அதிபர்கள் அரச அதிபரிடம் தமது நெருக்கடிகளை கூறி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு என ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளை கொண்டுள்ளது.

இவ் உதவி அரச அதிபர் பிரிவுகளில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தொலைபேசி வசதியில்லை.

தற்போது முல்லைத்தீவு நகரில் தொலைபேசி வசதிகள் உருவாக்கப்பட்ட நிலையில் தமது பிரதேச செயலகங்களுக்கு தொலைபேசி இணைப்புக்களை ஏற்படுத்தித் தரும்படி உதவி அரச அதிபர்கள் முல்லைதீவு அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.(த-420) (39)

## தமிழீழ விளையாட்டுத் துறை நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர்

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் புலிகளின் குரல் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அந்த முடிவுகள் வருமாறு:

எஸ்.ஜெயவேணி (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), யோ.டிலானி (பிரமந்தனாறு ம.வி), வி.சுயேந்தினி (முல்லைத் தீவு பாண்டியன் குளம் ம.வி), க.டெனிசியா (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), ச.பானுப்பிரியன் (கிளிநொச்சி ம.வி), ப.தாட்சாயினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), தி.தனுஷா (மாறா இலுப்பை அ.த.க.பா.), ப.றசீதா (பூநகரி நல்லூர் ம.வி.), சி.கோகுலவேணி (உடையார் கட்டு ம.வி.), ஜெ.துஷ்யந்தன் (கனகாம்பிகைக் குளம்அ.த.க.பா.).

ச.துவாரகா (திருவையாறு ம.வி), அ.கோபிகா (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி), ந.பைரவி (முருகானந்த ம.வி.), சி.கோபிதா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ச.ஜெயரூபன் (திருவையாறு ம.வி.), கு.மயூரன் (வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), சு.ஜிவிஜினி (யோகபுரம் ம.வி.), யோ.நளினி (தேறாங்கண்டல் தமிழ் வித்தி.), இ.புனிதன் (குறவிரு தமிழ் வித்தியாலயம்), கு.இராஜேந்திரன் (கிளிநொச்சி மருதநகர்).

இம் மாணவர்களுக்கான பணப்பரிசும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 03 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெறவுள்ளது. (த-405) (39)

## இராமநாதபுரம் பாடசாலைக்கு புதிய மைதானம் அமைப்பு

இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கென புதிய விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கமானது தனது எல்லைக்குட்பட்ட மக்களின் பங்களிப்புடனும் கல்மடுநகர் செந்தாரகை விளையாட்டுக் கழக வீரர்களது பங்களிப்புடனும் இம் மைதானம் அமைப்புப் பணியில் ஈடுபட்டது. (த-405)

**சிவசம்பு வைத்திய நிலையம்**

30.03.2006 வியாழக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் ஐந்து சந்தி (முஸ்லிம் பள்ளிக்கு அருகில்) நடைபெறுகின்றது.

(48692)(21.11.15)

**தனிப்பட்ட ஆங்கில வகுப்புக்கள்**
Personal Class

ஆங்கிலம் குறுகிய காலத்தில் எழுதல், பேசக் கற்பிக்கப்படும்.
No.9, பிளைச்சர் ஒழுங்கை, (48664) (51)
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## கமத்தொழில் இடாப்புத் தயாரிப்புப் பணி

தென்மராட்சி,ஏப். 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் கமத் தொழில் இடாப்புத் தயாரிக்கும் பணிகள் மீசாலை, கைதடி ஆகிய கமநல சேவைகள் நிலையங்களில் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்தில் நெல் வயல்கள் உள்ளோர், வயல்கள் அமைந்துள்ள பகுதியிலுள்ள விவசாய சம்மேளனத்துடன் தொடர்புகொண்டு உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பங்களை கமநல சேவைகள் நிலையத்தில் வழங்குமாறு பெரும்பாக அலுவலர் திருமதி எஸ்.ஜெகதீஸ்வரி அறிவித்துள்ளார்.

நெல்வயல்களின் உரிமையாளர்கள் வயல்களின் உறுதிகளும் அதன் புகைப் படப்பிரதிகளும் குத்தகைக்கு நெற்செய்கையில் ஈடுபடுவோர் வயல் உரிமையாளரால் வழங்கப்பட்ட கடித்தினையும் சமர்ப்பிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஓ-117)(51)

சாவகச்சேரியில்

# கொமர்ஷல் வங்கி

இல.07, கண்டிவீதியில் திறக்கப்படவுள்ளது.

* கவர்ச்சிகரமான வட்டி வீதங்களில் சேமிப்பு, நிலையான வைப்புக் கணக்குகள்,
* வதிவோர் (RFC). வதியாதோருக்கான (NRFC) வெளிநாட்டு நாணயக் கணக்குகள்.
* சிறுவர்களுக்கான அருணலு, இசுறு, டொட்கொம், டொட்கொம் ஸ்பின் கணக்குகள்.
* நடைமுறைக் கணக்குகள், கடன்களும் மேலதிக பற்று வசதிகளும்.
* நீண்டகால நிவஹன வீடமைப்புக் கடன்களும், சிறிய நடுத்தர அபிவிருத்திக் (திரிபல) கடன்கள்.
* நாடுமுழுவதும் 222 தன்னியக்க டெலர் (CAT) இயந்திரங்களூடாக 24 மணி நேர வங்கிச் சேவை.
* நாடு முழுவதும் பரந்திருக்கும் சிறந்த வலையமைப்பின் உதவியுடன் இணைக்கப்பட்ட எமது 135 கிளைகள், வாடிக்கையாளர் சேவை நிலையங்கள், மினிக் கொம் நிலையங்களில் கணக்கு நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளமுடியும்.
* தொலைபேசி வங்கிச் சேவை (Comtel) , செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை (Com SMS), இன்ரநெற் வங்கிச் சேவை(Combank On - Line).
* Com Shakthi லீசிங் வசதி.
* விசேட வட்டியுடன் கூடிய மூத்தோருக்கான உதார கணக்குகள்.
* மத்திய கிழக்கு நாடுகள், இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இலகுவான, விரைவான பணப் பரிமாற்றம்: (e- Exchange)
* மேலும் பல சேவைகள்......

எங்களுடைய திறமை மிக்க தனித்துவமான சேவையுடன் இணையுங்கள்.

காலம்: சித்திரை 03 ஆம் திகதி2006
முற்பகல் 10.20 மணிக்கு

கொமர்ஷல் வங்கி

(C/48591)(51-)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## திட்டங்களை ஆராய வலயமட்டக் கூட்டங்கள்

சாவகச்சேரி,ஏப்.2

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரி, வரணி, கொடிகாமம், கைதடி ஆகிய நான்கு வலயங்களையும் உள்ளக்கி திட்டங்களை இனம் காண்பது தொடர்பான வலயமட்டக் குழுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன என்று தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக வலய மட்டத்தில் இனம் கண்டு முன்னுரிமைப்படுத்தும் திட்டங்கள் வலய மட்டக் குழுக்கள் ஊடாக சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி வலய மட்டக்கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல் லூரியிலும் வரணி வலயக் கூட்டம் நாளை பிற்பகல் 4 மணிக்கு சிறிபாரதி வித்தியாலயமண்டபத்திலும் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாயல மண்டபத்திலும் கைதடி வலய மட்டக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

(ஓ-31) (51)

**விற்பனையாளர் தேவை**

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.
(ஆண்கள் மட்டும்)
* கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**த.குமாரசாமி அன் சன்ஸ்**
248/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(48669) (21.16.19)

**மாடிவீடு உடன் விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியில் இணுவில் வர்த்தக மையங்களுக்கும் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலுக்குமிடையில் நான்கு பரப்புக்காணியில் அமைந்துள்ள 4 ஆயிரத்து 800 சதுரஅடி விஸ்திரணம் கொண்டமாடி வீடு விற்பனைக்கு உண்டு. கீழ்பகுதி வர்த்தக/ அலு வலக நடவடிக்கைக்கு உகந்தது. மேல் மாடி நான்கு படுக்கை அறைகள், 2 ஹோல்கள் மற்றும் நவீன வசதிகளையும் கொண்டது. (சி/48645) (51)

நேரில் தொடர்பு கொள்ளவும்.
A.S. பொன்னம்பலம்
திருப்பதி,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்

அனைத்து வகையான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்
MasterCard
VISA

# Style Park

Perfect Collection

# ஸ்ரைல் பார்க்



முழுவதிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்
அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

(C/48630)(52-)

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383
இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## உலக வலம்

மேனா

# வெள்ளைமாளிகையைத் தகர்க்கவும் பின்லேடன் கட்டளையிட்டிருந்தார்

## மரண தண்டனை எதிர்நோக்கும் அல்கெய்டா நபர் வாக்குமூலம்

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற விமானக் கடத்தல் தற்கொலைக் குண்டுத்தாக்குதலின்போது நான்கு விமானங்கள் பயணிகளுடன் கடத்தப்பட்டிருந்தன. ஆனால், அல்கெய்டா அமைப்பின் திட்டங்கள் யாவும் அவர்கள் எதிர்பார்த்தபடியே நிறைவேற்றப்பட்டிருக்குமானால் ஐந்தாவது விமானம் ஒன்றும் கடத்தப்பட்டு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அதிகாரபூர்வமாக வாசம்செய்யும் வெள்ளைமாளிகையும் மோதித் தாக்கப்பட்டிருக்கும்.

அந்த ஐந்தாவது விமானத்தைக் கடத்தி வெள்ளைமாளிகையைத் தகர்க்கும்படி கட்டளையிடப்பட்டிருந்த ஸக்காரியாஸ் மவுசாயி என்ற அல்கெய்டா தீவிரவாதி ஏப்ரல் 11ஆம் திகதிக்கு முன்னரே வேறு காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டுவிட்டதால் வெள்ளை மாளிகையும்


ஒஸாமா பின்லேடன்

அங்கே இருந்த பிரமுகர்களும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியிருந்துள்ளார்கள்.

விமானத் தாக்குதல் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்ததாக ஒப்புக்கொண்டுள்ள ஸக்காரியாஸ் இப்பொழுது அந்த இரகசியத்தை முன்கூட்டியே தெரிவித்து அச்சம்பவம் நடவாமல் தவிர்க்க உதவவில்லை, அதனால் ஆயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்கும் காரணமாக இருந்துள்ளார் என்ற குற்றச்சாட்டின்பேரில் விசாரிக்கப்பட்டுவரும் அவருக்கு மரண தண்டனையா அல்லது ஆயுள்தண்டனையா விதிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிப்பதற்கான ஜுரி சபையின் தீர்ப்பினை எதிர்நோக்கியுள்ளார்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி இரண்டு கடத்தப்பட்ட விமானங்கள் நியூயோர்க்கிலுள்ள உலக வர்த்தக நிலையக் கட்டடங்களின் மீது மோதித் தகர்த்ததன் விளைவாக 2749 பேர் உயிர் இழந்தார்கள். மூன்றாவது விமானமொன்று வாஷிங்டனிலுள்ள பாதுகாப்புத் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தின் மீது மோதித் துவம்சம் செய்தது. அதனால் 125 பேர் பலியானார்கள். நான்காவது விமானம் கடத்திச் செல்லப்பட்டபோது பிரயாணிகள் கிளர்ந்து எழுந்ததால் பென்சில்வேனியாவில் வயல் நிலமொன்றில் வீழ்ந்து நொருங்கியது, எனினும் 100 பேர் வரை அதில் கொல்லப்பட்டார்கள்.


கைதி சார்க்கரியாஸ்

அன்றையதினம் ஐந்தாவது விமானம் ஒன்றையும் ஓட்டிச்சென்று வெள்ளை மாளிகையைத் தகர்க்கும்படி தமக்குக் கட்டளையிடப்பட்டிருந்ததாக ஸக்காரியாஸ் நீதிமன்ற விசாரணையில் தெரிவித்துள்ளார். இந்தக் கட்டளையை ஒஸாமா பின்லேடனே தமக்கு இட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். சிறையில் இருந்தபோது தமக்கு செப்ரெம்பர் விமானத் தாக்குதல் பற்றி ஒன்றுமே அறிந்திருக்கவில்லையென்று பொய் கூறியிருந்ததாகவும் கூறியுள்ள ஸக்காரியாஸ் தாம் மேற்கொள்ளவிருந்த விமானத் தாக்குதல் நடவடிக்கையின்போது பிரிட்டனைச் சேர்ந்த 'சப்பாத்து குண்டுதாரி' றிச்சர்ட் றெயிட்டும் தம்முடன் சேர்ந்துகொள்ள இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்குத் தலைமைவகிக்கும் நீதிபதி லியனொயி பிரிங்கெமா ஜுரி சபையிடம் ஸக்காரியாஸ் செப்ரெம்பர் 11ஆம் திகதிய சம்பவத்தில் எவரது மரணத்துக்காகுதல் காரணமாக இருந்துள்ளரா என்பதைத் தீர்மானிக்கும்படியும் அவ்வாறாயின் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமா என்பதையும் தீர்மானிக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தார்.

செப்ரெம்பர் 11ஆம் திகதி சம்பவத்தின் சூத்திரதாரியெனக் கருதப்படும் காலெத் ஷெயிக் மொகம்மது பின்னர் சாட்சியமளித்த போது ஸக்காரியாஸ் செப்ரெம்பர் சம்பவத்தில் இடம்பெறுவவதாக இருந்தார் என்பதை மறுத்தார் - வேறொரு நடவடிக்கையில் பங்குகொள்வதற்காக அவர் பயிற்சியளிக்கப்பட்டு வந்தார் - என்று தெரிவித்தார். இவரது கூற்று அவரை விசாரிக்கும் புலனாய்வாளர்களால் வெளியிடப்பட்டது. அவர் தற்பொழுது இரகசியக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

* * *

## சீனாவுக்கு விஜயம் செய்ய பாப்பரசர் விருப்பம்

### பாப்பரசரின் சீன விஜயம்

பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ட் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ள எண்ணியிருக்கிறார். ஆனால், அந்த விஜயத்துக்கான திகதியைக் கடவுள்தான் தீர்மானிக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.


பாப்பரசர்

ஹொங்கொங்கிலிருந்து வருகைதந்திருந்த பிரதிநிதிகள் குழுவொன்றிடம் இந்த விருப்பத்தை வெளியிட்ட பாப்பரசர் உலகின் அதிக மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட சீனாவுக்கும் வத்திக்கானுக்குமிடையில் 55 ஆண்டுகளாக இருந்து வரும் பிணக்கைத்தான் தாம் சரி செய்ய விரும்புவதாக பாப்பரசர் அவர்களிடம் கூறினார். ஹொங்கொங்கில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கர்தினால் ஜோசெப் சென் தலைமையில் அக்குழு வந்திருந்தது.

பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ட் கடந்த ஞாயிறன்று ஜோசெப் சென் மற்றும் 14 கர்தினால்களைக் கர்த்தினால்களாக அபிஷேகம் செய்து வைக்கும் நிகழ்வில் ஹொங்கொங்கிலிருந்து வந்த 100 பேர் கொண்ட குழுவும் கலந்துகொண்டிருந்தது.

1951 ஆம் ஆண்டு பீஜிங்கிலிருந்த வத்திக்கான் தூதுவரை சீனா, நாடு கடத்தியதையடுத்து வத்திக்கானுக்கும் சீனாவுக்கும் இடையில் உறவுகள் சீர்குலைந்து போயிருந்தன.

அந்த உறவுகளை மீண்டும் புதுப்பித்து அமைப்பதற்கு ஹொங்கொங் கர்த்தினால் ஜோசெப் சென் பெரு முயற்சி செய்து வருகிறார்.

சீனாவில் அதிகார பூர்வமான தேசப்பற்று கத்தோலிக்க தேவாலயம் பிஷப் மார்களை தானே நியமித்துக்கொள்கின்றது. ரோமாபுரியின் அதிகாரத்தை அது அங்கீகரிப்பதில்லை.

பாப்பரசரை ஆதரிக்கும் பக்தர்கள் சட்டத்துக்கு மாறான முறையில் வழிபாடுகளில் ஈடுபடும்படியான நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். மறைவான தேவாலயங்களில் அவர்கள் தம் வழிபாடுகளை நிகழ்த்துகிறார்கள்.

அரசாங்க தேவாலயத்தில் சுமார் 40 லட்சம் வழிபாட்டாளர்கள் இருப்பதாக கருதப்படும் அதேவேளை மறைவான தேவாலயத்தின் கீழ் ஒருகோடி வழிபாட்டாளர்கள் இருப்பதாகத் தெரிகிறது.

அதிகார பூர்வமற்ற கத்தோலிக்கர்கள் தம் வீடுகளில் நண்பர்களை வழிபாடுகளுக்கு அழைப்பார்களானால் சிலசமயம் வாரக் கணக்கில் தடுப்புக்காவலில் வைக்கப்படுவார்கள். மதகுருமார்கள் வருடக்கணக்கில் சிறை வைக்கப்படுவதுண்டு. சிலர் தம்பாட்டில் காணாமல்போய்விடுவார்கள்.

ஹொங்கொங்கில் ஜனநாயகம் மீளவும் நிலைநாட்டப்படவேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கையை பாப்பரசர் ஆதரித்துக் கருத்துத் தெரிவித்ததாகத் தென் சீன 'மோர்னிங் போஸ்ட்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

முன்னைய பிரிட்டிஷ் காலணி நாடான ஹொங்கொங் 1997ஆம் ஆண்டிலிருந்து சீனக் குடியரசின் ஆட்சிக்குள் வந்துள்ளது. அங்கு ஆட்சிமுறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றி வைக்குமாறு ஜனநாயகவாதிகள் குரல் எழுப்பிவருகிறார்கள். மக்கள் தமது தலைவர்களைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரி வருகின்றனர்.

* * *

## ஐரோ. உச்சிமாநாட்டிலும் மொழிப் பிரச்சினை

### ஐரோ. உச்சி மாநாட்டில் மொழிப் பிரச்சினை

நம் நாட்டிலும் இந்தியா போன்ற நாடுகளில் மட்டும்தான் மொழிப்பிரச்சினை இருக்கிறது என்றில்லை, வளர்ந்த நாடுகளில் ஏனைய நாடுகளுக்கு உதாரணமாக விளங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் ஐரோப்பிய தலைவர்கள் மத்தியிலும் அந்த உணர்வு இருக்கிறது என்பதே அறிய ஆச்சரியமாகவும் அதேவேளை, வேடிக்கையாகவும் இருக்கிறது.

தங்களுக்கிடையில் பொருண்மியம் மற்றும் ஏனைய துறைகளால் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் வளர்த்துக்கொண்டு ஏனைய நாடுகளுக்கும் தமது உதவிகளை உறுதிப்படுத்தும் ஓர் அமைப்பாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உச்சி மாநாடு அண்மையில் பெல்ஜிய தலைநகர் பிரஸல்ஸில் நடைபெற்றது. ஒன்றியத்தின் 25 நாடுகளின் உயர்தலைவர்கள் கலந்துகொண்டார்கள். அங்குதான் இந்த விசித்திர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் ஐரோப்பிய ஊழியர்கள் ஒன்றியத்தின் தலைவர் ஏர்னஸ்ட் அன்டோயின் சீல்லியர் (பிரெஞ்சு இனத்தவர்) ஆங்கிலத்தில் உரை நிகழ்த்த ஆரம்பித்தார். பிரெஞ்சுக்காரராய் இருந்தும் ஆங்கிலத்தில் அவர் உரை நிகழ்த்தியது பிரெஞ்சு அதிபர் சிராக்கிற்குப் பிடிக்கவில்லை. எனவே, தலையிட்டு ஏன் ஆங்கிலத்தில் பேசுகிறார் என்று பிரெஞ்சு அதிபர் கேட்டார்.

நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன் ஏனென்றால் அதுதான் இங்கு செயற்பாட்டு மொழியாக இருக்கிறது என்று கூறிவிட்டு தொழிற்சங்க ஒன்றியத்தலைவர் தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசினார்.

இவர் பிரெஞ்சு ஊழியர்கள் அமைப்பின் தலைவராகவும் இருந்துள்ளார். பிரெஞ்சு அரசுடன் இந்த அமைப்புக்கு முரண்பாடுகள் உண்டு.

பிரெஞ்சு அதிபர் அதை எதிர்த்து எழுந்து நின்றார். இது ஏனைய ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது. அத்துடன் நிற்கவில்லை. சிராக் தனது நிதியமைச்சர் தீரி பிரிட்டன், வெளி உறவு அமைச்சர் பிலிப்பே டவுஸ்டி பிளேஸி ஆகியவர்களையும் அழைத்துக்கொண்டு வெளிநடப்புச் செய்தார்.

73 வயதான சிராக் தமது பிரெஞ்சு மொழி பற்றிப் பெருமைப்படுபவர் - சீலியர் தமது பேச்சை முடித்த பின்னர் பிரெஞ்சு அமைச்சர்கள் சபைக்குத் திரும்பினார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய மொழிகளில் நிகழ்த்தப்படும் உரைகள் ஏனைய மொழிகளில் உடன் மொழி பெயர்ப்புச் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் இருந்திருக்கவே செய்யும். எனவே, பிரெஞ்சு மொழியாளர் ஒருவர் ஆங்கிலத்தில் தமது உரையை நிகழ்த்தியிருக்கவேண்டாம் என்பதே சிராக்கின் கருத்தாக இருந்திருக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டிலிருந்து சிராக் வெளி நடப்பு செய்தமையைப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் நையாண்டி செய்துள்ளன. 'த கார்டியன்' தனது தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.

ஐரோப்பிய உச்சி மாநாடுகள் அலுப்புத்தட்டிப்போகும் வேளைகளில் பெரிய எழுத்துத் தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் வகையிலும் பிரமையூட்டும் குபீர் சிரிப்புகளை ஏற்படுத்தும் முறையிலும் ஜெக் சிராக்கிற்கு ஏதாவது செய்து விடும் பழக்கமுண்டு. ஆனால், அதைவிட மிக ஆழமான விடயங்கள் விவாதிக்கப்பட் வேண்டியிருந்தன. சிராக்கிற்கு தமது நாட்டில் சிக்கல்கள் தலைதூக்கியுள்ளன. தொழில்துறை தொடர்பான சர்ச்சைக்குரிய சட்டத்துக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. மொழி விடயத்தில் அவருக்கு உணர்ச்சிகள் தெரிந்த விடயங்கள்தான் என்று குறிப்பிட்டுள்ளது.

* * *

### லைபீரிய சண்டியர் பிடிபட்டார்

லைபீரியாவின் முன்னாள் போர்ச்சண்டியரும் பின்னர் அதிபராகத் தன்னை அறிவித்துக்கொண்டவருமான சாள்ஸ் டெய்லர் தப்பியோட முயன்று பிடிப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.


பிரெஞ்சு அதிபர் செராக்குடன் இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி (பின்னால் நிற்பவர்) ஏதோ பகிடியாகக் கூறிச் சிரிக்கின்றனர்.

2003ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டதன் பின்னர் அடைக்கலம் வழங்கப்பட்டிருந்த வேளையில் தப்பியோட முயன்று நைஜீரியாவின் எல்லையில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார்.

லைபீரியாவில் அவர் ஆட்சியில் இருந்தபோது மனிதகுலத்துக்கு எதிராக இழைத்த குற்றங்களுக்காக அவர் விசாரிக்கப்படவிருக்கிறார்.

றேஞ்றோவர் ஜீப் ஒன்றில் ராஜதந்திர இலக்கங்களுடனும் பெருந்தொகை அமெரிக்க டொலர் பணத்துடனும் போய்க்கொண்டிருந்தபோது நைஜீரிய சுங்க அதிகாரிகள் அவரைக் கைதுசெய்தனர். பின்னர் லைபீரியா வழியாக சீராலியோனுக்குக் கொண்டு போகப்பட்டு ஐ.நா. அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டார். அங்கு விசேஷ ஐ.நா. நீதிமன்றத்தினால் அவர் விசாரிக்கப்படவிருக்கிறார். *

## சொகுசுடைய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
2 சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090, 0777 246117


## பாராட்டுகின்றோம்

'உண்மையுள்ள மனுஷன் பரிபூரண
ஆசிர்வாதங்களைப் பெறுவான்' நீதி. 28:20அ



ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளால்
அடையும் பயனோ அணுவாகும்
தூய நற்செயலே மறைவாழ்வுக்கு
துணை தரும் பரம அழைப்பாகும்
என்ற உயர் நோக்கோடு
தேவசேவைக்கெனத் தன்னை
அர்ப்பணித்த
கல்வாரி ஊழியன்
**சகோ. ஸ்ரீபன் நவரெட்ணம்**

அவர்கள் 24.03.2006 அன்று Best Academic இற்கான தங்கப்பதக்கத்தை A.O.G. வேதாகம பாடசாலை Ja-Ela யில் பெற்றுக்கொண்டார். இவரை நாம் பாராட்டுகிறோம்.

(48831)(18-32-16-19) **கல்வாரிக் குடும்பம்.**


SRI LANKA RED CROSS SOCIETY

## Community Based Health Project, Jaffna

### Assistant Project Coordinator

Sri Lankan Red Cross Society, Jaffna Branch is calling application for the post of Assistant project Coordinator. Application should be sent under the registered cover to reach on or before 17 April 2006 to:

**The Branch Executive Officer,**
**Sri Lankan Red Cross Society,**
**Jaffna District Branch,**
**No.73, Kandy Rd, Jaffna.**

**Professional requirements:**
* Diploma or Degree in Public Health, Social Science or related field
* Experience with community development projects
* Experience with working in NGO's

Experience can be substituted for qualifications.

**Personal requirements:**
* Fluent in Tamil and English
* Excellent communication skills
* Good reporting and computer skills
* Ability to work in a team
* Motivated to work in rural areas
* Committed to work under pressure and difficult conditions
* Ability to frequently travel within Jaffna district
* Motorbike driving licence

Women are encouraged to apply.
Only short listed candidates will be informed.

(C/48623)(32)



(05.04.2006 புதன்கிழமை ஆரம்பமாகின்றது)

## திருமறைக் கலாமன்றம்

மன்ற அரங்கில் — தயாரித்து வழங்கும் — மாலை 7 மணி

தவக்கால ஆற்றுகை

# பலிக்களம்

*(திருப்பாடுகளின் காட்சி)*
*5, 6, 7, 8, 9 ஏப்ரல் 2006*
*(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - 5 நாள்களுக்கு)*

**பார்வையாளர்களுக்கு**

★ குறிக்கப்பட்ட நாள்களில் மாலை 7 மணிக்கு திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாகும். பார்வையாளர்கள் மாலை 6.15 முதல் அரங்கினுள் அனுமதிக்கப்படுவார்கள்.
★ ஆசனங்களுக்கான பதிவுகளை இன்று முதல் யாழ்.மன்ற அலுவலகத்தில் செய்துகொள்ளலாம். குறிப்பாக, தூர இடங்களில் இருந்து வரும் பார்வையாளர்கள் முன்கூட்டியே ஆசனங்களுக்கான பதிவுகளை செய்துகொள்வது விரும்பத்தக்கது.
★ ஆசனப் பதிவுகளுக்கான அன்பளிப்பு:
புதன், வியாழன், வெள்ளி 30/= சனி, ஞாயிறு 40/=

இறைமகனின் கல்வாரிப் பயணத்தில் இணைந்திட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*138, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி. 021 222 2393*

-திருமறைக் கலாமன்றம்

(சி/48643)(32-16-19)



## SALES SUPERVISORS & SALES REP

**SALES SUPERVISOR**

Pentec Brand எழுதுகருவிகள் மற்றும் காகிதாதிகள் விற்பனைக்கு Sales Supervisor, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா பிரதேசங்களிற்கு தேவை. FMCG துறையில் குறைந்தது 5 வருடங்கள் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படும்.

**SALES SUPERVISOR**

விற்பனைத்துறையில் குறைந்தது 01 வருடம் அனுபவமுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி அல்லது வவுனியா பிரதேசத்தில் வேலைசெய்யக்கூடியவர் விரும்பப்படும்.

சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்

**UNIVERSAL MARKETING SERVICES (PVT) LTD.**
545, Sri Sangaraja Mawatha,
Colombo - 10. Fax : 2 448211


## வடமராட்சி கிழக்கில் 2 பாடசாலைகள் புனரமைப்பு

தென்மராட்சி கிழக்கு, ஏப்.2

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளின் புனரமைப்புக்கு உதவ சுவிஸ் ஏஜன்சி கூட்டு நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் தாளையடி மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வகுப்பறைகள் புனரமைக்கவும், அதிபர் அலுவலகம், நூல் நிலையம் மற்றும் மண்டபம், ஆசிரியர் விடுதி, கழிப்பறைகள் என்பன அமைப்பதற்கும் -

முள்ளியான் கேவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர்கள் விடுதி, வகுப்பறைகள் நிர்மாணிப்பதற்கும் - நிதி கிடைக்கவுள்ளது.

கடந்த வருடம் ஏற்பட்ட ஆழிப்பேரலையின்போது மேற்படி பாடசாலைகள் பலத்த அழிவைச் சந்தித்தமை தெரிந்ததே.

(எ-122)(32)

## வலுவிழந்தோருக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.2

சர்வதேச விழிப்புணர்வு வாரத்தை ஒட்டி யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் இணைந்து மிதிவெடியால் பாதிக்கப்பட்டு செயற்கை அவயம் பொருத்திய வலுவிழந்தோருக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியை இன்று காலை 8.30 மணிக்கு நடத்துகின்றது.

ஜெய்ப்பூர் நிறுவன முன்றிலில் இருந்து இந்தப் போட்டி ஆரம்பமாகும். (3)(18)

## தையல் பயிற்சி வகுப்பு

நல்லூர், ஏப்.2

நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையத்தின் மகளிர்களுக்கான தையல் பயிற்சி வகுப்புக்கான ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி சனசமூக நிலையத்தின் மகளிர் சங்கத் தலைவி திருமதி சி. கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொள்ளுவார்.

கடந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் 85 ஆயிரம் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இந்தப் பயிற்சிக்கென ஒதுக்கியிருந்தார்.

(3-111)(18)





அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு

## றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்குமபோது குளுக்கோஸ் என்று கேட்காமல்
"றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
289, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

(C-48633)

100g றோயல் குளுக்கோசின்
ஆகக்கூடிய சில்லறை விலை 23.90/=


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 08 - 1950



உதிர்வு 12 - 04 - 2005

**திருமதி சிங்கராசா சரஸ்வதி**

திதி: 02.04.2006

பாசத்தின் உறைவிடமாய்
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும்
ஆறாது எம் துயரம்.

*குடமியன்,*
*வரணி.*

தகவல்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(48834)(32-16-19)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 - 02 - 1942



உதிர்வு 22 - 02 - 2005

மிருசுவில் கண்ணகை அம்மன் கோயில் பூசகரும் உருத்துடையவருமாகிய
அமரர் **வயிரவன் கதிரன் (குஞ்சையா)**

ஆண்டு ஒன்று சென்றது ஐயா!
ஆறவில்லை எங்கள் மனம் - அன்று
நிஜமாய் நின்ற எங்கள் தெய்வம் - இன்று
நிழலாய் தோன்றி மறைவதேன் ஐயா!
எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கண்ணகை அம்மன் கோயில்,*
*வைத்தியசாலை முன் வீதி,*
*மிருசுவில், கொடிகாமம்.*

ஆறாத்துயரில்:
**குடும்பத்தினர்.**

(48822)(32-16-19)

## மரண அறிவித்தல்

*திருமதி* ***அன்னம்மா வைரவப்பிள்ளை***



*(அன்னக்கா)*

புலோலி, புற்றளையைச் சேர்ந்த திருமதி அன்னம்மா வைரவப்பிள்ளை அவர்கள் 22.03.2006 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர், சைவப்புலவர், வித்துவான் குக.வைரவப்பிள்ளை (முன்னாள் ஆசிரியர், புனித பவுல் கல்லூரி - கண்டி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - பருத்தித்துறை மற் றும் முன்னாள் பங்காளர் கண்டி காமன்ஸ், கண்டி ஸ்ரோர்ஸ் - குருநாகல், லங்கா ஸ்ரோர்ஸ் - கண்டி) அவர்களின் மனைவியும் கோப்பெருந்தேவி, சிவச்சந்திரதேவன், சிவச்சூரியதேவன், செம் மனச்செல்வி, சிவாக்கினிதேவன் (ஜேர்மனி), மெல்லியல், சிவ சிம்மதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.03.2006 வியாழக்கிழமை மாலை புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 5.30 மணியளவில் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"தொல் - அகம்",**
**புலோலி.**

தகவல்:
**V.மெல்லியல்.**

(சி/48609)(32-16-19)

# திருப்புமுனையாக அமைந்துவிட்ட திருமலைத் தேர்தல்முடிவு

திருகோணமலை மாவட்டத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் உள்ளூராட்சி மன்ற வரலாற்றில் புதிய திருப்பு முனையினை உண்டாக்கி விட்டன என்றே கூறத்தோன்றுகிறது.

குறிப்பாக திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கான தேர்தல் கடந்த 12 வருடங்களுக்குப் பின்னர் இம்முறை இடம்பெற்றுள்ளது. பேரினவாதசக்திகள் இந்தத் தேர்தலின் மூலம் இந்த மன்றத்தின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றும் வகையில் சாணக்கியத் தனமான தேர்தல் தந்திரோபாயங்களை எல்லாம் மேற்கொண்டன.

**திருமலை மடல்**

இலங்கையின் அனைத்துப்பாகங்களிலும் ஆளும் தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் ஜே.வி.பியினரும் முட்டிமோதிக் கொண்டிருந்த வேளை இங்கு அதிசயம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை நகரில் அமைக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தை முக்கிய பிரச்சினையாக முன்வைத்து திருகோணமலை நகராட்சி மன்றத்தினைக் கைப்பற் ந. கையில் ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, வடக்கு - கிழக்கு சிங்கள சங்கம் மற்றும் முஸ்லிம் வேட்பாளர்கள் சிலரும்

## ஐ.தே.கட்சி வசமிருந்த பிரதேசசபை நிர்வாகமும் தமிழரசுக் கட்சி வசம்

இவர்களுடன் இணைந்து தேர்தல் கூட்டை மேற்கொண்டனர்.தேர்தல் களத்தில் இறங்கிய இவர்கள் மிகத் தீவிரமான முறையில் தங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால், ஆட்டையும் புல்லுக் கட்டையும் ஒரு சாக்கில் வைத்துக் கட்டினால் என்ன நடக்குமோ அதுதான் நடந்துவிட்டது. தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் இவர்களோ செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

### மனப்பால் குடித்த பேரினவாதிகள்

திருகோணமலை நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரை தேர்தல் முடிவடைந்த நிலையில் என்ன ஆகுமோ எப்படி நடக்குமோ என்ற நிலை தான் நிலவி வந்தது. தங்கள் வெற்றி நிச்சயப்படுத்தப்பட்டு விட்டது என்றே இந்தக் கூட்டுக் குழுவினர் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர். ஆனால், தேர்தல் முடிவுகள் வெளிவந்தபோது இவர்களது நம்பிக்கைகள் அனைத்துமே சுக்கு நூறாக சிதறிவிட்டன. தேர்தல் முடிவுகள் தமிழ் பேசும் சமூகத்தையே விழிப்படைய வைத்துவிட்டன.

தமிழ் பேசும் சமூகம் ஒன்றுபட வேண்டும். இதன் மூலம் இந்த மாவட்டத்தில் எதனையும் சாதிக்கலாம் என்ற உள்ளுணர்வினையும் உருவாக்கிவிட்டது. திருகோணமலை மாவட்டத்தின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 10 உறுப்பினர்கள் தெரிவாகி உள்ளனர். சபையின் ஏனைய இரண்டு உறுப்பினர் பதவிகளைத் தான் கூட்டுக் குழுவினரால் வெல்ல முடிந்துள்ளது.

இதேபோன்று இதுகாலவரையும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த திருகோணமலை பட்டணமும் சூழலும் பகுதிக்கான பிரதேச சபையின் நிர்வாகத்தையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.இவ்வாறு வெற்றி வாய்ப்புகளை எல்லாம் பெற்றுக்கொண்ட இந்தக் குழுவினர் முன்னே நகரின் முன்னேற்றத்திற்கான பணிகள் மலைபோல் குவிந்திருப்பதனையும் இவர்கள் மறந்துவிட முடியாது. திருகோணமலை நகரில் முன்னாள் நகராட்சி மன்றத் தலைவர் சூரியமூர்த்தியின் காலத்தில் அமைக்கப்பட்டு இதுவரை பாவனையற்றிருக்கும் நவீன சந்தை, உயர்ந்தபாடு எனப்படும் பொதுச் சந்தையின் பின்னால் உள்ள கரைவலை மீனவர்களுக்கான கடல் வலயம், புத்தர்சிலை விவகாரம், வடிகால அமைப்புப் பணிகள் புற்றீசல் போல முளைத்துவிட்ட சட்டவிரோதக் கட்டடங்கள் என பல்வேறு பிரச்சினைகள் புதிய நிர்வாகத்தினரை எதிர்பார்த்துக் காத்துள்ளன.

இதுமட்டுமன்றி, பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் நகர வாசிகள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த 12 வருட காலமாகவே இந்த நகரின் நிர்வாகம் விசேட ஆணையா

**சங்கீத்**

ளர்களின் கைகளிலேயே இருந்து வந்துள்ளது. அரச அதிகாரிகளான அவர்களால் தன்னிச்சையான வகையில் எதனையும் செய்யமுடியாதிருந்தது. ஆனால், தற்போது ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட குழுவினர் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல நகர வாசிகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தங்களுடைய நகரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும், இதுகால வரை தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பன போன்ற எதிர்பார்ப்புகளின் மத்தியிலும் இந்த மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் மறந்து விடக் கூடாது.

மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு தீர்த்து வைக்கலாம் என்பதனைக் கண்டறிந்து துரிதமுடன் செயற்பட வேண்டும்

இதனையே நகரவாசிகள் எதிர்பார்க்கின்றார்கள். ✱

# கிழக்கில் மீண்டும் தமிழர்கள் தலை நிமிர்வு

தேர்தல் களேபரத்தில் கடந்தவாரம் மட்டு. அம்பாறை மாவட்டங்கள் அல்லோலகல்லோலப்பட்டன. குறிப்பாக தேர்தலைச் சந்தித்த அம்பாறை மாவட்டம் புதியதொரு சகாப்தத்தைப் படைத்துள்ளது.

அம்பாறை காரையோரப் பிரதேசத்தில் இடம்பெற்ற 4 பிரதேச சபைகளுக்

**அம்பாறை மடல்**

கான தேர்தலில் 3 சபைகளை இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. திருக்கோவில், ஆலையடி வேம்பு, காரைதீவு ஆகிய மூன்று சபைகளையும் தமிழர்கள் வென்றுள்ளனர். ஒற்றுமைப்பட்டதன் பலனாக கிடைத்த வெற்றியை காரைதீவில் காணமுடிந்தது.

புதிதாக உருவாக்கப்பட்ட காரைதீவுப் பிரதேச சபைக்கு 5 பிரதிநிதிகள் தெரிவாவர். அதன்படி 6 குழுக்கள் போட்டியிட்டும் 4 தமிழர்கள் பிரதிநிதிகள், ஒரு முஸ்லிம் பிரதிநிதி தெரிவாகியுள்ளனர்.

அதேவேளை, மட்டு. மாவட்டத்தில் தேர்தல் இடம்பெறவில்லை.ஆதலால் அங்கு தேர்தல் களேபரம் இல்லாவிட்டாலும் கடத்தல், ஹர்த்தால் என்று பயத்துடனான களேபரம் நிலவியது. மக்கள் சற்று அசந்துபோயுள்ளனர். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயப்பீதிக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

துணைப்படைகளின் பகிரங்கநடமாட்டம் அமைதிப் பேச்சுவார்த்தையை குழப்புமென மட்டு.எம்.பி. எஸ். ஜெயானந்தமூர்த்தி கூறியிருக்கிறார்.

இதனையடுத்தே கடந்த இரு வாரங்கள் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். ஏப்ரல் மாதம் ஜெனீவா பேச்சை கேள்விக்குறியாக்கும் என்று குறிப்பிட்டமைக்கு மேலே குறிப்பிட்ட காரணங்களே அடிப்படையாகும்.

**தேர்தலுக்குப்பின்**

தேர்தல் நடைபெற்று முடிந்த கையோடு வெற்றிபெற்றவர்கள் ஊர்வலமாக வெற்றிக்களிப்பில் மிதக்க ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் காலத்தில் அவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் மக்களிடையே பசு மரத்தாணிபோல பதிந்துள்ளன.எனவே, அவற்றைத் தேர்தலுக்குப்பின் நீர்மேல் எழுத்துப்போலாக விட்டுவிடக்கூடாது.

அதேவேளை, தமிழரசுக்கட்சி சார்பாக தெரிவானவர்கள் தங்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்

**ராஜபுத்திரன்**

டாயமுள்ளது. மக்களையும் பார்க்க வேண்டியுள்ளது. மொத்தத்தில் அவதானமாக காலத்தை எதிர்கொள்ளவேண்டிய அவசியமுமுள்ளது.

மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் நிலவும் அமைதியற்ற சூழல், சுனாமி மீள் கட்டமைப்பிற்கோ அபிவிருத்தி நடவடிக்கைக்கோ சாதகமாக இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

மே மாதத்தில் அடுத்த தேர்தல் நடைபெறவுள்ளது. அது இதைவிட பாரிய சாதனையையும், வேதனையையும் ஏற்படுத்துமென்பதில் ஐயமில்லை. ✱

# தென்தமிழீழத்தில் பிரதேச வாதிகளுக்கும் இனத்துரோகிகளுக்கும் இடமில்லை

**தேர்தல் முடிவு இதனை உணர்த்துகிறது என்கிறார் பத்மநாதன் எம்.பி.**

அம்பாறை,ஏப்.2

தென்தமிழீழத்தில் பிரதேச வாதிகளுக்கும் இனத்துரோகிகளுக்கும் இடமில்லை. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இதனையே உணர்த்துகின்றன.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன்.

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களித்த தென் தமிழீழ மக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில்:-

கொலை அச்சுறுத்தலின் மத்தியிலும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச சபைகளின் நிர்வாகத்தை தமிழரசுக்கட்சி கைப்பற்றி பெரு வெற்றியினைப் பெற்றுள்ளது.

பிரதேச வாதத்திற்கும் துரோகிகளுக்கும் தென் தமிழீழத்தில் இடமில்லை என்பதை சர்வதேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் நிரூபித்து காட்டியுள்ளனர்.

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு பிரதேச வாதம் பேசியதுடன் தமிழர்களின் தாயகப் போராட்டத்தைப் பலவீனப்படுத்த சிங்கள தேசம் கடந்த 58 வருடமாக திட்டமிட்டு எடுத்து வந்த தமிழின அழிப்புக்கு தென் தமிழீழ மக்கள் இந்தத் தேர்தல் மூலம் நல்ல பாடம் புகட்டியுள்ளனர். தேர்தல் முடிவ' சிங்கள தேசத்திற்கும் தமிழ் துரோகிகளுக்கும் அரசியல் அதிகார நாற்காலிக்காக தாவி அலைபவர்களுக்கும் ஜனநாயக ரீதியில் கொடுக்கப்பட்ட சாட்டை அடியாகும்.

எனவே, எமது தன்னாட்சி உரிமை - தாயகம் - தேசியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் மூலம் நாம் தோற்றம் பெற்றுள்ளோம்.

எனவே, எமதுஇனம் மீது சிங்கள தேசத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வரும் எமது தமிழர் தாயகப்படையான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு என்றும் உறுதுணையாக நிற்கின்றோம் என்பதை தென்தமிழீழ மக்கள் ஆணையிட்டுள்ளனர் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)(18)

## தவக்காலச் சிந்தனை 33

## 'திருச்சிலுவையிலே வாழ்வு'

இறைவனின் மீட்புத் திட்டம் நிறைவேறி இரண்டாயிரம் ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால், இயேசுவின் திருச்சிலுவை என்றும் மனிதகுல வாழ்விற்கு அர்த்தம் கொடுப்பதாய் ஜீவ ஓட்டத்தின் அடி நாத மாய் அமைகின்றது.

இத்தவக்காலத்தில் நாம் செய்கின்ற ஒறுத்தல்களும் சிலுவைப் பாதைகளும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் பாஸ்கா மறைபொருளையே மையமாகக் கொண்டுள்ளன. நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தாங்கமுடியாத இழப்புகள், பகிரமுடியாத உள்ளத்து உணர்வுகள்.... அத் தனைக்கும் அர்த்தம் தருவது இயேசுவின் சிலுவை.

எங்களுடைய வாழ்க்கையை - எம் சமூகத்தின் தற்கால போக்கை இயேசுவின் கல்வாரிப் பயண நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் அவரின் 15 நிகழ்வுகளும் (15 நிலைகள், தீர்ப்பிடல் - உயிர்ப்பு) எமக்குத் தரும் படிப்பினைகளை, வெளிப்படுத்தல்களை ஆழ்ந்து சிந்திப்பதும் அவற்றை வாழ முயற்சிப்பதும் தற்காலத்திற்கு உகந்ததும், அவசியமானதும் ஆகும். அவரின் துன்பங்களுடன், வேதனைகளுடன், வாழ்க்கைப் போராட்டங்களுடன் எம் அனுபவங்களையும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இணைத்து இறை தத்துவத்திற்கு ஏற்ப வாழ முயற்சிப்பது சிறந்ததே. இவ்வாறு எம் இன்ப, துன்பங்களையும் சோதனை வேதனைகளையும் ஏற்றுக்கொண்டு அவர் விருப்பத்தை ஏற்று அவர்காட்டிய பாதையில் அனைவரோடும் ஒப்புரவாகி புதுப்படைப்பாய் மாற இக்காலம் எம்மை அழைக்கிறது.

இயேசுவின் மதிப்பீடுகளாகிய அன்பு, உண்மை, நீதி, நேர்மை, சமத்துவம், சமாதானம், சகோதரத்துவத்தை எம் குடும்பத்தில், சமூகத்தில், தமிழ் மண்ணில் நிலைநாட்டி என்றும் எக்காலத்திலும் மனித நேயத்துடன் வாழ்வதே மனித வாழ்வு, அதுவே நிலை வாழ்வு இறைவனுக்கு ஏற்ற வாழ்வு என்பதைத் தற்கால இயற்கை அனர்த்தங்களும் ஆதாரம் தருகின்றன. மனம் மாறி தூய வாழ்வு வாழவேண்டும் என்பதே எஞ்சி நிற்கும் எமக்கு தரப்படும் செய்தி.

அகோ.ச.யேசுதாசன் omi

## துன்பம் தீர அருள்வாக்கு

துன்பம் திர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்மன் ஆலயம் பெர்ணாந்து வீதி, கொழும்பு-6, ஞானகணேஸ்வரி அம்மா யாழ்.மக்களின் துன்பங்களைத் திர்ப்பதற்காக 02.04.2006 இலிருந்து 4 ஆம் திகதிவரை அருள்வாக்குக் கூறவுள்ளார். குழந்தையில்லாதவர்கள், திருமணத்தடை, தோசம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டுத் தடை, தொழிற் தடை, நோயாளர்கள், கல்வி முன்னேற்றம் அனைத்திற்கும் திருநீற்றினால் துன்பம் தீர்க்கும் அம்மாவின் அருளையும் ஆசியையும் பெறவிரும்பும் அடியார்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**ஞானவைரவர் ஆலயம்**

**கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

* நாளை (03.04.2006) திங்கட்கிழமை சங்காபிஷேகமும் நண்பகல் அன்னதானமும் நடைபெறும்.

(சு/48647) (39-14-19)



சிவமயம்

## ஸ்ரீ விநாயக ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ். | சுக். | புதன் |
| சனி | | | சந். |
| சனி | | | சூரி. |
| குரு | செவ். | சுக். | புதன் |



V.நாகராசு சுவாமிகள்

N. முனியம்மா T.P.: 077 9582596

துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. இப்போது இலங்கையில் ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்வார். கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமணம் தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல்கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றுக்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தமிழ்மொழியில் சொல்லப்படும் (கேரளா மாந்திரீகர்) நீங்கள் பல ஜோதிடரை நம்பி ஏமாந்திருக்கலாம். அதேபோல் எங்களையும் எண்ண வேண்டாம். எங்களிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் மேலும் இங்கே தங்க எண்ணியுள்ளோம். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**V.நாகராசு சுவாமிகள்**
"பிள்ளையார் இன்",
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9582596 Room No: 05

(48837)(39-14-19)

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா உற்சவத்தின்போது வாணிபம் மேற்கொள்ளும்

**வாணிபர்களுக்கான முக்கிய அறிவித்தல்**


மேற்படி ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 11.04.2006 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வும் நிலவாடகை ஏல விற்பனையும் இன்று 02.04.2006 ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகிறார்கள்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான்
ஆலய பரிபாலன சபையினர்.

(சி.48644)
(39.21.19.14)

## காணி விற்பனை

யாழ்நகர்எல்லையில்இருந்துஒருமைல்தூரத்திற்குள்A-9வீதியில் இருந்து 15 அடி அகலப் பாதையுடன் வடக்கே 133 நிலப்பரப்பு மணல், நீள் சதுரமான நிலத்தடி நீர் வளமுள்ள உறுப்பான, வங்கிகள் அனுசரித்த சிறந்த உறுதியுடன் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு ஒன்று 70 ஆயிரம் ரூபா, மொத்தமாகக் கொடுப்பதாயின் பரப்பு 60 ஆயிரம் ரூபா எதிர்பார்க்கப்படுகின்றது.




தொடர்பு:

**திருஞானாஸ் கட்டடம்**

141 1/1, 143, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(48827) (39-19-14)

### தென்மராட்சியில் நிவாரணக் கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்குரிய நிவாரண பணக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் வைத்து வழங்கப்படவுள்ளன.

ஆயிரம் ரூபா; 600 ரூபா பெறுமதியான சமுர்த்தி முத்திரைக்குரிய பயனாளிகளுக்கே பணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடத்தின் ஆறு மாதங்களுக்குரிய (ஜூலை- டிசெம்பர்) கொடுப்பனவுகளே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய வலய சமுர்த்தி வங்கிகளில் இந்தக் கொடுப்பனவினை பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117) (39)

### பேச்சுத்திறன் காணும் நிகழ்வு

பாலர் கல்விக்கழகம் நடத்தும் தமிழ், ஆங்கில மொழிப் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 14 பாடசாலை மாணவர்கள் இந்த பேச்சுத்திறன் காணும் நிகழ்வில் பங்கேற்பர்.

கழகத்தின் உபதலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா கலந்து கொள்வார். (எ) (39)

**PERSIONAL MATHS CLASSES**

தரம் 9- 11 வரையிலான மாணவர்களுக்கும், மீள்பரீட்சார்த்திகளுக்கும், (O/L) தனிப்பட்ட ரீதியாகவோ OR குழு ரீதியாகவோ இலகுவான முறையில் கணிதம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **0776128794**

(48876)(39-19-14)

## கடை வாடகைக்கு

இல. 226, கஸ்தூரியார் வீதியில் மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள கடை வாடகைக்குண்டு.

தொடர்பு: 222 5048

(48873)(39-19-14)

## கடைக்கட்டடம் விற்பனைக்கு

சுன்னாகம் பஸ்நிலையத்திற்கு முன்பாக கடைக்கட்டடம் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
இ.ரவீந்திரகுமார் (ரவி)
தொ.பே.: 0776509913
0779877826

(48799)(26-15-45)

## உடன் தேவை

1) பயிற்றப்பட்ட தாதி உத்தியோகத்தர்கள்
2) பயிலுநர்கள் G.C.E (O/L) தகைமையுடன் விண்ணப்பிக்கலாம் (பரிசாரகர் தாதி)

விண்ணப்பிக்கும் விலாசம்:
வைத்திய பணிப்பாளர்,
**சென்றல் நேசிங் ஹோம்**
350, பலாலி வீதி, திருநெல்வேலி.

(21.19.14) (48832)

## ஆள் தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனை, கையிருப்பு மற்றும் கணக்குவழக்கு எழுதத் தெரிந்த பெண்பிள்ளை வேலைக்குத் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் தரப்படும். இன்று (02.04.2006) நேரில் வரவும். கொக்குவிலை அண்டிய பகுதிகளில் வசிப்போர் மற்றும் **A/L Commerce** அல்லது **Maths** படித்தவர்கள் விரும்பத்தக்கது.

**Sats- Tech Engineers**
(National Video Center)
182, கே.கே.எஸ்.வீதி
(குளப்பிட்டி சேச் அண்மையில்)
கொக்குவில்.
Phone.: 021 2225908
0777 710785

(48869) (39-19-14)

### குடும்ப புனர்வாழ்வு நிலைய உப அலுவலகம் திறப்பு

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் வடமராட்சி, தென்மராட்சிக்கான உப - அலுவலகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு புலோலி ப.நோ.கூ.சங்க விற்பனை நிலைய மேல்மாடியில் திறக்கப்படவிருக்கின்றது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து அலுவலகத்தைத் திறந்து வைப்பார். (3) (27)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 * 09 * 1965



ஆண்டவன் அடியில் 14 * 04 * 2005

**அமரர் வைத்திலிங்கம் நகுலேஸ்வரன்**
(ராசன்)

ஆருயிர்த் தந்தையாய் தன்னைக்
கரைத்து எமது உயர்வுக்காய்
தன்னை அர்ப்பணித்த எம்
குலவிளக்கே! நீங்கள் எம்மைப் பிரிந்து
ஓராண்டு ஆகிற்றோ!.....

கடவைப்புலம்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(சு/48652) (39-19-14)

## முதலாம் ஆண்டு நினைவு

மண்ணகம் 12 * 05 * 1933



விண்ணகம் 15 * 03 * 2005

**திருமதி செல்வரத்தினம் பத்மாவதி**

திதி: பூர்வ பஞ்சமி, (02.04.2006)


அம்மா என்று அழைக்காத உயிர் இல்லையே!
அம்மாவை வணங்காத உயர்வில்லையே!
அன்பு எனும் அகல் விளக்கை ஏற்றிவைத்து
அதில் அறிவு எனும் உணர்வை
ஊட்டி விட்ட அம்மாவுக்கு!

அன்னாரின் இல்லத்தில் இன்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்தி பூஜையில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இராச வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (48866) (39-19-14)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 * 08 * 1923

மறைவு
02 * 04 * 1981

**அமரர் புத்திரர் சின்னையா** (ஆசிரியர்)

ஆண்டுகள் இருபத்தைந்து ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு நீங்கவில்லை - உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"பாக்கிய வாசா"
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (48861) (39-19-14)

- குடும்பத்தினர்.

மாபெரும் **யாழ். வர்த்தக கண்காட்சி -2006**




**பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!**



காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை

இடம்: யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :-
DREAM SOLUTIONS (PVT) LTD
275, JAFFNA ROAD, MANIPAY



## புதுமை மாதா ஆலய முகப்பு நவீன பாணியில் புனரமைப்பு

குருநகர்,ஏப்.2

குருநகர் புதுமைமாதா ஆலயத்தின் திருப்பலி நிறைவேற்றப்படும் முகப்புக் கோபுரம் முற்றாக இடிக்கப்பட்டு நவீன பாணியில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திருத்த வேலைகள் கடந்த ஒரு வருடமாக நடைபெற்று வருகின்றன. இது வரை புனரமைப்புப்பணிகளுக்கென சுமார் 35 லட்சம் ரூபா நிதிசெலவு செய்யப்பட்டுள்ளதாக குருநகர் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

இந்த ஆலயத்தின் புனரமைப்புவேலைகளுக்கு குருநகர்ப் பங்கு மக்களல்லாது சகல கத்தோலிக்க மக்களும் மற்றும் புதுமைமாதாவின் பக்தர்கள் அனைவரும் நிதியுதவிகளை வழங்கியுள்ளார்கள் என்றும் பங்குத்தந்தை மேலும் தெரிவித்தார். (எ-51)(26)

புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் குருநகர் புதுமைமாதா ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தை படத்தில் காணலாம். (படம்- குருநகர் செய்தியாளர்)

## கைதடியில் இன்று மாலை கலை விளையாட்டுத் திடல்

யாழ்ப்பாணம்,ஏப்.2

செயல்திறன் அரங்க இயக்கமும் கைதடி வடக்கு நவபுரம் மகளிர் குழுவும் இணைந்து நடத்தும் 'தேட்டம்' கலை விளையாட்டுத் திடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நவபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பதிவாளர் திருமதி ச.ஜெயந்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவி த்தி உத்தியோகத்தர் சி.உமாபாலனும் சிறப்பு விருந்தினராக செயல்திறன் அரங்க இயக்கத்தின் இயக்குநர் தே.தேவானந்தும் கலந்துகொள்வர்.(எ-202)(32)

## மட்டுவிலில் இடிதாக்கி சேதம்

தென்மராட்சி,ஏப்.2

மட்டுவில் பகுதியில் இரு இடங்களில் இடி தாக்கி சேதத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பகல் மின்னலுடன் கூடிய இடிமுழக்கம் ஏற்பட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டுவில் சிவன் கோயில் வீதியில் வீட்டின் அருகே இடிவீழ்ந்ததில் வீட்டுச் சுவர் வெடிப்பு ஏற்பட்டதுடன் மின்கலங்களும் சேதமடைந்தன.

மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோயில் வீதியில் தென்னமரம் ஒன்றின் மீது இடி வீழ்ந்ததில் மரம் இருந்த இடம் தெரியாமல் சிதறிப் பறந்துள்ளன. அந்த இடத்தில் தென்னைமரத் தும்புகளே சிதறிய நிலையில் காணப்படுகிறது. (3-117)(33)

## கண்ணீர் அஞ்சலி

எமது மூத்த லயன்ஸ் கழக உறுப்பினர்
லயன் எஸ். யோகானந்தராஜா (சுப்பிரின்டன், கைதடி - வயோதிபர் இல்லம்) அவர்களின் அன்புத் தாய்

**திருமதி வள்ளியம்மை** அவர்களின்


மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(48882) (39-11-14) சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

## தென்னிந்திய தெய்வீக திருத்தல யாத்திரை

### தரிசிக்கும் தலங்கள்

11 Days 10 Nights




*திருப்பதி, புட்டபர்த்தி, காஞ்சிபுரம் காமாட்சியம்மன், ஏகாம்பரஸ்வரர் வரதராஜப்பெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லைக்காளி அம்மன், திருவாரூர், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, பூம்புகார், குற்றாலம், நாமக்கல் ஆஞ்சநேயர், அன்னை வேளாங்கன்னி, தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி உச்சிப்பிள்ளையார், ஸ்ரீ ரங்கம், பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளிக்குகை, நவக்கிரகக் கோயில்கள், திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவேனி சங்கமம், கன்னியாகுமரி அம்மன் ஆலயம், காந்திமண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம், திருவள்ளுவர் சிலை, கடலில் இயந்திரபடகு மூலம் சென்று பார்த்தல், திருவளைக்காவல் சிவன் கோயில், சமயபுரமாரியம்மன்.*

யாத்திரிகர்களுக்கு கொழும்பிலிருந்து இந்தியா சென்று வருவதற்கான விமான ரிக்கெற் சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டித் துணையுடனான பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.

**இத்திருத்தல யாத்திரை ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகும். ஏப்ரல் 12ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.**

57500/=

தங்களுக்குத் தேவையான அனைத்து விதமான சர்வதேச, உள்நாட்டு விமான ரிக்கெற்றுகளை கொழும்பு விலையில் விசேட கழிவுடன் யாழ் நகரிலேயே பெற்றுக் கொள்ளமுடியும்.

**அரிய வாய்ப்பு தவறவிடாதீர்!**

கொசி ருர்ஸ் & ரவல்ஸ் Pvt.
இல. 15, சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222-7100

Metro Travel & Tours (pvt) Ltd
403, 1/2, Galle Road, Wellawatta. Col -06
Tel:2362766, 2361937, 2361672
Fax:2361888 (சி/48664)

*(இலங்கை உல்லாசப் பிரயான சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்).*



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் பங்குனித் திங்கள் 20 ஆம் நாள் திங்கட்கிழமை (03.04.2006) அன்று மு.ப. 10.47 மணிமுதல் 12.46 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இலக்கம் 420, காங்கேசன்துறை வீதி, சிவன்கோயிலடி யாழ்ப்பாணத்தில் அமையப் பெற்ற

**சிம்மவாகினி ஓவ் (F) செற் பிறிண்டேஸ்**

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இறையருள் கை கூடியுள்ளதால், அத்தருணம் தாங்கள் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
(48880) (39-11-14) **சி.விநாயகமூர்த்தி** குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நாகமணி தம்பிராஜா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மட்டுவிலை வதிவிடமாகவும் தற்போது கனடா ரொறன்ரோவில் தமிழர் கூட்டுறவு இல்லத்தில் வசித்து வந்தவருமான நாகமணி தம்பிராஜா அவர்கள் 29.03.2006 புதன்கிழமை சிவபத மடைந்து விட்டார்.

அன்னார் நாகமணி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் செல்வரத்தினத்தின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புச் சகோதரரும் ஸ்ரீகந்தராசா, ஸ்ரீசண்முகராஜா, ஸ்ரீமகேஸ்வரிதேவி, ஸ்ரீகரிகாலன், ஸ்ரீநகுலேஸ்வரிதேவி, ஸ்ரீகரன், ஸ்ரீமனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்ஷினி, யசோதா, ஸ்ரீசந்திரமோகன், நிஷாந்தினி, ராஜித், சிவாஜினி, சுகந்தி ஆகியோரின் அருமை மாமனும் ஸ்ரீரமணா, அர்ச்சனா, அஸ்வரியா, கரிகஸன், ஸ்ரீகாந்த், ஸ்ரீஜயந்த், ஸ்ரீயாதவன், ஸ்ரீசுபாகன், பௌர்ணா, கீர்த்தனா, சுஜீனா, ஷர்மிலன், ஜிலானி, நனுஜா, கோபிதா, ஸ்ரீபிரபா, ஸ்ரீஜசிக்கா ஆகியோரின் பிரியமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (01.04.2006) சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 9 மணி வரையும், இன்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிமுதல் 9 மணிவரை **Midland & Sheppard** சந்திப்பில் **4164 - Sheppard aveeast** இல் அமைந்துள்ள **Ogdon funeral home** இல் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் நாளை (03.04.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை **Parliament & Wellesley** சந்திப்பில் உள்ள **St. James** மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டுத் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு:
**மனைவி 416-537-6884, மகன் ஸ்ரீ 416-652-8739, கரிகாலன் 416-602-2500, மனோ 416-707-6258**

(சி/48661)(32)

## தினம் ஓர் அதிர்ஷ்டசாலி...

Annai Nagaa Food City
For all your daily needs

அன்னை நாகாவின் புத்தாண்டு விசேட சலுகைகள்
நீங்களும் ஒரு வெற்றியாளராக இன்றே விரையுங்கள்
அன்னை நாகா பூட்சிற்றி



மார்ச் 19 முதல் மே 30 வரை

இல. 175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பெ.222 5515

**இவ்வார அதிர்ஷ்டசாலிகள்:**
*1) ஆன் சுபாசினி - மானிப்பாய் 2) பி.நிர்மலா - யாழ்ப்பாணம் 3) பி.பகீரதன் - சுன்னாகம்*
*4) வி.சந்திரகுமார் - கொக்குவில் 5) பி.பாலசுப்பிரமணியம் - யாழ்ப்பாணம்*
*6) சி.என்.மதிவதனன் - சுண்டுக்குளி 7) என்.முத்தழகன் - பண்டத்தரிப்பு*

## ரூபா 40 கோடி செலவில் கொடிகாமத்தில் வைத்தியசாலை

சாவகச்சேரி,ஏப்.2

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை சுமார் 40 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கும் பணிகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளன.

அலுவலகக் கட்டடம், வெளிநோயாளர் சிகிச்சை மண்டபம் ஆகியவையும் அவற்றுடன் கூடிய வசதிகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. (ஒ-31)(26)

## ஆனைவிழுந்தானில் லயன்ஸ் வீடு அமைப்பு

தென்மராட்சி,ஏப்.2

சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென பருத்தித்துறை ஆனைவிழுந்தான் பகுதியில் வீடுகள் அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

இத்திட்டத்தினை மேற்கொள்ள பத்துக் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினை விரைவில் செய்து முடிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3-117)

## அடையாள அட்டைகள் வந்துசேர்ந்தன

தென்மராட்சி,ஏப்.2

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணபித்த ஒரு தொகுதியினரின் அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் உரியவாளருக்கு அடுத்த வாரம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. (3-117)(32)

## கல்விச் செயலமர்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்தினர் ஜி:சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு புவியியல், வரலாறு ஆகிய பாடங்களுக்கான செயலமர்வினை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் புவியியல் பாட மும் மறுநாள் வரலாறு பாடமும் நடத்தப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இச்செயலமர்வில் கலந்துகொள்ளவிருப்பதால், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (3-117)

## இந்து மயானம் புனரமைப்பு

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் 15 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை யாழ்.அரச அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ள தென்மராட்சி பிரதேச செயலரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜினால் வழங்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபா செலவில் மயானத்தில் அமைக்கப்பட்டு வரும் மண்டபத்தை 40அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட மண்டபமாக அமைப்பதுடன் சேதமடைந்த மதில் சுவர்களைப் புனரமைக்கவும் நிதி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-117)(32)


## மணமக்களை வாழ்த்து



புலோலியைச் சேர்ந்த
கணபதிப்பிள்ளை தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சுதாகரனுக்கும்**

அச்சுவேலியைச் சேர்ந்த
சிவபாதம் தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரியும்
எங்கள் குடும்பத்தின் மூத்த புத்திரியுமாகிய
திருநிறை செல்வி
**வைஹரிக்கும்**

அச்சுவேலி உலவிற் கரைக்குளம் சித்திவிநாயகர் துணைகொண்டு லண்டன் மாநகரின் **New Ham Town Hall** இல் இன்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மணமங்கள விழாவில் தம்பதியினரை
*'பெருகிய பதினாறு செல்வமும் பெற்றுப் பெருமையாய் வாழ்க!*
*பெறற்கரும் அரிய தம்பதியராகிப் பெம்மான் அருளூற்று வாழ்க!'*
என வாழ்த்துகிறோம்.

(48707)(24.21.16.11)

வாழ்த்துவோர்:
திருமதி சத்தியவிமலாதேவி தம்பித்துரை
"திருத்தணிகை",
அச்சுவேலி தெற்கு.

அம்மம்மா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, சூரி மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.


## கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை செவ்வாயன்று ஸ்ரான்லி வீதியில் திறப்பு

கொமர்ஷல் வங்கியின் புதிய வங்கிச்சேவை நிலையம் ஒன்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.இந்த நிலையம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு 'இல. 62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையத்தில், வதிவோர், வதியாதோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறுவர்களுக்கான அருணலு, இசுறு, டொட்கொம், டொட்கொம் ஸ்பின் கணக்குகள், தொலை பேசி வங்கிச்சேவை, செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை, இன்ர நெற் வங்கிச் சேவை, பணப்பரிமாற்ற சேவை போன்ற பல சேவைகள் இடம்பெறும். (எ-202)


ஜெய்குருதேவ்



உலகப்புகழ்பெற்ற ஆன்மீகக் குரு
தவத்திரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்
மகா சத்சங்கம்
(கானம், தியானம், ஞானம் இவைகள் சங்கமிக்கும் ஓர் இனிய மாலைப்பொழுது)

நாள்: 07.04.2006 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி
இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்.

30 லட்சம் மக்கள் கலந்துகொண்ட வாழும் கலை நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிக்குப் பிறகு குருஜி கலந்துகொள்ளும் முதல் சத்சங்கம். அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!!

ஜாதி, மத, இன பாகுபாடின்றி அனைவரும் குடும்பசகிதம் வருக! அருளாசி பெறுக!!

அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்!

அனுமதி இலவசம்

(48877)

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம். யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0779059549, 0779059544



# VACANCIES

JOIN THE LEADING TEAM

- யாழ்ப்பாணம் • கொட்டாஞ்சேனை • திருகோணமலை
- நெல்லியடி • வெள்ளவத்தை • கண்டி
- சாவகச்சேரி • மட்டக்குளி • வத்தளை

**TRAINEE INSTRUCTORS Male/Female**
- Should hold a recognized diploma
- Good communication skill in English

**STUDENT RELATION OFFICER Female**
- Excellent communication skill in English
- Positive Attitude of Approach

**INSTRUCTORS Male/Female**
- Should have working experience in the same field
- Subject areas are application packages, graphic designing packages and programming languages

**LECTURER-Full time Male/Female**
- Should posses working experience in the same field
- Subject areas are VB, Oracle, Java, Scripts. .net , C & C++

மேல் குறிப்பிட்ட பிரதேசங்களில் பணிபுரிய விரும்புவோர் தங்களுடைய சுயவிபரக்கோவையில் பணிபுரிய விரும்பும் இடத்தை குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(C/48659)

The Human Resources Manager
**ASIAN COMPUTER SYSTEMS**
#200, George R. De. Silva Mawatha, Colombo - 13
E-mail: asiandedu@dialogsl.net


## மரண அறிவித்தல்

### திருமதி கைலேஸ்வரன் சந்திரகலா (வசந்தி)



சண்டிலிப்பாய், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட கைலேஸ்வரன் வசந்தி அவர்கள் 31.03.2006 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கைலேஸ்வரனின் அன்பு மனைவியும் நீருஜன் (U.K.), கௌசிகன் (U.K.), ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கனகரெத்தினம் மற்றும் மனோறஞ்சிதம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி, தனலெட்சுமியின் அன்பு மருமகளும் சிவசோதிப்பிள்ளையின் ஆசைப்பேர்த்தியும் பாலன் (பிரான்ஸ்), ரவி(U.K.), ஈசன் (U.K.), றஞ்சினி (U.K.), தயா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அமுதா (பிரான்ஸ்), சுதா (U.K.), மேனகா(U.K.), சந்திரபாலன் (U.K.), உதயகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற பாலசிங்கம், திருமதி மனோகரன் கமலாதேவி (மலேசியா), திருமதி தவராஜகுமார் அம்பிகாதேவி, நகுலேஸ்வரன் (இந்தியா), லோகேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி குணசிங்கம் பரமேஸ்வரி, திருமதி தெய்வேந்திரம் விக்கினேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மில் ஒழுங்கை, பிரம்படி, கொக்குவில்.
T.P.0044 208 3360 342 (48879)(21.11.16)

தகவல்:
இ.ரமேஸ்

# ஈரானில் பலத்த நிலநடுக்கம்! 70 பேர் பலி! 1000 பேர் காயம்



தெஹ்ரான்,ஏப்.2

ஈரானின் மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட பயங்கரமான நில நடுக்கத்தில் சுமார் 70 பேர் உயிரிழந்தனர். மேலும் ஆயிரம் பேர் படுகாயமடைந்தனர்.

ஈரானின் மேற்குப் பகுதியில் ஈராக் நாட்டை ஒட்டி உள்ளது லோரிஸ்டான் மாகாணம்.

இங்குள்ள டூரோத் மற்றும் புருஜெர்த் நகரங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் அதிகாலை 4.47 மணிக்கு 6 என்ற ரிக்டர் அளவில் பயங்கரமான நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் 330 கிராமங்களில் உள்ள 40 முதல் 100 சதவீத வீடுகள் சேதம் அடைந்தன. இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து இரண்டு நில நடுக்கங்கள் ஏற்பட்டன.

வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இந்தத் திடீர் நில நடுக்கத்தில் அப்பகுதியில் வசித்து வந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு வீடுகளை விட்டு ஓடினர். தற்போது அவர்கள் வெட்டவெளியில் தங்கியுள்ளனர். இந்த நில நடுக்கத்தால் டூரோத் நகரில் மின்சாரம் துண்டிக் கப்பட்டுள்ளது.

இடிபாடுகளில் சிக்கி இதுவரை 70 பேர் இறந்துள்ளனர். மேலும் ஆயிரம் பேர் படுகாயம் அடைந்தனர். இறந்தவர்களின் எண்ணிகை 100 ஆக உயரலாம் என ஈரானின் உள்துறை அமைச்சக மக்கள் தொடர்பு இயக்குநர் கூறினார்.

மீட்புப் பணிகள் வேகமாக நடந்துவருகின்றன. காயமடைந்தவர்கள் லோரிஸ்டான் மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)(30)

## இந்தோனேசியா, நியூசிலாந்து நாடுகளில் பலத்த நில அதிர்வுகள்

ஜகார்த்தா, ஏப். 02

இந்தோனேசியா, நியூசிலாந்து, சீனாவில் பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் அளவு ரிக்டர் அளவில் 6.1 என பதிவானதாக டில்லியில் நிலநடுக்க ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது. இந்த நிலநடுக்கம் கெபுலோன் தலாவ்டு தீவுப் பகுதியில் இந்திய நேரப்படி சனிக்கிழமை அதிகாலை 2.45 மணிக்கும் உள்ளூர் நேரப்படி 5.14 மணிக்கும் ஏற்பட்டது என்றும் அது தெரிவித்துள்ளது.

நியூசிலாந்தின் ரவூர் தீவு அருகே தெற்கு பசிபிக் கடலில் சனிக்கிழமை அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு மானியில் 5.2 எனப் பதிவானது. கெர்மாடிக்தீவுகளைச் சேர்ந்த ரவூலுக்கு கிழக்கே 100 கி.மீ. தொலைவில் இது மையம் கொண்டிருந்தது.

சீனாவில் வட கிழக்கில் உள்ள ஜிலின் மாகாணத்தில்லாவோயிங்டாய் கிராமத்தில் மையம் கொண்டு வெள்ளிக்கிழமை இரவு நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுமானியில் 5 எனப் பதிவானது. நிலநடுக்கத்தின் பாதிப்பாக இந்தக் கிராமத்தில் சில வீடுகளின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டது. சிலகிடங்குகள் இடிந்தன. (ஐ)

## தமிழ் நாடு திண்டுக்கலில் லேசான நில நடுக்கம்

தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தின் 3 கிராமங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவு மிதமான அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

புலியூர்நத்தம், குழிப்பட்டி, இடையன்குளம் ஆகிய கிராமங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

பெரும் பாறை உருண்டு வருவது போன்ற சத்தத்தைக் கேட்டதாக இந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர். வீட்டுச் சுவர்கள் அதிரத் தொடங்கியதும் பலர் பீதியில் வெளியே ஓடி வந்தனர். சில வீடுகளில் சுவர்களிலும் தரைப்பகுதியிலும் விரிசல் ஏற்பட்டது. (ஐ)

## விருத்தாசலம் தொகுதியில் விஜயகாந்த் போட்டி

சென்னை, ஏப். 02

நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் விருத்தாசலம் பேரவைத் தொகுதியில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தலைவர் நடிகர் விஜயகாந்த் போட்டியிடுகிறார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து ஆண்டிப்பட்டியில் தே.மு.தி.க. சார்பில் வி.எஸ். சந்திரனும், தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியை எதிர்த்து சென்னை சேப்பாக்கத்தில் எஸ்.ஜெயக்குமாரும் போட்டியிடுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 140 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய முதல் பட்டியலை அக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் வெள்ளிக்கிழமை வெளியிட்டார்.

இதர தொகுதிகளுக்கு ஏப்ரல் 6ஆம் திகதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப் படும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)



மாவை கொல்லங்கலட்டி

அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

### மணவாழக் கோல உற்சவம்

நாளை (03.04.2006) திங்கட்கிழமை மூல தேவருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேக ஆராதனைகள், திருவூஞ்சல் திருவிழா நடைபெற்று பின்பு அன்னதானமும் இடம்பெறும்.

பக்தர்கள் முற்பகல் 9 மணிக்கு தெல்லிப்பளை தடைமுகாமில் இருந்து அழைத்து செல்லப்படுவர்

உபயம்: T.S. அப்புத்துரை (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்) (48890) (54-45-12) - அறங்காவலர்.

## மூன்றாம் வருட நினைவுகள்

தோற்றம் 26 - 03 - 1949



மறைவு 07 - 04 - 2003

### திருமதி தளையசிங்கம் பவளராணி

அன்பும் பண்பும் நிறைந்த எம் தெய்வமே! - இன்று எமை விட்டு பிரிந்து மூன்றாண்டுகளாயினும் என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்....

இல. 56/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
T.P.:0776055137 (48896) (54-45-12) குடும்பத்தினர்.


## வேலை வாய்ப்பு

இனிப்பு வகை, மிக்ஸ்சர் வகை தயாரிக்கத் தெரிந்தவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு.

பழக விரும்புவர்களும் வேறு சிறு கைத்தொழில் தெரிந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:
அம்புலி இனிப்பகம்
இல. 127, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி,
T.P. 021 222 6660. (48892)

## தேவை

கணனி இயக்குநர்கள், தொலைபேசி இயக்குநர்கள் தேவை. அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரடியாகவோ தபால் மூலமோ உடன் தொடர்பு கொள்ளவும்.

கணேசன் கொமினிக்கேசன்ஸ்
கே.கே.எஸ். வீதி, கொக்குவில். T.P.222 2585. (48884)

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
மெர்க்குரிப் பூக்கள்
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.30, 6.30, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

பிரபு, முரளி, வினித் நடித்த
கலைஞரின்
பாசக்கிளிகள்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

நந்தா, தேஜாசிறி, மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
கோடம்பாக்கம்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானம்மா அந்தோனிப்பிள்ளை



நவாலியைப் பிறப்பிடமாகவும் 12/4, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா அந்தோனிப்பிள்ளை அவர்கள் 31.03.2006 வெள்ளிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுவானி தம்பதியரின் புத்திரியும் மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி மரியம்மா ஜெயபால், திருமதி நேசம்மா ஈசாக்கு ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரனி ஜீவானந்தன் (சுவிஸ்), தேவானந்தி (சுவிஸ்), கொன்சி யோகானந்தி (பிரான்ஸ்), நன்சி ரூபானந்தி (திருகோணமலை மாவட்ட செயலகம்), அன்ரனி சதானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஜீவராணி (சுவிஸ்) லோகானந்தன் (சுவிஸ்) கிறிஸ்டியன் (பிரான்ஸ்), ஜோர்ஜ் (திருகோணமலை), உமா (கனடா) ஆகியோரின் அருமை மாமியும் ஜெனிபர், ஜெனஸ்டின்/டிஷான் (சுவிஸ்), மதுஷா, பிரின்ஸ் (பிரான்ஸ்), ஷிறோமி, ஷிறேன் (திருகோணமலை), ஷொபித்தா, ஷிராணி, டானியல் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா கோவிலில் நாளை (03.04.2006) பிற்பகல் 3 மணியளவில் இறுதி ஆராதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 12/4, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (48894) (54-45-12)
தகவல்: திருமதி. நன்சி ரூபானந்தி (மகள்).

### திருமதி மரியாம்பிள்ளை லூறுதுஅம்மா

கரம்பனைப் பிறப்பிடமாகவும் இல.5, 5ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை லூறுது அம்மா 31.03.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து - சவரிஆச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் திரேசம்மா (கனடா), பெறுனோர்த்து (கனடா), இம்மனுவல் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தேம்பாமலர் மற்றும் சோதிமலர், சூரியகுமாரி, ஸ்ரான்லி, காலஞ்சென்ற அன்புராணி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஏபிரகாம் மற்றும் இன்மனுவல் பிள்ளை, காலஞ்சென்ற பிறவுன் கிறிஸ்ரியன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் உடல் இன்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து மு.ப. 10.30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு கரம்பொன் புனித அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு கரம்பொன் சேமக்காலையில் இறுதி நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, 5ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (48893) (54-45-12)
தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் அன்னலட்சுமி அவர்கள் நேற்று (01.04.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் தனலட்சுமி, காலஞ்சென்ற நவரத்தினம் (கிராம சேவையாளர், சித்தங்கேணி), சந்திரலேகா (ஜேர்மனி), யோகரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் வாசுகி (ஆசிரியை, யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ), சபாலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற இரத்தினம், காலஞ்சென்ற இராசலட்சுமி, காலஞ்சென்ற சொர்ணம், சிறிநடராஜ், காலஞ்சென்ற மகாதேவன், மகாலட்சுமி, காலஞ்சென்ற சித்தானந்தன், சிவானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோகுலன், ராகுலன், பவித்ரா, அபிராமி, அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சித்தன்கேணி தபாற்கந்தோருக்கு அருகிலுள்ள அவரின் இல்லத்தில் இன்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
சித்தன்கேணி,
தொ.பே.: 0773611327 (48891) (54-45-12)
0779975237.
தகவல்: குடும்பத்தினர்

### திருமதி வீரக்குட்டி நீலாம்பிகை

காரைநகர், சடையாளியை வசிப்பிடமாகவும் இல. 324, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வீரக்குட்டியின் மனைவி நீலாம்பிகை 31.03.2006 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.04.2006) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 324, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம். (48895) (54-45-12)
தகவல்: மகன்மார்
வி.தனபாலன் (யாழ்ப்பாணம்),
வீ.பஞ்சலிங்கம் (கிளிநொச்சி)
T.P: 0713056027

# தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றுறுதியை கிழக்குத் தமிழர்கள் உணர்த்திவிட்டனர்!

## தேர்தல் பெறுபேறு குறித்து ரவிராஜ் எம்.பி. கருத்து

கொழும்பு, ஏப்.2

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உள்ளூராட்சித் தேர்தலில் அளித்த ஆதரவு தமிழ்த் தேசியத்தின் மீதும் குறிப்பாக வடக்கு - கிழக்கு நிலத்தின் மீதும் அவர்கள் கொண்டுள்ள பற்றுறுதியைத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக நேற்றுக் காலை ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பிரதேசங்களில் மாற்று தமிழ் கட்சிகள் ஒரேயொரு சபையில் தானும் வெற்றி பெறாதது தமிழ் தேசியத்திற்கு குந்தகமான எவரையும் அந்தப் பிரதேச மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் - என்பதைத் தெளிவாகக் காட்டி உள்ளது.

ஒட்டுமொத்தமாக இலங்கை முழுவதும் நோக்கும் போது இனவாத வெறியைக் கக்கிப் பேரினவாத அரசியலை நடத்துகின்ற மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுக்குச் சிங்கள் மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளின் மூலம் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வழங்கியுள்ள ஆணையை ஜனாதிபதியும், அரசியல் தலைவர்களும் கருத்திற்கொண்டு, இனவாத அரசியலை நடத்துகின்ற கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்து, இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுமூலம் துரித கதியில் தீர்வுகாண்பதற்காக இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு ரவிராஜ் எம்.பி. தெரிவித்தார். (ஐ-12-14)(30)



பாதுகாப்பு நிலைமைகளை அவதானிப்பதற்காக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரும் கூட்டுப்படைகளின் தளகர்த்தர் தயா சந்தகிரியும் 51ஆவது படையணி படையினரின் நலன்களைக் கேட்டறிந்தனர். படையினரால் மீட்கப்பட்ட ஆயுதங்கள் வெடிபொருள்களை தளபதிகள் பார்வையிடுகின்றனர். (ஐ)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்றத்தின் இந்த யோசனையின் அடிப் ... டையில் மக்களைக் குடியமர்த்தும் முன் ... பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ...

மீளக் ... மர விரும்பும் மக்களை இனங்காண்பது ... ர்பாக நேற்றைய கூட்டத்தில் ஆராயப் ... து.

மீளக் ... யமர விரும்புபவர்கள் தங்கள் விவரங்களை தமது பிரதேச கிராம சேவையாளர்களிடம் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் மீண்டும் ஒரு கூட்டம் நடைபெறும் என்றும்-

அக்கூட்டத்தில் மக்களின் விவரங்களை கிராம சேவையாளர்கள் சமர்ப்பிப்பர். அதன் பிறகு பட்டியல் தயாரிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்காப் படையினரும் துணை இராணுவத்தினரும் அப்பகுதிக்கு வந்து தாக்குதல் நடத்தும் நோக்கில் பதுங்கி இருந்தனர் என்றும்-

அப்போது அங்கு சென்ற போராளிகள் மீது படையினரும் துணை இராணுவக் குழுவினரும் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் எனவும் -

இத்தாக்குதலில் போராளி ஒருவர் காயம் அடைந்தார் - என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே வாகரை தோணிதாழ்ந்த கற்பகுதியிலும் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பல வீடுகள் சேதம் அடைந்துள்ளன. கால்நடைகள் சிலவும் கொல்லப்பட்டு விட்டன.

அப்பகுதிக்கு வந்த படையினரும் துணை இராணுவக் குழுவினரும் ஆர்.பி.ஜி. தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான இத்தகைய அத்துமீறிய தாக்குதல் சம்பவங்கள் கடும் கண்டனத்துக்குரியன என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் முறையிட்டுள்ளார்.

சம்பூர் நோர்வேத் தீவுப் பகுதியிலும் கடற்பகுதியில் மீனவர்களை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்தும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் எழிலன் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ- 12-14-190)

## அடுத்த கட்டத்துக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்தவின் கரங்கள் ஏதோ வகையில் சிங்கள மக்களால் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்போது அவர் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கமுடியும். உலகமும் ரணிலை விட்டுவிட்டு மஹிந்தரைப் பயன்படுத்தமுடியும். அவர் என்ன செய்யப் போகின்றார் என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம். அவருக்கு வேண்டிய அவகாசத்தைக் கொடுப்போம். அதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்தான். எனவே எங்களுடைய அவகாசத்தை நாங்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

எந்தெந்த வழிமுறைகளில் பிரச்சினையைத் தீர்க்க முடியுமோ அந்தந்த வழிமுறைகளில் ஒவ்வொரு படிமுறையாக முயற்சிக்க வேண்டும்.

முன்பு எந்தத் தேர்தலை வெறுத்தோமோ இன்று அது எங்களுக்கு மிகப் பெரிய தேவையாக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் என்பது எங்கள் ஊரகங்களை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது. இந்தத் தேர்தலை எதிரி திசை திருப்பிவிடமுடியாதவாறு ஒருமித்த நிலையில் - பலத்தில் - போராடுவோம். எங்கள் ஒருமித்த குரலாக உலகின் முன் கொண்டு செல்லப்போகின்றோம்.

பலஸ்தீனத்தில் ஓர் அடி நிலம் கூட இன்னும் மீட்கப்படவில்லை. 18 வயதில் போராளியாகச் சேர்ந்தவன் 60 வயதில் இன்று காயங்களுடன் இருக்கிறான். 18 வயதுப் பெடியங்கள் எல்லாம் வெடித்துச் சிதறுகிறார்கள். எத்தனையோ வருடகாலமாகப் போராடும் ... வர்கள் எதைப் பற்றியும் சிந்திக்காமல் - ... ரைப் பற்றியும் யோசிக்காமல் - தங்கள் வைராக்கியத்தில் போராடுவதே ஒரே வழி என்று போராடுகிறார்கள்.

உலகம் முழுமையாகத் தலையிட்டும் கூட அவர்களுக்கு தீர்வு வழங்க முடியாத நிலை உள்ளது. நாங்கள் அப்படி அல்ல. புதிய பாதை ஒன்றை எடுத்துக்காட்டி உள்ளோம். போட்டியிடவேண்டி எதுவந்தாலும் அவற்றில் போட்டியிடுவோம். போட்டிபோட்டு வெற்றியை எடுத்துச் செல்வோம். கடைசித் தருணத்தில் சொல்வோம் தீர்க்க வாறீர்களா இல்லையா என்று. அடுத்த களத்துக்குப் போவோம் வா... வந்து தீர்மானி என்று நாங்கள் சொல்கின்றபோது உலகம் ஒரு கணம் முடிவை எடுக்கத்தான் வேண்டும். அந்தக் கணம்தான் எமது வெற்றிக் கணமாக இருக்கும் அதனைத் தீர்மானிக்கின்ற பொறுப்பை எங்கள் தேசியத் தலைவர் எடுத்திருக்கின்றார்.

- இப்படி பாலகுமாரன் தெரிவித்தார். (ஐ-7)(22)

## ஒட்டுப்படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தத்துக்குத் தயாராகவே உள்ளார். இது இயற்கையானது. ஆயினும் அவர்களைக் கேட்டால் இல்லையென்று மறுக்கின்றார்கள்.

டிசெம்பர் மற்றும் ஜனவரி மாத வன்முறைகளின் போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிந்துவிடுமோ என நினைத்தேன். ஆனால், அது காப்பாற்றப்பட்டு விட்டதன் மூலம் இரு தரப்பினரும் அமைதிவழித் தீர்வை விரும்புவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு இராணுவ வழித்தீர்வு ஏற்படாது. ஏப்ரல் பேச்சுகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது. யுத்த நிறுத்தம் ஒரு நிரந்தரத் தீர்வு அல்ல - என்று அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ-12-14)(30)


## விற்பனைக்கு



இரும்பு தொழிற்சாலை உரிமையாளர்களே!
உங்களுக்குத் தேவையான இரும்பு வகைகளை சகாய விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

(46813)

N.K.S. காட்வெயர்
இல. 631, K.K.S. வீதி,
(மனோகரா சந்திக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.





விஷேட சலுகை

எப்பிரதேசத்திலும் வீட்டில் இருந்தவாறு உரையாடக் கூடிய முறையில் டயலொக், மொபிரெல் மேசைத்தொலைபேசிகள் பைக்கேச் இணைப்புக்களுடன் குறைந்த செலவில் பொருத்தித்தரப்படும்.

8900/=

* மொபிரெல் 300/=, டயலொக் 500/= பைக்கேச்சுகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
* உத்தரவாதம் உண்டு.
* அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகள், அதற்கான உதிரிப் பாகங்கள் விற்பனையும், பழுபார்த்தலும்.
* சகலவிதமான கையடக்கத்தொலைபேசிகளும் UnLock செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: நியூ பவர் செலுலர் டிரேடிங் கம்பனி
205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773-518330
077-6660289

(48889)
(54-12-11)


## மரண அறிவித்தல்

### சின்னப்பு பொன்னுத்துரை



இணுவிலைப் பிறப்பிடமாகவும் நந்தாவில், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு பொன்னுத்துரை அவர்கள் நேற்று (01.04.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் ஜெயக்குமாரி (வவிதா), அருட்குமரன், சசிகுமாரி, திருக்குமரன், றஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை, நந்தாவில்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (48897)

தகவல்:
குடும்பத்தினர்.


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


BREWED FROM THE FINEST
IMPORTED MALT AND HOPS
KINGS
பருகவும்
பரிசுபெறவும்!
ரூ.100,000/=
ரூ.10,000/=
KINGS STOUT
இலவசம்!
BISON
XXXTRA STRONG
KINGS
கிங்ஸ்
பெரிய
லாகர்
KINGS
LAGER
கிங்ஸ் பியர் மூடிகளில்
10 கிரீடங்கள் இருந்தால்
ரூ. 100,000/=!
ஒரு கிரீடத்துக்கு
ரூ. 10,000/=!
கிங்ஸ் பெயர் மட்டுமிருந்தால்
பெரிய லாகர் ஒன்று!
ரசனையின் ராஜ மகுடம்!

# இலங்கையில் வர்த்தக உறவுகளை மேம்படுத்த மலேஷியா நடவடிக்கை

## இலங்கைக்கான தூதுவர் கண்டியில் தெரிவிப்பு

"இலங்கைக்கும் மலேஷியா நாட்டுக்கும் இடையிலான சிநேகபூர்வமான தொடர்புகள் வர்த்தக ரீதியாகப் பலம் அடைந்து வருகின்றன. இந்த வர்த்தக உறவுகளை மேம்படுத்த மலேஷியா தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும்."

- இவ்வாறு மலேஷியா நாட்டின் தூதுவரான ஜனாபா நஸ்ரியா ஹுசைன் தெரிவித்தார்.

மலேஷிய தூதுவர் அண்மையில் கண்டியில் மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவவைச் சந்தித்து உரையாடியபொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு ஜனாபா நஸ்ரியா தொடர்ந்தும் கூறிய தாவது -

மலேஷியாவில் தயாரிக்கப்படும் உரம் உட்பட தொலைபேசி வசதிகள் தொடர்பான உதவிகளையும், சேவைகளையும் இலங்கைக்கு எமது நாடு வழங்கி வருகின்றது. இந்நாட்டில் வர்த்தக ரீதியாக பல அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும், ஏனைய வளங்களும் இருக்கின்றன. இவற்றை நன்கு பயன்படுத்துவதன் மூலமே பொருளாதாரத்தை வளப்படுத்த இயலும். எமது நாடு கல்வியில் முக்கிய கரிசனை கொண்டுள்ளது. இத்தகைய பரந்துபட்ட கல்வியை இலங்கைக்கும் பெற்றுக்கொடுப்பதில் நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். குறிப்பாக சிறுவர் பாடசாலை போன்ற அபிவிருத்திப் பணிகளுக்கு உதவ நாம் தயாராக இருக்கிறோம்.

கண்டிப் பிரதேசம் வனப்பு மிக்க இடமாகும். இப்பிரதேசத்தில் பாதைகள் புனரமைப்புக்காக எமது நாடு நிதியுதவி வழங்கியுள்ளது. பல்லின மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் புரிந்துணர்வுடன் அனைத்து மக்களும் வாழ்ந்து காட்டும் முறையானது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்நிலையில் எமது இரு நாடுகளுக்கிடையிலான தொடர்பு வலுப்பெறவும், நல்லுறவையும், புரிந்துணர்வையும் தொடர்ந்தும் இட்டுச்செல்ல எனது கண்டி விஜயம் உதவும் என நம்புகிறேன். - என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கண்டிப் பிரதேச சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக மலேஷியா நாடு முன்வர வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

இந்த உரையாடலின்போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. இயக்கத்தின் தேசியத் தலைவர் எம்.எம். ஹலீம்தீன், அதன் செயலாளர் ஜிப்ரி ஹனீபா உட்பட வேறு பிரமுகர்களும் பிரசன்னமாகி இருந்தனர்.



கொமர்ஷல்வங்கியில் 'அருணலு' சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் சிறுவர்களில் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாக கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கலந்து சிறப்பித்த யாழ். ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் அதிபர் திரு. செ.சிவானந்தராஜா அவர்களையும் சுன்னாகக் கிளையின் உதவி முகாமையாளர் நா.சாந்தசொரூபன் அவர்களையும் பரிசுபெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம். (3)



மக்கள் வங்கியின் பிராந்திய பொதுமுகாமையாளர் அச்சுவேலிக்கு விஜயம் செய்தபோது அவரது சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. பிராந்திய பொதுமுகாமையாளர் து.ரகு அவர்களுக்கு அஞ்சலா மெடிக்கல் சென்ரர் ஸ்தாபகர் டாக்டர் க.தங்கத்தாமரைச் செல்வம் பொன்னாடை போர்த்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம், உதவி முகாமையாளர் திருமதி ஆர்.எம். ஏ தவநாயகம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்-அச்சுவேலிச் செய்தியாளர்)



காரைநகர் இலங்கை வங்கிக் கிளையினால் 'சூக்ஸ்ம' கடன் திட்டத்தின் கீழ் பனிப்புலம் கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் காலையடி மறுமலர்ச்சி மன்ற மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

காரைநகர் இலங்கை வங்கி கிளை உத்தியோகத்தர் எஸ். பகீரதன் பயனாளி ஒருவருக்கு கடன் வழங்குவதையும் வங்கி முகாமையாளர் தா. குகநேசன், கிராம சேவையாளர் எஸ். ஜீவராஜ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்- காரைநகர் செய்தியாளர்)



'சிலிங்கோ' ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையில் காப்புறுதி பெற்றிருந்த கரவெ[illegible]ச் சேர்ந்த சபாரட்ணசர்மா என்பவரின் [illegible]ைதை அடுத்து அவருக்குரிய இழப்பீட்டு[illegible]ாகையான 6 இலட்சம் ரூபாவுக்கான காசோலை அவரின் மனைவி எஸ்.சங்குவேணி அம்மாவிடம் கையளிக்கப்பட்டது.

காசோலையை கிளைமுகாமையாளர் து.நிரோஜன் வழங்குவதையும் அருகில் கிளை விற்பனை நிறைவேற்றுநர் ஜெ.பிரதீப் மற்றும் ஆலோசக மேற்பார்வையாளர், கே.குகநேசன், விற்பனை ஆலோசகர் எஸ். இன்பக்ரன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

(படம் : வடமராட்சி கிழக்கு செய்தியாளர்)



அச்சுவேலி இலங்கை வங்கியின் புதிய கட்டடத்திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

வங்கியின் புதிய கட்டடத்தை முன்னாள் பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் நாடாவை வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் ரீ.ஏ.தேவராஜா, ஆசி உரை வழங்கிய வல்லை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு, அச்சுவேலி வங்கியின் முகாமையாளர் எஸ்.இந்திரகுமார் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம் : அச்சுவேலி செய்தியாளர்)



கட்டிட நிர்மாணத்துறையில் 9 வருட அனுபவத்தில்

தலைநகரில் தலைசிறந்த மாடி மனைகளை அமைப்பதில் முன்னோடிகளான

# Metro Group

(நிர்மாணப் பணிகள் நடை பெற்றுக்கொண்டிருக்கும் திட்டங்கள்)



இல.51,37வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06.

இல.04,இராமகிருஷ்ணா வீதி, கொழும்பு-06.

இல.10,37வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06. (அலகு 02)

(குடிபுகத்தயார் நிலையிலுள்ளன)



அழைக்கவும்...

0777-271467

Piccaso Ads

இல.12, ஹார்மர்ஸ் அவனியூ, கொழும்பு-06.

இல.10,37வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06. (அலகு 01)



Metro Group
(A BOI Approved Company)
379, 2/2, Galle Road, Col -06,
T.P : 2361351, Fax : 2361919.
Website: www.metrohomes.lk

# பான்வெல்கட்ட
கோமாரிக்கா

ஆரோக்கியமான.வசீகரமான.
மென்மையான
சருமத்தை பெற
பான்வெல்கட்ட சவர்க்காரத்தை
பாவியுங்கள்.இது
சுருக்கங்கள்.வறண்டதோல்
ஏற்படுவதை தடுக்கும்.



பான்வெல்கட்ட
கோமாரிக்கா

விஷக்கிருமிகளை அழிக்கவல்ல
ஆயுர்வேத வாசனை சவர்க்காரம்

இது ஒரு சித்தாலேபங் தயாரிப்பு

ஹெட்டிகொட இண்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்,
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465

வனிக்கல்,
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.,
தொபே: 021 222 6291ன 0121 222 2445

# சொக்லட், வனிலா சுவையூட்டப்பட்டது



Action
Nutritional Food Drink



போஷாக்கு நிறைந்த பானம்




Ingredients:
Non - fat milk, whole milk, malto dextrin, whey powder vitamins, minerals and permitted flavour (vanilla chocolate)

Action இன் போஷணை அனுகூலங்கள்:

Action ஆனது 11 கனியுப்புக்கள், 13 விட்டமின்கள், புரதம், காபோவை திரேற்று, கொழுப்பு அடங்கலாக 27 அத்தியாவசிய போஷணை பதார்த்தங்களை முழுக்குடும்பத்திற்கும் (1 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்) வழங்குகின்றது. அத்துடன் Action பீற்றா கரோட்டினையும் கொண்டுள்ளது.

தயாரிக்கும் முறை:
சூடாகவோ குளிர்பானமாகவோ நீங்கள் விரும்பியவாறு பருகலாம்.
1)நிரம்பிய இரண்டுகரண்டிகள் Action இனை 240ml டம்ளரில் போடவும்.
2)அதற்கு சிறிதளவு இளம் சூடான நீர் சேர்த்து கலக்கவும்.
3)மேலதிக நீர் சூடாகவோ, குளிராகவோ தேவையான அளவு சேர்த்து சுவையான பானத்தை தயாரித்துக் கொள்ளவும்.

Manufactured by:
Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741 Fax: 2636173 E-mail: astron@astron.lk

# 'யுனிவெக்' யாழ்.மண்ணுக்கு ஒரு வரப்பிரசாதம்.....!



'யுனிவெக்' நிறுவன முகாமையாளர் பா.சுரேஸ்குமார்

உலகமே கணனி மயமாகி நிற்கின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற பேதமின்றி இன்று சகல நாடுகளுமே கணனி பாவனையை வாடிக்கையாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் விவகாரம் தொடக்கம் உறவுகளின் தொடர்புகள் வரை கணனிப் பாவனை மேலோங்கி நிற்கின்றது.

அந்த வகையில் மேலை நாடுகள் கணனித் துறையில் பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளது எனலாம். ஆசிய நாடுகளில் இலங்கை கணனித் துறையில் இன்னும் தவழும் குழந்தையாகவே உள்ளது.

மேலை நாடுகள் தங்கள் கணனிப் பாவனைக்குத் தேவையான மென்பொருள்களை (Software) தாமே உற்பத்தி செய்து பயன்படுத்துகின்றன. இதனூடாகவே அது இன்னும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

எமது இலங்கையும் வளர்ச்சியடைந்த - முன்னேறிய - நாடாக மாற வேண்டும் எனில்

## கணனி மென்பொருள் பொறியியல் பூங்கா

இங்கும் நாம் மென்பொருள் தயாரிப்பில் ஈடுபடவேண்டும். அதற்கென பல நிறுவனங்கள் தோன்ற வேண்டும். அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் கணனிப் பாவனையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் முதன் முதலாக யாழ்.நகரப் பகுதியில் கணனி மென்பொருள் தயாரிப்பு நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதுதான் 'யுனிவெக் கணனி மென்பொருள் பொறியியல் பூங்கா'

இந்த நிறுவனத்தின் நோக்கம் உருவாக்கம் எதிர்கால இலட்சியம் போன்றவை தொடர்பாக நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் பால சுப்பிரமணியம் சுரேஷ்குமாரின் (B.Sc. Computer Seince, Bengaloor University) செவ்வியை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

சாதாரணமாக கணனிக் கல்வியை போதிப்பதற்காக அதாவது Ms office, D.T.P. போன்ற கற்கைநெறிகளைக் கற்பிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதே 'யுனிவெக்' சங்கானையில் 1998 ஆம் ஆண்டு இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவி சரோஜா சிவச்சந்திரனின் தூண்டுதலினாலேயே இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. அவருடைய நிறுவனத்தின் அங்கத்தவர்களுக்கு கணனிக் கல்வியைக் கற்பிப்பதன் ஊடாக அவருக்கும் நிறுவனத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர் மிக உறுதுணையாக இருந்தார்.

**கேள்வி :** மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பித்ததற்கான நோக்கம் பற்றி கூறுங்கள்?

**பதில் :** பெங்களூர் யுனிவ சிற்றியில் நான் மென்பொருள் பொறியியல் கல்வியைக் கற்பதற்காக இந்தியா சென்றிருந்தேன். பெங்களூரில் அதிகளவான மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. இலங்கையில் அவ்வாறான நிறுவனங்கள் இல்லை என்றே சொல்லலாம்.

பெங்களூரில் மென்பொருள் நிறுவனங்களைப் பார்க்கும்போது எமது நாட்டில் - எமது ஊரில் - இப்படி ஒரு நிறுவனத்தை உருவாக்கினால் என்ன என்ற கேள்வி என்னுள் எழுந்தது. என்னுடைய படிப்பை முடித்துக் கொண்டு ஊருக்கு வந்ததும் 'யுனிவெக் கணனி மென்பொருள் பொறியியல் பூங்கா' என்னும் இந்த மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பித்துள்ளேன்.

அதிலும் எமது பிரதேசத்தை தொழில் நுட்பத்துறையில் வளர்ச்சியடைந்த ஒரு பிரதேசமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கமும் யாழ்.நகரிலேயே இந்த நிறுவனத்தை ஆரம்பித்தேன்.

**கேள்வி:**இந்த நிறுவனத்தின் மூலம் எமது பிரதேசத்திற்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி......

**பதில்:** இந்த நிறுவனம் ஆரம்பிக்கும் போதே 100 பேரைச் சேர்த்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். அவர்களுக்கு கணனி மென்பொருள் தயாரிப்புத் தொடர்பான பயிற்சிகளை வழங்கி அவர்களைக் கொண்டே மென்பொருள்களைத் தயாரிக்கவுள்ளோம்.

இதன்மூலம் எமது பிரதேச இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள்.

வெளிநாடுகளில் இருந்து பல ஓடர்களைப் பெற்று இங்கு தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இதன் மூலம் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

அதுமட்டுமல்லாது உள்ளூர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான மென்பொருள்களைத் தயாரித்து வெளியிடவுள்ளோம்.

குறிப்பாக யாழ்பாணத்தின் வரலாறு, கலை, கலாசாரப் பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தும் இணையத் தளங்களையும் வடிவமைத்து வெளியிடவுள்ளோம்

வெளிநாட்டு நிறுவனங்கள் பலவற்றுடன் நாம் இணைந்து செயற்படவுள்ளோம்.

**கேள்வி:** வெளிநாட்டு நிறுவனங்களுடனான தொடர்பு பற்றி?

**பதில்:** நான் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தன் நோக்கமே எமதுபிரதேசம்தொழில் நுட்பத்தில் மிகப் பெரிய வளர்ச்சியை அடையவேண்டும் என்பதற்காகவே. அதற்கு வெளிநாட்டுத் தொடர்புகள் அவசியம். லண்டனின் 'ஓராக்கிள்' (Oracle), சிங்கப்பூரின் 'சிஸ்ரம் கொம்பியூட்டர்' (System Computer), அமெரிக்காவின் 'மென்ரோ லாப்' (Menot lap), இந்தியாவின் 'இன்போசிஸ்' (Inforsice) ஆகிய நிறுவனங்களுடன் நாங்கள் ஒப்பந்தம் செய்துள்ளோம்.

ஓராக்கிள் நிறுவனத்துடன்நாம்இணைந்ததன் மூலம் லண்டனுக்குத் தேவையான - அங்குள்ள நிறுவனங்களின் - மென்பொருள்களை இங்கு எமது பிரதேச இளைஞர்களின்மூளைத்திறனைக் கொண்டு உருவாக்கி அனுப்புவோம். இதன்மூலம் 100 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது.

லண்டன்பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள 'சிஸ்டம் கொம்பியூட்டருடன் ஒப்பந்தம் செய்துகொண்டதன் மூலம் நாம் ஸ்கொலஷிப் ஒன்றைச் செய்யவுள்ளோம். கொஞ்சப்பேருக்குப் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு சிங்கப்பூரிலும் இங்கும் வேலை வாய்ப்பை வழங்கவுள்ளோம். சிங்கப்பூர் நிறுவனங்களுக்குத் தேவையான மென்பொருள்களையும் தயாரிக்கவுள் ளோம்.

இதற்கெல்லாம் மிகப் பெரும் மூலதனம் எமது பிரதேச இளைஞர்களின் மூளைத் திறனே. வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் ஓடர்களுக்கு வித்தியாசமான வடிவங்கள் கொடுத்து உருவாக்குவது எமது இளைஞர்களே. அவர்களை நம்பியே நான் இந்த நிறுவனத்தை ஆரம்பித்துள்ளேன்.

யாழ்ப்பாணத்து மக்கள் கணிதத்துறையில் மிக வல்லுநர்கள் என்றே சொல்லலாம். மென்பொருள் தயாரிப்பதற்கும் கணிதத்தில் தேர்ச்சி வேண்டும். எனவே, யாழ்ப்பாணத்தில் மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தை நடத்துவது பொறுத்தமானதும் வெற்றியளிக்கக் கூடியதும் என்றே கருதுகின்றேன் - நம்புகிறேன்.

**கேள்வி:** மென்பொருள் தயாரிப்புத் துறையில் இலங்கை எந்த நிலையில் உள்ளது?

**பதில்:** இலங்கையைப் பொறுத்தவரை மென்பொருள் தயாரிப்பில் வளர்ச்சியடைந்துள்ளது என்று கூறமுடியாது. கொழும்பில் உள்ள மென்பொருள் வடிவமைப்பாளர்கள் ('சொவ்ட் வெயார் டிசைனர்') அதிகமானோர் இந்தியாவில் கற்று வந்தவர்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் 'சொவ்ட் வெயார் இஞ்ஜினியர்' யாரும் இல்லை என்றே சொல்லலாம். எனவே, யாழ்ப்பாணத்திலும் இஞ்ஜினியர்களை உருவாக்கும் பொருட்டு ஆர்வமுள்ளவர்களை இணைத்து பயிற்சி வழங்குகின்றோம் - வழங்குவோம்.

இதன்மூலம் இலங்கையில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் மென்பொருள் வடிவமைப்புத் துறையை மேம்படுத்தமுடியும் என்று நம்புகின்றேன்.

செவ்வி கண்டவர்கள்
தீபா - கங்கா

**கேள்வி:** இந்த நிறுவனத்தை யாழ். நகரில் நடத்தும்போது ஏற்பட்ட - ஏற்படும் சிக்கல்கள், சவால்கள் குறித்து...?

**பதில்:** எமது நாட்டில் இடம்பெறும் அனர்த்தங்களே எமக்கு சவால்களாக உள்ளன. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்ற கேள்விக் குறியுடனேயே எமது மக்கள் வாழ்கின்றார்கள். இதுவே எமக்கும் பெரும் சவாலாக உள்ளது.

**கேள்வி:** வேறு பயிற்சிகளும் வழங்குகின்றீர்களா?

**பதில்:**லண்டன் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகளையும் சான்றிதழ் கற்கை நெறிகளையும் இங்கு ஆரம்பித்துள்ளோம். அத்துடன், உயர்தரம் கற்றுவிட்டு தகுந்த மேற்படிப்புகள் இல்லாமல் பல மாணவர்கள் உள்ளார்கள். அவர்களுக்காக லண்டன் பல்கலைக்கழகத்தின் கிளையொன்றையும் ஆரம்பித்துள்ளோம். இங்கு அந்தப் பல்கலைக் கழகத்தின் சகல சான்றிதழ் கற்கை நெறிகளையும் கற்பிப்போம். ✱

அன்னை நகா :.புட் சிட்டி
தனது 3வது ஆண்டு நிறைவை
எலி:.பன்ட் ஹவுஸ்
Elephant HOUSE ICE CREAM
உடன் கொண்டாடுகின்றது
இந்த வருடத்தில் கூலான ஸ்டைலுடன்
ஏப்பிரல் 1-15 வரை
கூலான சலுகைகளை வழங்குகின்றது.
கருத்தகொழும்பன் ஐஸ் கிரீம்
மற்றும் எமது முதற் தர சுவைகளான
கொ:.பி கிரான்ட், டொ:.பி கெரமல் மற்றும் குக்கி கிரீம் ஆகியவற்றுக்கு
10% விஷேட கழிவு.




அது மட்டுமல்ல
சகல வெனிலா, சொக்லேட், ஸ்ரோபரி மற்றும்
புருட் என்ட் நட் 1 லீட்டர் அளவுகளிலான
ஐஸ் கிரீம் கொள்வனவின் போது
ஜம்போ ஜோலி ஒன்று இலவசம்.



எமது 3வது ஆண்டு நிறைவு மற்றும்
சித்திரை தமிழ் புது வருட காலத்தில்
இந்த சலுகைகளை கூலான ஸ்டைலுடன்
நீங்களும் அனுபவித்து கொண்டாடுங்கள்
Elephant HOUSE ICE CREAM



சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

02.04.2006

# டோறா படகுகளுக்கு என்ன நடக்கின்றது?



## கடல் 'வெடிப்புகளின்' மர்மம் நீடிப்பு...!

**போர்** ஓய்வுக் காலத்தில் ஏற்பட்டுவரும் இழப்புகள் கண்டு ஸ்ரீலங்கா கடற்படைத் தலைமை ஆடிப்போய் இருக்கின்றது.

மிகக்குறுகிய காலஇடைவெளியில் இரண்டு அதிவேகத் தாக்குதல் படகுகளை இழந்துவிட்டது கடற்படை. கடலில் அடையாளம் தெரியாத படகுகளை வழிமறிக்க முற்படுகையில் அடுத்தடுத்து இரண்டு டோறா படகுகள் வெடித்துச் சிதறி மூழ்கியுள்ளன.

திருமலை பவுல் முனைக் கடற்பரப்பில் கடந்த ஜனவரி 07 ஆம் திகதி அதிகாலையிலும் அதன் பின்னர் கடந்த மார்ச் 25 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவிலும் இடம்பெற்ற இரண்டு வெடிப்புச் சம்பவங்களிலேயே இரண்டு 'டோறா' அதிவேகப் பீரங்கிப்படகுகளை கடற்படை இழந்தது. இந்த இரண்டு சம்பவங்களும் கிட்டத்தட்ட ஒரே பாணியிலான வெடிப்புகள் மூலம் ஏற்பட்டவை ஆகும்.

வடக்குக் கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வரும் கடற்படை 'டோறா' படகுகள் அவ்வவ்போது சந்தேகத்துக்கிடமான படகுகளை அவதானிப்பது வழக்கம் என்கின்றன கடற்படை வட்டாரங்கள். அவ்வாறு 'சந்தேகத்துக்கிடமானவை' என்று கடற்படை கூறுகின்ற படகுகள் வெடித்துச் சிதறிய சம்பவங்களிலேயே 'டோறா' படகுகள் இரண்டை கடற்படை இழக்க நேர்ந்துள்ளது. இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக வெளியான எல்லா தகவல்களுமே கடற்படைத் தரப்பால் வெளியிடப்பட்டவை.

இனி இரண்டு சம்பவங்களினதும் பின்னணி பற்றிய கடற்படை வெளியிட்ட தகவல்களைப் பார்ப்போம்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜனவரி 07 ஆம் திகதி திருகோணமலைக் கடற்பரப்பில் நடந்த முதல் சம்பவத்தில் கடற்படையின் 'டோறா' படகு மூழ்கியது. அதிலிருந்த 13 கடற்படையினர் காணாமற்போயினர். இருவர் மாத்திரம் உயிருடன் மீட்கப்பட்டனர். காணமற்போன கடற்படையினரைத் தேடும் பணி சில தினங்கள் நீடித்த போதும் அவர்களில் எவருமே உயிருடனோ, சடலங்களாகவோ மீட்கப்படவில்லை.

ஒரு தற்கொலைக் குண்டுதாரி, அல்லது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட படகு மோதி வெடித்ததில் இந்த டோறா கடலில் மூழ்கியது என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இரண்டாவது சம்பவம் கடந்த மார்ச் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தளம் கற்பிட்டிக் கடலில் இடம்பெற்றது. இதில் எட்டுக் கடற்படையினர் காணாமற்போயினர்; பதினொருபேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். ட்றோலர் படகு ஒன்றை சோதனையிடுவதற்கரக வழிமறித்த சமயம் அந்த ட்றோலர் வெடித்துச் சிதறியபோது ஏற்பட்ட அதிர்ச்சியால் டோறாப் படகும் கடலில் மூழ்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

கடற்படை சந்தித்த இந்த இரண்டு அனர்த்தங்களுமே சந்தேகத்துக்கிடமான வெடிப்புச் சம்பவங்களால் (Explosions) ஏற்பட்டவை. இந்த இரு வெடிப்புகளும் தற்கொலைப்பாணியில் வழமையாக புலிகள் மேற்கொள்கின்ற தாக்குதல்களை ஒத்தவை என்று கடற்படை குற்றஞ்சாட்டியது. ஆனால், கடலில் நடந்த இந்தச் சம்பவங்கள் பற்றி தமக்கு எதுவுமே தெரியாது. புலிகள் அதில் தொடர்புபடவே இல்லை என்று புலிகள் தரப்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

டோறாப் படகுகள் மூழ்கடிக்கப்பட்ட இந்த இரண்டு சம்பவங்களுக்கும் இடையே கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று வெடித்துச் சிதறியிருந்தது. கடற்படைப் படகுகளால் வழிமறிக்கப்பட்டபோது அந்த ட்றோலர் படகில் இருந்த ஆறு பேர் அதனை வெடிக்க வைத்தனர் என்று கடற்படை கூறியது. ஆனால், கடற்படைப் படகில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலிலேயே ட்றோலர் தீப்பற்றி எரிந்தது என்று சுயாதீனமான தகவல்கள் தெரிவித்திருந்தன.

இந்தச் சம்பவத்துடன் சேர்த்து இந்த ஆண்டில் இதுவரை இடம்பெற்ற கடல் 'வெடிப்பு' சம்பவங்களில் சம்பந்தப்பட்ட சந்தேகத்துக்குரிய படகுகள் எவை என்ற கேள்வியும் அவற்றில் பயணம் செய்தவர்கள் யார் என்பதும் புதிரான விடயங்களாக உள்ளன.

திருமலை பவுல் முனைப் பகுதியில் இடம் பெற்ற முதலாவது சம்பவத்தில் கடற்படைப் படகை மோதிய ட்றோலர் படகில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது தெரியவில்லை. அடுத்து பேசாலைக் கடலில் வெடித்துச் சிதறிய மீன்பிடிப் படகில் ஆறுபேர் இருந்தனர் என்று கூறப்படுகிறது. மூன்றாவதாக கற்பிட்டிக் கடலில் இடம்பெற்ற சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேகத்துக்குரிய படகில் ஆறுபேர் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆக மொத்தத்தில் யார் என்பது தெரியாத பன்னிரரெண்டு பேர் இந்தச் சம்பவங்களில் உயிரிழந்திருக்கின்றனர் என்று கருதமுடியும்.

ஸ்ரீலங்கா கடற்படையின் முழுப் பலத்தில் கணிசமான பங்கை வகிப்பவை இந்த 'டோறா' அதிவேகத் தாக்குதல் படகுகள். இஸ்ரேலியத் தயாரிப்பான இந்தப் படகுகள் கடலில்விரைந்து சென்று எதிரிகளை - எதிரிக் கலங்களை - சுற்றிவளைத்து தடுத்து நிறுத்தவும், தாக்குதல் நடத்தவும் அதற்கான கருவிகளோடு நவீன முறையில் வடிவமைக்கப்பட்டவை. 'ரடார்' தொழில்நுட்பவசதிகள் கொண்டவை.

கடற்புலிகளின் கடற்பயணங்களைத் தடுப்பதற்கு கடற்படை இந்த அதிவேகத் தாக்குதல் படகுகளையே நம்பி இருக்கிறது.

போர்க் காலங்களில் கடற்புலிகளின் பல்வேறு தற்கொலைப் பாணித் தாக்குல்களில் டோறாப் படகுகள் பலவற்றை கடற்படை இழந்ததுண்டு. ஆனால், இப்போது சமாதான காலத்தில் இந்த டோறாக்களின் இழப்பின் கனதி கடற்படைத்தலைமைக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

கடல் போக்குவரத்து மற்றும் கடல் ஆதிக்கம் தொடர்பாக போர் நிறுத்தப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெளிவாக எதுவும் வரையறை செய்யப்படவில்லை. அந்த உடன்படிக்கையின்படி கடலில் ஆதிக்கம் என்பது இலங்கைக் கடற்படைக்கே உரியது. இதனால் கடந்த ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் கடற்பிரயாணங்கள் பெரும் சிக்கல்களை உருவாக்கி வந்திருக்கின்றன. போராளிகளின் பாதுகாப்பான கடற்பயணம் என்பது இப்போது பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் மிக்கதாகவே விளங்குகின்றது.

தற்போது கடலில் இடம்பெறும் வெடிப்புப் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும் என்கின்றது இலங்கைக் கடற்படை. ஆனால், புலிகள் அதனை மறுத்து வருகின்றனர்.

வடக்குக் கடலில் மீன்பிடி ட்றோலர்களைப் பயன்படுத்தி ஆயுதக் கடத்தல் மற்றும் ஆயுதங்களை இடம்மாற்றுதல் போன்ற செயற்பாடுகளில் புலிகள் ஈடுபடுகின்றனர் என்று கூறும் கடற்படையினர் புலிகளின் தரகர்களாக அல்லது கூலியாள்களாக மீனவர்கள் இந்த ஆயுதக்கடத்தலுக்கு உடந்தையாக இருக்கின்றனர் என்கின்றன.

மீன்பிடிப் படகுகள் சம்பந்தப்பட்ட கடத்தல்கள் மன்னார் கடற்பரப்பில் அடிக்கடி இடம்பெறுவது பற்றி சுங்கத் துறையினருக்கும் முறைப்பாடுகள்' கிடைத்துள்ளன. ஆனால், இந்தக் கடத்தல்கள் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளோடு சம்பந்தப்பட்டவை அல்ல என்று பொலீஸ் தரப்பு கூறுகிறது. ஆனால், கடற்படைப் படகுகளைத் தகர்க்கும் வலுக்கொண்ட வெடிபொருள்கள் அல்லது குண்டுகள் மீன்பிடி ட்றோலர்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் -

அவ்வாறான ட்றோலர்களே கடற்படைப் படகுகளை நெருங்கி வெடிக்க வைக்கப்படுகின்றன என்றும் கடற்படை சுமத்தும் குற்றச்சாட்டை வடபகுதி மீனவர்கள் மறுக்கின்றனர்.

கடற்படை கூறும் தகவல்களின்படி சந்தேகத்துக்கிடமான படகுகளோடு சேர்ந்து உயிரை மாய்த்துக் கொள்வோர் மீனவர்களா? அல்லது கடற்புலிப் போராளிகளா?

கடலில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்களில் விடுதலைப் புலிகளின் போராளிகளோ, தமது படகுகளோ சிக்கவில்லை, சம்பந்தப்படவில்லை என்கின்றனர் புலிகள். அப்படியானால் படகுகளோடு சேர்ந்து வெடித்து உயிரிழப்போர் யார்?

அவ்வாறு படகுகளோடு உயிரிழந்தவர்கள் என்று எவருடைய சடலங்களும் இதுவரை கரை ஒதுங்கியதாகவும் தகவல் இல்லை. அதேசமயம் வெடிப்புச் சம்பவங்களில் காணாமற்போன கடற்படையினரது உடலங்களும் கூட எங்காவது கரைசேர்ந்ததாகத் தகவல் கிடைக்கவில்லை.

தாக்குதல்களின்போது அதில் சிக்குவோரின் உடல்கள் முற்றாகச் சிதைந்து போகவே வாய்ப்புண்டு. எனினும், ஒரு சிலராவது காயங்களோடு உயிர் தப்ப அல்லது முழுமையான சடலமாக மீட்கப்பட வாய்ப்புண்டு. ஆனால், இதுவரை அப்படி எவருமே மீட்கப்படவில்லை.

இது இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்படை வெளியிடும் தகவல்களின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகின்றது.

வெடிப்புகள் ஏற்படுத்தும் சேதங்களை நோக்கும்போது பயன்படுத்தப்படும் வெடிப்பொருள்கள் வலுக்கூடியவை என்பது புலனாகின்றது என்று கடற்படை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மர்மமான இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து அடிக்கடி இடம்பெறுவதால் கடலில் போர்க்காலத்தைப் போன்ற விழிப்பு நிலையைப் பேணவேண்டிய அவசியம் கடற்படைக்கு ஏற்பட்டிருக்கிறது. கடல் பாதுகாப்பு வலயச் சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்து கடற்பாதுகாப்பை இறுக்கியிருக்கின்றது கடற்படை. ஆயினும், அடுத்த படகு எங்கே, எப்போது, எப்படி வெடிக்கும் என்ற அச்சம் கடற்படையினர் மத்தியில் நீடிக்கின்றது.

- குமரன்

# பூத்த கொடி பூக்களின்றி தவிக்குதம்மா...!

## முதியோர் அவலம்: ஒரு பார்வை

எஸ்.கவிதரன்

''எங்களுக்கு வயது போட்டுது இனியார் எங்களைத் திரும்பிப் பார்ப்பினம்... யார் எங்களில அன்பு காட்டினம்.... பேரப்பிள்ளையள் கூட எங்களைக் கவனத்தில் எடுக்குதுகளில்லை''

பல முதியவர்களின் ஏக்கப் பெரு மூச்சுகள் இப்படித்தான் இருக்கின்றன.

பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் வழுவலே என்பது உண்மைதான். அது எல்லாவற்றுக்கும் பொருந்துமா என்பதுதான் அடுத்த கேள்வி.


எம்மைப்பத்து மாதம் கருவிலே சுமந்து தன் இன்பங்களைத் துறந்து எத்தனையோ துன்பங்களைச் சுமந்து தமது குருதியைப் பாலாக்கி எம்மையொரு உறுதியான மனிதனாக்கிய தியாகத்திருவுருவம் அன்னை.

எமக்காக, எம் எதிர்காலத்துக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துத் தேய்ந்த திருவோடாக மாறிய தியாகத்திருவுருவம் தந்தை.

தமக்காக வாழாது தம்பிள்ளைகளுக்காக வாழும் இந்த இரு தியாகதீபங்களை இன்று சமூகத்தில் உள்ளவர்கள் உதாசீனம் செய்து விடுகிறார்கள். ஏதோ ஒரு மூலைக்குள் ஒதுக்கி விடுகிறார்கள்.

இதனால் அந்த உள்ளங்கள் மனம் உடைந்து, வெந்து வெடிக்கிறார்கள். ஆதாரிப்பார் யாருமின்றி, அரவணைக்கக் கரங்கள் இன்றி, அந்த முதிய உள்ளங்கள் தம் விதியை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றன. இதில் சிலர் இனியும் இருந்தென்ன லாபம் என்ற விரக்தியின் விளிம்பில் நின்று தற்கொலை செய்தும் கொள்கின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் அந்திம காலத்தில் ஆதாரிப்பார் இன்றி - அரவணைப்பார் யாருமின்றி - தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு வருவோர் மாதத்திற்கு சராசரி ஏழு பேர் என்ற கணக்கில்



சென்று கொண்டிருக்கிறது.

இந்த எண்ணிக்கை குறைந்த பாடில்லை. நாளுக்குநாள் கூடிக் கொண்டுதான் செல்கிறது என்று யாழ்.நீதிமன்ற வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

எமது மூதுசங்களான முதியவர்களை நாம் இப்படிக் கை கழுவிவிடுவதும் - அவர்களை கவனிப்பாரின்றி கைவிடுவதும் - இறக்கின்ற தறுவாயில் கூட அவர்களின் மனநிலையை சந்தோஷமாக்கி வழியனுப்ப தவறுவதும் ஏன் என்ற ஆதங்கம் பலருடைய உள்ளத்தில். உதித்திருக்கிறது.

'கிழவிக்கு அறிவு உண்டு. குமரிக்கு அழகுண்டு' என்று கவிஞன் பாடியது போல நாம் எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்றாலும் எமது முதியவர்களின் பட்டறிவு - வாழ்க்கை அனுபவம் என்பது எமது வாழ்க்கைக்குப் பெரும் பொக்கிஷமாக இருக்கும். ஆனால், இந்த யதார்த்தத்தை இன்றைய இளம் சந்ததியினர் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள். தம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையர்கள் முதியவர்கள் ஆனவுடன் அவர்களை ஓரங்கட்டி விடுகின்றனர்.

தமது பிள்ளைகளுக்குக் கூட தமது பெற்றோரை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்றும் -அவர்களோடு எப்படி அன்பாக அணுகி அன்பைப் பறிமாறிக் கொள்ள வேண்டும் என்பதைக்கூட சொல்லிக்கொடுப்பதில்லை.

இதனால் அந்த முதியவர்கள் தாம் தனிமைப்படுத்தப்படுவதாக உணர்ந்து உளரீதியான பாதிப்புக்குள்ளாகி விரக்தியின் விளிப்புக்கே போய் விடுகிறார்கள்.

உண்மையில் தமது குழந்தைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் படும்பாடுதான் எத்தனை தெரியுமா?

ஒரு பிள்ளையை வளர்த்து ஆளாக்கிவிடும் தாய், தந்தையருக்கு பிள்ளை செய்ய வேண்டிய கடமைதான் என்ன? அவர்கள் முதியவர்கள் ஆன பின்னர் குழந்தையைப் போன்று பராமிக்கவேண்டும்.

முதியவர்களும் ஒருவகையில் குழந்தையின் குணங்களை உடையவர்களே . ஏனெனில், மனிதப் பருவத்தில் இரண்டுதடவை குழந்தைப் பருவம் உள்ளதாம். அதில் ஒன்று முதுமைப் பருவத்தில் வருகின்ற குழந்தைப் பருவம் தான்...

### அன்பு காட்டுங்கள் அதுவே போதும்!

உங்கள் வீட்டில் உள்ள முதியவர்களுக்கு அதிக பணம் செலவளித்து எதையும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அவர்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது அளவு கடந்த தூய்மையான அன்பையும் அரவணைப்பையும்தான்.

உங்களுக்கு நேரம் கிடைக்கும் வேளைகளில் எல்லாம் அவர்களோடு அளவளாவி அன்பாகப்பேசி, பரிவோடு அவர்களினால் முன்வைக்கப்படும் கருத்துகளை செவிமடுத்து அவர்களோடு இணைந்து காரியங்களைச் செய்யுங்கள்.

அவர்கள் வயது போனவர்கள், அவர்களோடு சேராதீர்கள் என்று உங்கள் பிள்ளைகளுக்கு கூறிக் கொள்ளாதீர்கள். அவர்களை அந்த முதியவர்களோடு இணைத்து அன்பாகப்பேசி, அவர்களுக்கிடையிலான உறவினைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

இத்தகைய நடவடிக்கையால் அவர்களுக்கு தாம் முதுமைக்கு வந்துவிட்டோம் என்ற நினைப்பு வராது வாழும் அந்த இறுதிக்காலம் வரை சந்தோஷமாக இருப்பார்கள்.

(VIIஆம் பக்கம் பார்க்க )

---

# கணித மேதை இராமானுஜன் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகின்றது



கணிதமேதை இராமானுஜன்

தமிழ் நாட்டின் உலகப் புகழ் கணித மேதை ஸ்ரீனிவாஸ் இராமனுஜனின் வாழ்க்கை வரலாறு சினிமா திரைப்படமாக வெளிவரப் போகின்றது.

வறுமையில் உழன்று தனுக்குத்தானே கல்வி புகட்டிக் கொண்ட இராமனுஜன் இன்றைய புள்ளிவிவரவியலுக்கு சென்ற நூற்றாண்டில் வித்திட்டவர் என்று கருதப்படுபவர்.

பிரிட்டிஷ் நடிகரும் திரைப்பட இயக்குநருமான ஸ்டீபன் பிறை மற்றும் வங்காள எழுத்தாளர் தேவ் பெனிகல் ஆகிய இருவரும் இந்தத் திரைப்படத்துக்கான காட்சி மற்றும் வசனங்களை தொகுத்து எழுதவிருக்கின்றார்கள்.

இந்தத் திட்டத்திற்கு ஏற்கனவே இந்திய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் ஆதரவும் ஆசியும் கிடைத்துள்ளது. இராமானுஜனின் கணிதத் தத்துவம் பற்றிய தமது ஆய்வுக் கட்டுரை ஒன்றை அப்துல்கலாம் தயாரிப்பாளர்களுக்கு வழங்கியுள்ளார்.

தயாரிப்பாளர்களில் ஒருவரான பெனிகல், இராமானுஜனின் வாழ்க்கை மற்றும் தாங்கள் எடுக்கும் திரைப்படம் பற்றி குறிப்பிடுகையில் பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இராமானுஜன் 1914 ஆம் ஆண்டு பிரிட்டனுக்கு வந்தார். உலகின் மிகப் பெரிய கணித நிபுணரான ஜி.எச்.ஹார்டி (G.H.Hardy) இராமானுஜனின் மேதா விலாசத்தைக் கண்டு பிடித்து உலகத்துக்கு வெளிப்படுத்திய விதம் பற்றி இந்த சினிச் சித்திரம் எடுத்துக் காட்டும்.

இராமானுஜனின் திறமையைக் கண்டுபிடித்து அவரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்கு அழைத்து உலக கணித மேதைகள் வரிசையில் இருக்க வைத்தவர் பேராசிரியர் ஹார்டியாவார்.

இராமானுஜனின் மேதைத் தன்மையையும் ஏழ்மை காரணமாக அவரால் தனது மேதைத் தன்மையை வெளிக்கொணர முடியாமலிருந்துள்ளமையையும் உணர்ந்த இந்தியத் தலைவரும் விடுதலைக்குப் பின் இந்திய பிரதமராகவிருந்த வரும் கேம்பிறிட்ஜில் மேல் கல்வியை பெற்றவருமான ஜவஹர்கலால் நேரு இந்திய மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக இந்தியாவிலேயே உயர் கல்வி அமைப்புகளை உருவாக்கினார் என்று கூறப்படுகின்றது.

மனித மனத்தை ஒருபோதும் சிறை வைத்துவிடமுடியாது. இதை இராமானுஜன் வெளிப்படுத்தியுள்ளார். அவர் தனக்கிருந்த மிகக் குறைந்த வள வசதிகளுடன் உலகத்துக்கு பெருமளவில் வாரி வழங்கியிருக்கிறார் என்று பெனிகல் கூறியுள்ளார்.

இப்படம் தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் இராமானுஜன் பிறந்து வளர்ந்த பகுதிகளிலும் இங்கிலாந்தில் 5 ஆண்டுகள் தங்கியிருந்து ஆராய்ச்சிகள் நடத்திய பகுதிகளிலும் எடுக்கப்பட விருக்கின்றது.



பேராசிரியர் ஹார்டி

இராமானுஜன் தமிழ் நாட்டு பின் தங்கிய கிராமமொன்றில் பிறந்து வளர்ந்தார். கணிதத்திலேயே அவர் மூழ்கிக் கிடந்ததால் ஏனைய பாடங்களில் கோட்டைவிட்டுக் கல்லூரி படிப்பை இழந்தார். ஒரு தொழிலைத்தேடிக் கொள்வதற்கு பெரும்பாடுபட்டார். அக்காலத்தில் பெரும் புகழுடன் திகழ்ந்த அனேகருக்கு எழுதினார். பேராசிரியர் ஜி.எச்.ஹாடிதான் அவரது பெருமையை உணர்ந்து கேம்பிரிட்ஜ் பல்கலையில் ஆராய்ச்சிக்கு சேர்த்துக்கொண்டார்.


கயரோகத்தால் பீடிக்கப்பட்டு தாய் நாடுதிரும்பிய கணித மேதை தமது 33 ஆம் வயதில் மறைந்தார். இப் படத்தில் இராமானுஜனின் பாத்திரத்தில் நடிப்பதற்கான இந்திய நடிகர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார் - பேராசிரியர் ஹார்டியின் பாத்திரத்தில் ஓர் அமெரிக்கர் அல்லது பிரிட்டிஷ் நடிகர் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த நூற்றாண்டில் இந்தியாவின் புகழை உலக மட்டத்தில் உயர்த்திய மூன்று முக்கிய ஸ்தர்களில் இவரும் ஒருவர். மற்ற இருவரும் ஜவஹர் வால்நேருவும் மகாகவி ரவீந்திரநாத் தாகூரும் ஆவர். பல இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்படவிருக்கும் இந்தப் படப் பிடிப்பு அடுத்த வருடம் ஆரம்பமாகவிருக்கிறது.

தொகுப்பு : 'சிபெரு'

# ஆதிக்கத்தின் எல்லையில்.....

இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு காரணி தொலைக்காட்சித்தொடர். தொலைக்காட்சித் தொடரைப் பார்ப்பதுதான் தமது வாழ்க்கையின் லட்சியம் என்பது போல இன்று எல்லோருமே தொலைக்காட்சியின் முன்னே மண்டியிட்டுக்கிடக்கின்றனர்.



சில வருடங்களுக்கு முன்னர் வரை தொலைக்காட்சி மிகுந்த பயனுடையதாய் இருந்தது. (ஒரு சிலருக்கு இன்றும்கூட பயனுடையதாகவுள்ளது) உலகின் எந்த ஒரு மூலையிலும் நடக்கும் சம்பவங்கள், நிகழ்வுகளை உடனுக்குடன் நேரடியாகக் காட்டும் சேவையை பல தொலைக்காட்சி நிறுவனங்கள் செய்து வருகின்றன.

ஆனால், இன்று வீடுகளில்என்ன நடக்கின்றது? காலையில் காவ்யாஞ்சலி, ஆனந்தம் என்று தொடர்களைப் பார்ப்பது - மலையில் கோலங்கள்,மனைவி, கணவருக்காக, பிற்பகலில் திரைப்படம் தொடரோ, திரைப்படமோ இல்லாத நேரங்களில் தொலைக்காட்சியைத் தொடுவதே இல்லை.

நான் வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தேன். இரு பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் எங்கேயோ சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட எனக்கு மேற்கொண்டு சைக்கிள் ஓட்ட முடியவில்லை. இறங்கி நின்று விட்டேன். ஒருவர் கூறினார் 'இண்டைக்கு அபிராமிக்கு செமஅடி. சாந்தி விட்டாளே பார் ஒரு அடி. அவளுக்கு நல்லா வேண்டும்' 'அபிராமி அடிய வாங்கிக் கொண்டு சும்மா நின்றாளா?'' என்றார் மற்றவர்.

எனக்கு நெஞ்சு படபடத்தது. ஏனெனில், எனது அக்காதான் அபிராமி. அண்ணி சாந்தி. அண்ணி ஏன் அக்காவுக்கு அடித்தவர். என்ன பிரச்சினையோ என்று பதறியபடி அவர்களிடமே கேட்டேன். அவர்கள் சொன்னார்கள். 'இது ஆனந்தம் சீரியல்ல நடந்தது. இவள் இண்டைக்கு சீரியல் பார்க்கல. அதுதான் சொன்னேன்''. எனக்கு எரிச்சலும் கோபமும் ஏற்பட்டது.

இன்றுவரும் தொடர்களை எடுத்துக் கொள்வோம். சித்தி, ஆனந்தம், காவ்யாஞ்சலி, மனைவி, கணவருக்காக, அண்ணாமலை (இதைவிட இன்னும் இருக்கலாம்) இவை அனைத்திலுமே இரண்டு பெண்களை மணந்து கொள்ளும் பாத்திரங்களே அதிகம் படைக்கப்பட்டுள்ளன. இரு பெண்களை மணப்பதென்பது தொடர்களுக்கென்றே எழுதப்படாத விதிமுறையாக உள்ளதோ?

இதனை விட அனைத்துத் தொடர்களிலும் பெண்களை வில்லியாக, அப்பாவிகளை பழிவாங்குபவர்களாகவே சித்திரித்துக் காட்டுகின்றது.

தொடர்கள் கூறவரும் நல்ல கருத்துக்கள் தான் எவை, சற்று சிந்திப்போம்!

**- சம்யுக்தா**

---

# ஆணாதிக்கத்தை தூண்டிவிடுபவர்களாகப் பெண்களும்.............

இன்று எமது சமூகத்தில் ஆணாதிக்கம் தலைத்தோங்கி பெண்கள் பலர் கொடுமைகளுக்குள் வாழ்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், இன்று பெண்களாலேயே பெண்கள் அடிமைகளாக கொடுமைகளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எமது சமூகம் அறியாமல் விட்டது மிகவும் மடமைத்தனமானது.

பெண் விடுதலை, பெண்சுதந்திரம் என்று ஒவ்வொருவரும் பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர பெண்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்குள் வாழ்கிறார்கள் என்பதை எவரும் அறிகிறார்கள் இல்லை. ஆணாதிக்கத்தை ஒளித்துவிட்டால் பெண்ணினம் விடுதலை பெற்றுவிடும் என்று பலர் கருதுகிறார்கள். இது எவ்விதத்திலும் நியாயமானதல்ல. ஏன் என்றால் இன்றும் சரி அன்றும் சரி ஆணாதிக்கத்திற்கு ஊன்றுகோலாக இருப்பவர்கள். பெண்களே ஆவர். இதனை எல்லாப் பெண்களும் உணர்ந்து செயற்படவேண்டியவர்களாக உள்ளனர்.

ஆணாதிக்கம் என்று சொல்லப்படுவது என்னவென்றால் அடக்குமுறைகளும் வன்முறைகளும் சாதியம், சீதனம் என்ற கொடுமைகளும்தான் என்பார்கள். ஒரு குடும்பத்தில் சீதனம் என்ற கேள்வியை தொடக்குபவள் தாயாகத்தான் இருப்பாள். மகனும், தந்தையும் சீதனம் வேண்டாம் என்றாலும், தாய் பல காரணங்களைச் சுட்டிக்காட்டி அவர்களது மனநிலையையும் மாற்றி அதற்காகப் போராடுகிறாள். இன்று பல பெண்கள் சீதனத்தால் சீரழிந்த வாழ்வு வாழ்கிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம் பெண்களே ஆவர்.




அடுத்து ஒரு குடும்பத்தை எடுத்து நோக்குவோமானால் ஒரு தாயானவள் பெண்பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகளிடம் தான் அதிகளவு பாசமும் பற்றும் வைத்துப் பழகுவதாக சில ஆய்வுகள் கூறுகின்றன. இங்கும் பெண்கள் பாரபட்சம் காட்டப்படுவது பெண்ணால் தான். இப் பாரபட்சம் மூலம் பல பெண்பிள்ளைகள் உளரீதியான பாதிப்புக்களைச் சந்திக்கிறார்கள். மற்றும் பல குடும்பங்களில் பெண்பிள்ளைகள் கண்டிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் வீட்டிற்குள் முடங்கி வாழும் நிலையை பல தாய்மார்கள் ஏற்படுத்தியுள்ளனர். இந்த ஒடுக்குமுறையினால் பெண்களுடைய ஆளுமை மழுங்கடிக்கப்படுகிறது.

அடுத்து ஒரு பெண் எதிர்கால வாழ்க்கைக்குள் நுழையும்போது மாமியார் கொடுமை, நாத்தனார் கொடுமை என பல தரப்பட்ட பிரச்சினைகளிற்குள் அகப்பட்டு சீரழிக்கின்றாள். ஆண்கள் எல்லாம் தாய் சொல் தட்டாத, தாயின் மனதை நோகடிக்காத மனிதர்களல்லவா? இதனால் தாய் சொல்வதையெல்லாம் கேட்டு சரியென்று தலையாட்டி மனைவிக்கு அடிப்பதும் உதைப்பதும் ஏசுவதும் போன்ற தகாத செயல்களை செய்து அடக்கி ஆள்கிறார்கள். இவ்வாறான பிரச்சினைக்கு காரணமாக இருப்பவர்கள் யார்....? ஓர் பெண்தான், ஆகவே, இன்று பல வழிகளில் ஆணாதிக்கத்தைத் தூண்டி விடுகிறவர்களாக பெண்களே காணப்படுகின்றனர்.

பெண்ணே பெண்ணிற்கு இரங்குவாள் என்ற நிலைமாறி பெண்ணே பெண்ணிற்கு எதிரியாக இருக்கும் இக் காலகட்டத்தில் பெண்களால் எவ்வாறு சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ முடியும்.

**- ஆர். தாரணி**

---

# சிநேகிதியே உனக்குத்தான்!

இனியவளே!
முகந்தெரியா உனக்கு
முகவரியிடாது வரைகிறேன்
மடலொன்று!

நீ இனியவளென்று
உனக்கும் எனக்கும் தெரிந்தாலும்
புரிய வேண்டியோர்க்குப் புரிபடாது!

பிரியமானவளே!
அவர்களுனை
அதட்டுவர்!
நீ அடிமைச் சங்கிலியில்
பிணைந்ததாயெண்ணி!

சில பொழுது
நீ கண்ணீர்
உகுத்திடுவாய்!
அது பிழையன்று!
அதுதான் எமதின்
சின்னப் பலவீனம்!

அதையே அவர் தம்
பலமாய் எடுப்பர் புரிந்திடு!

அமைதிப்பட்சி நீ!
சில பொழுது
உதடசைப்பாய்!
அடக்கமில்லை
என்று எங்கேனும்
ஒலித்திடும்!

துணிச்சலாய்
இருந்து பார்!
சில பொழுது
உன் கணவனே
உனை சந்தேகமாய்
நோக்குவான்!

உனதின்
பணிகளெல்லாம்
இங்கு தேடப்படாது!
குற்றங்கள்மட்டுமே
அலசப்படும்!

உந்தனது
தெளிந்த வாழ்வு
மொத்த மனிதங்களாலும்
நோக்கப்படும்!

ஏன் என்கிறாயா?
பிழை பிடித்தற்கு!
பிழை பிடித்தே
இயைபான உலகிது!
உனை எனை
விட்டு வைக்குமா என்ன?

என்ன வாழ்வே
பூதாகரமாயிருக்கிறதா?
துவளாதே
இனியாவது விழித்தெழு!

அன்றைய
பாரதியின் முழக்கம்
நனவாக வேண்டாமா?

உனதின்
பாதச்சுவடுகளை
அர்த்தத்துடன்
எடுத்து வை!

வெற்றி உனதின்
பூங்கரங்களில்
தவழ்ந்து தந்தி மீட்கும்!

*ச.நிரஞ்சனி*

---

# அழகுக்கு அழகு சேர்க்க....



* பற்கள் பளபளப்பாக இருக்க எலுமிச்சை சாற்றுடன் உப்பு கலந்து பற்களைத் துலக்குங்கள்.
* குளிப்பதற்கு முன்பு மஞ்சள் பொடியையும் நல்லெண்ணெயையும் கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் காய விடவும். அதன்பிறகு வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தைக் கழுவவும். முகம் பளபளக்கும்.
* உங்கள் கூந்தல் பளபளப்பாகவும், கருமையாகவும் இருக்க உங்கள் உணவில் எலுமிச்சை சாற்றை சேர்த்துக் கொள்ளவும்.
* வாரம் 5 முறையாவது தவறாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சியால் கொழுப்பு கரைகிறது. எடை குறைகிறது. பல நோய்களிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கிறது.
* உதடுகளின் வடிவத்தை லிப் லைனரைக் கொண்டு வரைந்து, அதன் பிறகு அதற்குள் லிப்ஸ்டிக்கால் நிறத்தை நிரப்புவது நல்லது. லிப்ஸ்டிக் உதட்டைவிட்டு வெளியே பரவுவதை இது தடுக்கும்.
* தோடம்பழச்சாற்றை முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாக பொலிவுடன் தோன்றும்.
* கசகசா ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.
* பப்பாளி சாறு தடவினால், வியற்குரு கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்.
* கொத்துமல்லி இலையை அரைத்துப் பூசினால் முகம் வசீகரமாக மாறும்.

---

# ஆண்களிடம் சொல்ல...

ஆண்களுக்கு சூடாக ஒரு வார்த்தை சொல்ல விரும்பும் பெண்களே! இதோ உங்களுக்காக ஆண்களிடம் சொல்ல சில 'பென் மொழிகள்'

* பெண்களுக்காக செலவு செய்யாத ஆண்கள் உயிரோடு இருந்து என்ன பிரயோஜனம்?
* பெட் காஃபி வேண்டும் என்றால் சமையல் அறையில் தூங்கு!
* தீய்ந்த வாசனை வருகிறதா? சமையல் ரெடி என்று அர்த்தம்!
* ஆண்களுக்கும் உணர்ச்சிகள் உண்டுதான். ஆனால், அது அவர்கள் பிரச்சினை!
* நீ போய்த் தொலைந்தால் தானே நான் உன்னைப் பிரிந்து ஏங்க முடியும்?
* செத்த பிறகு ஆண்கள் எல்லாரும் சொர்க்கத்துக்கும் பெண்கள் எல்லாரும் நரகத்துக்கும் போனால் என்ன ஆகும்? சொர்க்கம் நரகமாகும். நரகம் சொர்க்கமாகும்.
* புத்திசாலி ஆண்கள் முட்டாள் பெண்களைக் காதலிப்பதுண்டு. ஆனால், புத்திசாலிப் பெண்கள் முட்டாள் ஆண்களைக் காதலிப்பதில்லை.

# உடல் பருமனாகுமா.....?

அதிக குழந்தைகளை பெற்றுக் கொள்வதால் பெற்றோர்களின் உடல் பருமன் அதிகரிக்கிறது என்று புதிய ஆராய்ச்சி ஒன்று தெரிவிக்கிறது.

ஒவ்வொரு குழந்தை அதிகரிக்கும் போதும், உடல் எடை கூடுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது என்று அந்த ஆராய்ச்சி கூறுகிறது.

பெரிய குடும்பங்களைச் சேர்ந்த நடுத்தர வயதினருக்கு உடல் பருமனாகும் வாய்ப்புகள், சிறு குடும்பத்தினரைவிட அதிகம் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். பெண்களுக்கு மட்டுமல்லாமல் அதிக குழந்தைகளால் ஆண்களுக்கும் உடல் எடை கூடுகிறதாம். டர்ஹமில் உள்ள டியூக் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், உணவு உட்கொள்ளும் பழக்கங்கள் உடல் பருமன் விஷயத்தில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களில் அதிக பங்களிப்பதாக கூறுகின்றனர்.



அதிக குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் பெற்றோர்களுக்கு ஆரோக்கியமான உணவு தயாரிக்கவோ, உடற்பயிற்சி மற்றும் ஓய்வாக உட்காரவோ நேரம் கிடைப்பதில்லை. இதனாலேயே உடல் பருமன் கூடுகிறது. ஆராய்ச்சியாளர்கள் 40 வயது முதல் 70 வயது வரை உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட 9046 நபர்களிடம் தகவல்களைத் திரட்டினர். பங்கேற்றவர்கள் தங்கள் உயரம், உண மற்றும் குழந்தைகள் எண்ணிக்கை அதிக தகவல்களைக் கூறினார்.

குழந்தை பிறந்தவுடன் தாயின் உணவுப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றம், மேலும் கருவுற்றிருக்கும்போது பெண்களின் உடலில் இயல்பாகவே ஏற்படும் ஹார்மோன் மற்றும் உடலியல் மாற்றங்கள் ஆகியவற்றால் கூடுதல் குழந்தை கூடுதல் பருமனை ஏற்படுத்துவதாக இவர்கள் கூறுகின்றனர்.

# ஆண்களை விட பெண்களின் ஆயுள் கூடுதல் ஏன்?



ஆண்களைவிட பெண்களின் ஆயுள் கெட்டியாக இருப்பதஇருப்பதஇருப்பதஇருப்பதன் காரணம் தெரியுமா? பெண்களின் பலமான இருதயமே என்கின்றனர் லிவெர்பூல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

இங்கிலாந்து லிவர்பூலில் உள்ள ஜான் மூர்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டதில், ஆண்களில் 18 வயது முதல் 70 வயது வரை இருதயம் தனது பம்பிங் சக்தியில் கால் பங்கை இழந்து விடுகிறது. மாறாக பெண்களில் 20 வயது முதல 70 வயது வரை இருதய செயல்பாட்டில் வெகு சிறிய மாற்றங்களே ஏற்படுகின்றன என்று தெரியவந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.


இதனாலேயே பெண்கள் சராசரியாக ஆண்களைவிட குறைந்தது 5 ஆண்டுகள் கூடுதலாக உயிர் வாழ்கின்றனர் என்று இந்த ஆய்வுக்கு குழு கூறுகிறது.

இருபாலரின் இருதய பலத்தில் உள்ள வித்தியாசம் மேலும் ஆர்வமூட்டுவதாக உள்ளது என்று ஆய்வுக் குழு தலைமை பேராசிரியர் கோல்டுஸ்பிங்க் கூறுகிறார்.

எனினும், ஆண்கள் இருதய பலத்தை கூட்டுவதற்கான சக்தி கொண்டவர்கள் என்று ஏனைய பிற ஆய்வுகளும் தெரிவிப்பதாக இவர் கூறுகிறார். சிலபல வழிமுறைகளை கடைபிடித்தால் ஆண்களும் தங்கள் இருதய பலத்தை மேம்படுத்தமுடியும் என்று கூறுகிறார் பேராசிரியர் கோல்டுஸ்பிங்க்.

பல்வேறு தரப்பட்ட உடற் செயற்பாட்டினால் விளையும் நன்மைகள் குறித்த தகவல்கள் மக்களுக்குத் தேவை என்று பரிந்துரை செய்கிறது இந்த ஆய்வுக் குழு.

## இருவேறு உலகம்





# இரண்டு பக்கமும் பார்க்கலாம்....



'எக்ஸ்வியூ' உலகின் முதலாவது இருபக்கத் திரைகள் கொண்ட கணனித் திரை. இந்தியாவின் சென்னையை சார்ந்த ஆய்வாளர்களால் வடிவமைக்கப்பட்டு காப்புரிமை பெறப்பட்டுள்ளது. முன்னும் பின்னுமாக இரட்டைத் திரை கொண்ட இந்த திரைக் கணனி குறிப்புப் புத்தகம் அல்லது திரையின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் அமர்ந்து இணைய வலை உட்பட ஒரே விஷயத்தை பகிர்ந்து கொள்வதையும் பார்வையிடுவதையும் 'டிஜிட்டல்' நுட்ப ரீதியாகத் தொடர்பு கொள்வதையும் சாத்தியமாக்குகிறது.

சென்னையில் கடந்த வருடம் ஒகஸ்ட் 31-ஆம் திகதி அன்று அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இரட்டைத் திரை முன்னோடி வடிவம், கணனிகளின் செயற்பாடு மற்றும் பயன்பாட்டில் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தக் கூடியதாகும்.

தனி உரிமை உள்ள உள்ளடக்கங்களில் எளிமையான மென்பொருள் அம்சங்களை இணைப்பதன் மூலம் மிக விரிவான செயற்பாடுகளுக்கும் பயன்பாடுகளுக்கும் வரம்பில்லா வாய்ப்புகளுக்கு எக்ஸ்வியூ வழி திறக்கிறது. இதன் மூலம் திரையில் காட்டும் விஷயத்தின் ஒரு பகுதியை மறைக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்களை காட்டவும், எந்தவொரு பக்கத்திலும் தொடர்பு கருவிகள் (Interactive Tools) மற்றும் இதர தொடர்பு அம்சங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் அவற்றை இயக்கவும் வாய்ப்புக் கிடைக்கிறது. மேலும் இதன் கூடுதல் பயன்பாட்டு அம்சங்கள் காரணமாக ஒரு பக்கத் திரையை அணைத்துவிட்டு மற்றொரு பக்கத் திரையை மட்டும் இயக்க முடியும்.

எக்ஸ்பியூ பயன்பாடுகளைப் பொறுத்தவரையில் வீடுகளில் குடும்ப அங்கத்தினர்கள் இணைய தள தேடலில் ஒரே நேரத்தில் ஈடுபடுவது, தகவல்களை பரிமாறிக் கொள்வது முதல் பெற்றோர் - குழந்தை இடையிலான கணனித் தொடர்பு வரையில் புதிய வாய்ப்புகளையும் அனுபவங்களையும் வழங்கக் கூடியதாகும். தொழில் நிறுவனங்களில் உள் மற்றும் வெளித் தொடர்புகளுக்கும் பயிற்சி அளிப்பதற்கும் கல்வி மற்றும் சிறப்புக் கல்விக்கும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குப் பகிர்வுகளுக்கும் புதிய வசதிகளை ஏற்படுத்தித் தரக் கூடியதாகும்.







எண்ணெய்த் தன்மையுள்ள மீன்களில் ஒமெகா - 3 கொழுப்பு (Omega - 3 fats) காணப்படுகின்றது. எண்ணெய்த்தன்மை கூடியளவு மீன் உணவில் காணப்படும். இவ்வகைக் கொழுப்பு ஆண்களின் சலப்பையின் அடிப்பாகத்திலுள்ள சுரப்பியில் (Prostate Gland) ஏற்படும் புற்றுநோய் மேலும் தீவிரமடைவதிலிருந்து காப்பாற்றுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

புரஸ்ரேட் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோயினால் உருவாகும் கட்டிகள் அல்லது வீக்கங்கள் வேறு கலங்களை உதாரணமாக என்பு மச்சை - பாதிக்குமானால் உயிர் ஆபத்துகளை ஏற்படுத்தக் கூடும். சமன் போன்ற மீன் வகைகளில் காணப்படும் ஒமெகா - 3

# ஒமெகா – 3 கொழுப்பின் உயிர் காக்கும் தன்மை

எண்ணெய் இந்த நோயைத் தடுத்து விடுவதாக ஆய்வுகூட சோதனைகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மான்செஸ்டர் சிறிஸ்டி மருந்துவமனை ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த முறை புற்றுநோய் தொடர்பான பிரிட்டிஷ் சஞ்சிகையில வெளியாகியுள்ளது.

ஒமெகா - 3 மற்றும் ஒமெகா - 6 கொழுப்புகள் அடங்கிய சம உணவினை எடுத்துவரும் ஆண்களுக்கு சலப்பையைச் சுற்றியுள்ள சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் அதே இடத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒமெகா - 3 கொழுப்பு மெக் கரல் மற்றும் ரூனா போன்ற மீன் வகைகளிலும் காணப்படுகின்றது. இந்த கொழுப்பு புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பதாகவும் மற்றும் இதயநோய்களை தடுப்பதற்காகவும் முன்பு கண்டறியப்பட்டிருந்தது.

ஒமெகா-6 கொழுப்பானது மரக்கறி எண்ணெய், விதைகள், போன்றவற்றில் காணப்படுகின்றது. இது எம்மை சுகமாக வைத்திருப்பதிலும் பெரும் பங்கு வகிக்கிறது.

# நித்திரை வருகிறதா.....

மனித வாழ்க்கையில் நித்திரை என்பது அத்தியாவசியம். ஒருவரின் நித்திரை அவரது வேலையில் பிரதிபலிக்கிறது.

குறைவான அல்லது இடையூறான நித்திரை என்றால் அது வேலையைப் பாதிப்படையச் செய்யலாம். அல்லது மற்றவர்களுடன் நீங்கள் பேசும் உரையாடலானது நித்திரையின்மையால் பாதிப்புக்குள்ளாவதோடு, கவனத்தையும் சிதறச் செய்யும். நித்திரையின்போது உடல் மற்றும் மூளைக்கும் ஓய்வு கிடைக்கிறது. இதன் காரணமாகவே காலையில் தூங்கி எழுந்ததும் களைப்பின்றி கண்காணிப்புடனும் இருக்கிறோம்.



நித்திரை என்பது ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது. சராசரியாக சுமார் 7 மணி முதல் 8 மணி நேரம் வரை நித்திரை அவசியமாகிறது.

நீங்கள் உரிய அளவு தூக்கத்தை மேற்கொண்டீர்களா என்பதை அடுத்த நாள் உங்களின் வேலை மற்றும் நீங்கள் உணர்வதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அதிக அளவு நித்திரையும் மிகவும் குறைவான அளவுநித்தரையும் மிகவும் களைப்பையும் எரிச்சலையும் தரும். தூக்கத்தின் போதுதான் வளர்ச்சிக்கான ஹார்மோன் சுரக்கும் என்பதால், குழந்தைகள், சிறுவர்கள், டீன் - ஏச் வயதுடையோருக்கு பெரியவர்களைக் காட்டிலும் அதிக நேரம் நித்திரை தேவைப்படும்.

வயது வந்த பெரியவர்களுக்கு நிலையான, நீடித்த தூக்கம் என்றால், வயது முதிர்ந்தோரின் தூக்கத்தின் அளவு மாறுபடுகிறது. வயதானவர்களைப் பொறுத்த வரை இரவில் அடிக்கடி முழித்துக் கொள்ளும் வழக்கம் கொண்டவர்களாக உள்ளனர். பொதுவாக தூக்கம் உடலில் ஏற்படுவதற்கான சரியான காரணங்கள் என்று எதுவும் அறிவியல் பூர்வமாக தெளிவுபடுத்தபடவில்லை.

நம் உடலில் கடிகாரம் போன்று சுழற்சி முறையின அடிப்படையிலேயே தூக்கமும் ஏற்படுகிறது. உடலில் நிகழும் சில இரசாயன மாற்றங்களாலும் தூக்கம் தூண்டப்படுகிறது. மேலும் நாம் உண்ணும் உணவும் ஒரு முக்கிய காரணமாகிறது.

# 'பாஸ்கு' தன்நாடு கோரிக்கை கைவிடப்பட்டதா?

'பாஸ்கு' (Basque) தாயகத்துக்காகப் போராடி வரும் 'எட்டா' (ETA) தீவிரவாத அமைப்பு கடந்த வாரம் நிரந்தரமான போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் போர் நிறுத்தம் அறிவித்த 'எட்டா' இம்முறை 'நிரந்தரமாக' போர் நிறுத்தம் என்று அறிவித்திருப்பதன் நோக்கம் இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை





அல்லது புரிய வைக்கப்படவில்லை.

ஸ்பெயின் நாட்டின் வட பகுதியிலுள்ள ஏழு பிரதேசங்களுக்கும் விடுதலை கோரி 'எட்டா' இயக்கம் கடந்த 38 வருடங்களாகப் போராடி வந்துள்ளது.

எவுஸ்காடி டா அஸ்காடா சுனா (Euskadi Ta Askata suna) என்பதின் சுருக்கப் பெயரே 'எட்டா' என்பதாகும்.

ஜெனரல் பிராங்கோவின் கடும் ஒடுக்குமுறையான சர்வாதிகாரத்தைக் கடுமையாக எதிர்த்த மாணவர் அமைப்பாக இது 1960 ஆம் ஆண்டுகளில் தோற்றம் பெற்றது.

பிராங்கோவின் ஆட்சியின் கீழ் பாஸ்குமாழி தடைசெய்யப்பட்டது. அவர்களின் தனித்துவமான கலாசாரம் நசுக்கப்பட்டது. புத்திஜீவிகள் அவர்களின் அரசியல் கலாசார கொள்ளைகளுக்காக சிறை வைக்கப்பட்டனர். அல்லது சித்திரதை செய்யப்பட்டனர்.

பாஸ்கு பிரதேசம் பிராங்கோவுக்கு கடும் எிர்ப்பைக் காட்டிவந்தது. 1975 ஆம் ஆண்டு பிராங்கோ மரணமாதைத் தொடர்ந்து ஸ்பெயினில் ஜனநாயகம் தழைக்கத் தொடங்கியதால் அப்பிரதேசத்துக்கு உள்ளகஆட்சி கிட்டுவதாயிற்று.




ஆனால், 'எட்டா' அமைப்பும் அதன் ஆதரவாளர்களும் முழு சுதந்திரத்திற்காகப் போராடி வந்தார்கள். பாஸ்கு பிரதேசத்தில் இப்பொழுது தனி நாடாளுமன்றம் உண்டு. காவல்துறை உண்டு. கல்வித்துறை பிரதேச ஆட்சியின் கீழ் இருக்கிறது. வரி அறவிடும் அதிகாரமும் உண்டு.




ஆனால், இவைகளுடன் 'எட்டா' திருப்தியடையவில்லை.

எட்டாவின் 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தில் அதன் வன்செயல்களினால் 800 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஸ்பெயின் நாட்டின் தேசிய காவல்படையைச் சேர்ந்தவர்களும் உள்ளூர் மற்றும் தேசிய அரசியல்வாதிகளும் அடங்குவர்.

சமீப காலமாக எட்டாவின் சக்தி குறிப்பிடக்கூடிய அளவுக்குத் தேய்ந்து போய்விட்டதாகக் கருதப்பட்ட போதிலும், உண்மையில் சக்தி குறைந்த அமைப்பாகப் போய்விட்டதா, அல்லது சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றதா? என்பதில் வாதப்பிரதிவாதங்கள் நீடிக்கின்றன.

1970ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து வருடத்தில் சராசரி 100 பேரைக் கொன்று வந்த எட்டாவின் செயற்பாடுகள், ஸ்பெயின் சர்வாதிகாரத்திலிருந்து மீண்டு ஜனநாயகத்தை நோக்கி நகரத் தொடங்கியதை

## 'எட்டா' நிரந்தரப் போர் நிறுத்தம் எழுப்பும் கேள்வி

அடுத்து குறைந்து விட்டதாகக் கருதப்படுகின்றது.


'எட்டா'வின் உறுப்பினர்கள் நூறுபேர் பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளின் பாஸ்குடனான எல்லைப்பகுதிகளில் அங்குமிங்குமாக இருந்து செயற்பட்டுவருகிறார்கள்.

எட்டாவின் அரசியல் பிரிவு தடைசெய்யப்பட்டுள்ளது. எட்டாவின் செயற்பாடுகளுக்கு அரசியல் பிரிவு தடை செய்யப்பட்டதின் மூலம் நிதி ஆதாரங்கள் போய்ச் சேருவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இவ்வியக்கம் இப்பொழுது எந்த அளவு பெரிதாகவிருக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால், எட்டாவில் பயிற்சி பெற்ற இயக்கவாதிகள் சம்பளம் பெற்று முழு அளவில் பணியாற்றுபவர்கள். நான்கு பேர் அடங்கிய குழுக்களாக ஆங்காங்கே இருந்து செயற்படுவதாகவும் அவ்வாறானவர்கள் ஒரு முப்பது பேர் இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

ஸ்பெயின் அரசின் தீவிர நடவடிக்கைகளால் 'எட்டா' உறுப்பினர்கள் மக்கள் கருத்துக்களை அறிய முடியாத வகையில் தனிமைப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகின்றது. 1997 ஆம் ஆண்டு பாஸ்கு பிரதேசத்தில் ஆளும் உள்ளூர் ஆட்சிமன்ற உறுப்பினர் 24 வயதான மிக்குவல் அஞ்சல் பிலாங்கோ என்பவர் கடத்தப்பட்டதையடுத்து எட்டாவின் மக்கள் ஆதரவில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. கடத்தப்பட்டவரை விடுதலை செய்வதற்குமுன் தங்கள் தரப்பில் சிறையிலிருக்கும் 460 போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரியிருந்தனர் – கோரிக்கை அரசினால் நிராகரிக்கப்பட்டது. பிலாங்கோவின் உடல் துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டு அவர் மருத்துவமனையில் மரணமானர்.

இதையடுத்து ஸ்பெயின் முழுவதும் 60 இலட்சம் மக்கள்





எட்டா தனது வன் செயல்களைக் கைவிடவேண்டும் என்று ஆறு நாள்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதையடுத்து காலவரையறையற்ற போர் நிறுத்தம் ஒன்றை எட்டா அறிவித்தது. ஆனால், வன்முறையைக் கைவிடாதவரை பேச்சுக்கே இடமில்லையென்று அரசு அறிவித்ததால் 1999 டிசெம்பரில் போர் நிறுத்தம் முடிவுற்றது.

இப்பொழுது 'எட்டா' அமைப்பு நிரந்தரப்போர் நிறுத்தம் அறிவிப்பதற்கு ஐரிஷ் குடியரசு இராணுவமும் (ஐ.ஆர்.ஏ) அதன் அரசியல் பிரிவான சின் பெயினும் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

எட்டா அமைப்பும் ஐ.ஆர்.ஏயும் கடந்த 30 ஆண்டு காலமாக தனிநாடு கோரிப் போராடி வந்ததன் பின்னர் இப்பொழுது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளன.

# என் நண்பனின் 'நன்றி'

அன்று .... மதியம்....
நாவலர் வீதியில்
திடீரென என் கண்முன் - அவள்
நீண்ட நாள்களின் பின்...

"அவளின் மோட்டார் சைக்கிளின்
அருகே -என்
மோட்டார் சைக்கிளை செலுத்தினேன்
முறைத்தாள்...
சிரித்தேன் கள்ளனாக...
காறித் துப்பினாள்... கைநீட்டி
என்னை மறித்தாள்
அக்கம் பக்கம் பார்த்தேன் - நல்லூர்
பின் வீதி வெள்ளிக்கிழமை என்பதால்
மக்கள் நடமாட்டம் மேலதிகமானது -
துப்பல்
முகத்தை துடைத்து
சாதுரியமாக தப்பித்து போனேன்"

இது பல மாதங்களின் முன்
நடந்திருந்தது.

இந்த பழைய நாள் நினைவில்வர -
இப்போ
பழிவாங்க மனம் தூண்டியது...

அவள் சைக்கிளில் வந்தமை...
அவளின் வேகத்தை குறைக்கும்
என் மனம் சொல்லியது...

இரு தடவைகள் அவளைச் சுற்றி வந்து
கண் அடித்தேன் - முதல்
தடவை அவள் தலை கவிழ்ந்து
யோசனை எங்கோ இருந்துள்ளது
ஏனெனில் - அவள்
என்னைக் கவனிக்கவில்லை

இரண்டாம் தடவை
நேருக்கு நேர் கண்கள்
மோதுகையில் - அவள்
கண் சிவந்து முகம் சாந்தம் இன்றி
கோபம் விரிந்தது...
பற்கள் நறுநறுத்தன....
ஆயினும்,
பார்வை நிமிர்ந்திருந்தது

இது தான் அவளின் அன்றாட...
வழி என்பதை திடமாக்கினேன்
என்னை தயார்ப்படுத்தினேன்

இடையில் வீதியின் குறுக்கே
தனியார் கல்வி நிறுவன மாணவர்களின் கூட்டம்
பெருக்கெடுத்தமையினால்....
அவளிலிருந்து விடுபட்டேன் - அந்த
இடையில் அவளைக் காணவில்லை
எங்கு தப்பினாளோ?....
சிந்தனையில் திரும்புகையில்
அவள் வீதியோரம் -பல
கற்களை பொறுக்கிக்கொண்டிருந்தாள் - அவை
சைக்கிள் கூடையை நிரப்பின
அவதானித்து மெல்ல நகர்ந்தேன்
கையில் தடியுடன் பெருமாள் கோயிலை
சுற்றி வழி போனாள்....

"இந்த நேரம் எங்க திரியிறாய்?...
வீட்டில வேலை இல்லையா?...
பற்களை இழித்து அவளை சீண்டினேன்
"கிட்டவா சொல்றன்"

அவள் கை கற்கள் உள்ள கூடையினுள் ....
"நீங்கள் எல்லாம் எங்கட உடுப்பை போட்டால்..
நாங்கள் எதைப் போடுறது?...'
நக்கல் இழைந்து...
"நான் யாரோ தம்பி போகுதாக்கும் என்று
நினைச்சன்..." என்றேன்
இன்னும் ஏதோ சொன்னேன்....
தன் சைக்கிளை வீதியோரம் நிறுத்தி கிட்டே
வரும்படி அழைத்தாள்... நான்
ஆண் என்ற தைரியத்தில் விசமம் கொண்டு கிட்டே
போனன்....

உங்களுக்கு இப்ப என்ன பிரச்சினை?
கேள்வி பொறுமையாக வந்தது
"ஏன்?" வீழ் நீர் ஒடக் கேட்டேன்
"சரியா கஷ்டப்படுறீங்க" அதுதான்...
முறைத்தவன்
"உங்களோட கதைக்க வேணும் போல
இருக்கு...
உங்கட பெயர் என்ன?.... ஆ....
தெரியாமல் கேக்கிறன்.... உங்களுக்கு
இது தானா தொழில்? ...." என அவள்
அதிகாரம் தொனித்தது
எந்தத் தடுமாற்றமும் இன்றி... என்
மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை
கையில் பதிந்தாள்
Cel Phone ஐ எடுத்து ஏதோ ஒரு
இலக்கத்தை டயல் செய்தாள்...
அவ்வளவுதான் நான் மோட்டார்
சைக்கிளுடன் எந்த - திசையால்
வேகங்கொண்டேனோ
தெரியவில்லை... 'மச்சான் 32 வயசில
நல்லதொரு படிப்பு...'

என் நண்பனிடம் முறையிடுகையில் -
அவன் சிரித்தான்... விவரமறிந்தான்...
வாங்காமல் தப்பி விட்டாயா?
எச்சரித்தான்...

ஏனெனில்,
அப்போதுதான் தெரியும் - அவள்
என் நண்பனின் நன்றி என்று ...
வெட்கம் கொண்டேன்...

- அக்கினிக் குஞ்சு

# கபடத்தனம்

**வே**ட்டைக்காரர்கள் நரி ஒன்றைத் துரத்தி சென்றனர். பயந்து ஓடிய நரி மரம் தறித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனிடம் சென்று, தான் மறைந்து இருப்பதற்கு ஒருமறைவிடம் தந்துதவும்படி கெஞ்சிக் கேட்டது. அந்த மரம் வெட்டி தனது குடிசையைச் சுட்டிக்காட்டி அதற்குள் செல் என்றான். நரி அதற்குள் சென்று ஒளிந்து கொண்டது. வேட்டைக்காரர்கள் வந்து "ஒரு நரியைக் கண்டாயா?" என்று மரம் வெட்டியைக் கேட்டார்கள். அதற்கு மரம்வெட்டி இல்லையென்று கூறினான். ஆனால், அவன் தனது ஒரு விரலால் தன்னுடைய வீட்டு மூலையைச் சுட்டிக் காட்டினான். ஆனால், மரம்வெட்டியின் அந்தக் குறியீட்டைக் வேட்டைக்காரர்களால் புரிந்து கொள்ளவில்லை. வேட்டைக்காரர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள்.



வேட்டைக்காரர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார்கள் என்பதை அறிந்த நரி மரம்வெட்டிக்கு ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் திருட்டுத் தனமாக வெளியேறியது. 'உனக்குப் பாதுகாப்பு அளித்த விருந்தாளிக்கு ஒரு வார்த்தை நன்றி கூட சொல்லிக்கொள்ளாமல் நீ திருட்டுத்தனமானதாக செல்வது சரியானதா? என்று நரியைக் குறை கூறினான் மரம்வெட்டி. 'நீ ஒரு அருமையான இனிய விருந்தாளியாகத்தான் இருக்கிறாய். உன்னுடைய நாக்கைப்போலவே உனது விரலும் மிக நேர்மையாக இருந்திருந்தால், உனக்கு நன்றி கூறாமல் உன்னுடைய வீட்டை விட்டு ஒருபோதும் நிச்சயமாகச் சென்றிருக்கமாட்டேன்" என்றது நரி.

**தீ.இருதய நேசன், தரம் - 9பி, யா/ஊர்.புனித அந்தோனியார் கல்ரி.**

---

# பரீட்சை நேரத்தில்...

***பரீட்சைநெருங்கிக் கொண்டிருக்கிறது. இதனை எண்ணி சில மாணவர்களுக்கு பயம் பதட்டம் தானாகவே ஏற்படும். இதனைப் போக்கி சிறப்புடன் பரீட்சை எழுத முடியும்.***

**இதோ உங்களுக்காக சில குறிப்புகள்**

* முதலில் உங்கள் மேல் உங்களுக்கு நல்ல நம்பிக்கை வேண்டும். என்னால் பரீட்சையில் சித்தி பெற முடியும் என்று நினைத்துப் படிக்க ஆரம்பியுங்கள்.

* படிக்கும் போது பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களை உடனடியாக சக மாண வர்களையோ ஆசிரியர்களையோ, கேட்டுத் தெரிந்து தெளிந்து, கொள்ளுங்கள்.



* சிலபேர் பாடங்களை மனப்பாடம் செய்வார்கள். சிலபேர் பரீட்சைக்கு சில நாள்களுக்கு முன் பழைய வருட கேள்வித்தாள் களிலுள்ள முக்கிய கேள்விகளை மட்டும் படித்துச் செல்வார்கள். இதுமிகவும் தவறான அணுகுமுறை. இதனால் பாடத்தில் சிறந்த மதிப்பெண்கள் கிடைக்கலாம். பாடத்தைப் பற்றிய பூரண அறிவு கிடைக் காமல் போகும்.

* முதலில் நேரத்தைத் திட்டமிட்டு படிக்கவேண்டும். நீங்கள் படிக்க விரும்பும் நேரம் காலையா? மாலையா? என்பதை முடிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு நேரம் படிக்கிறீர்கள் என்பது முக்கியமில்லை. நீங்கள் படிக்கும் நேரத்தை எவ்வ ளவு சரியாகச் செலவழித் தீர்கள் என்பதுதான் முக்கி யம். விருப்பமான பாடம், கடினமான பாடம் என இரண்டையும் மாறிப்மாறிப் படியுங்கள். இது உற்சாகத்தைத் தரும். இதற்கு ஏற்ற வகையில் நேரம் மற்றும் பாட அட்டவணைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள். உற்சாகமாகப் படியுங்கள்.

பிறகு என்ன? அனைவருக்கும் பரீட்சையில் கிடைப்பது நல்ல மதிப்பெண்கள்தான்.

**- கவிதா**

---




## சிந்தனைக்கு..

★ பொறுமையாயிரு ஆனால் படபடப்பாயிராதே.
★ சிக்கனமாயிரு ஆனால், கருமியாயிராதே
★ அன்பாயிரு ஆனால், அடிமையாயிராதே
★ இரக்கங்காட்டு ஆனால் ஏமாந்து போகாதே.
★ நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே
★ வீரனாயிரு ஆனால், போக்கிரியாயிராதே.
★ எல்லோரிடத்திலும் அன்பாயிரு. உனது கொள்கையில் உறுதியாய் இரு.

காத்தலிங்கம் உதயமலர்
யா/தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை
மகாவித்தியாலயம்

# உங்களுக்குத் தெரியுமா?

1. சூரியனைச் சுற்றித்தான் மற்றக் கிரகங்கள் இயங்கி வருகின்றன என்பதை முதன் முதலில் கண்டுபிடித்துக் கூறியவர் ?
   *நிக்லஸ்கொப்பணிக்கஸ்*
2. மைக்கேல் பாரடே மின்சாரத்தைக் கண்டுபிடித்த ஆண்டு?
   *1821 ஆம் ஆண்டு*
3. பரிணாமக் கொள்கையை உருவாக்கியவர்?
   *சார்லஸ் டார்வின்*
4. பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தவர்?
   *அலெக்சாண்டர் பிளமிங்*
5. பெருவெடிக் கொள்கைகளை உருவாக்கியவர்?
   *ஜாக்ஜஸ் லெமாட்ரி*
6. வெறி நாய்க்கடிக்கு மருந்து கண்டுபிடித்த விஞ்ஞானி?
   *லூயி பாஸ்டர்*
7. குவான்டம் தியரியை உருவாக்கியவர்?
   *நைல்ஸ் போர்*
8. எச்.ஐ.வி.கிருமியைக் கண்டறிந்த விஞ்ஞானிகள்?
   *லூக் மான்டேக்னியர் (பிரான்ஸ்)*
   *ராபர்ட் காலோ (அமெரிக்கா)*
9. புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர்?
   *ஐசக் நியூட்டன்*
10. தொடர்புக் கொள்கையை வெளியிட்டவர்?
    *ஆல்பர்ட் ஐன்ஸ்டின்*
11. பீரியாடிக் டேபிளை முதன் முதலில் உருவாக்கியவர்?
    *டிமித்ரி மென்டிலேவ்*
12. எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்த ஜேர்மன் விஞ்ஞானி?
    *வில்ஹெம் ரோன்ட்ஜென்*

## வாழைப்பழம்



*வாழை மரத்தில் காய்த்த இந்த*
*வாழைப் பழத்தைப் பாருங்கள்*
*சுவை மிகுந்த வாழைப்பழம்*
*சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடுங்கள்*

*அப்பாவிற்கும் ஒன்று அம்மாவிற்கும் ஒன்று*
*எனக்கு மட்டும் இரண்டு*
*தம்பி தங்கை சண்டை பிடித்தால்*
*அவர்களுக்குப் பாதி தான்*

கிருஸ்ணசாமி சுவர்ணா
மானிப்பாய்.

## உங்களின் கைவண்ணங்கள்




ப.பிரசாந், தரம் - 7ஏ,
யா/நெல்லிப்பழை யூனியன் கல்லூரி .



இ.சுகிர்தனி, தரம் - 2ஏ,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.



இ.பிரணவநாத், தரம் - 6டீ,
யாழ்.இந்துக் கல்லூரி.



வ.ஐங்கன், தரம் - 10,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!

போட்டி இலக்கம் - 15



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டிகத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரு.150/=, ரு.100=, ரு.75 /= பெறுமதியான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும். 5ஆம் தரத்துக்கு உட்பட்ட சிறுவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியும். எங்கே முயன்று பாருங்கள்! கை வண்ணத்தைக் காட்டுங்கள்!!

*இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -*


**ஆல் சிலோன் டிஸ்ரிபுட்டர்ஸ்**
*212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே : 222 554.*


*அனுப்பவேண்டிய முகவரி:-*
**'வர்ணம் தீட்டுவோம்' - 15, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்ப* தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் -14இல் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் விவரங் கள் வருமாறு:-

• **முதலாம் இடம் :-**
*கிதர்சினி, தரம் - 2,*
*கிரொல்வெலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.*

• **இரண்டாம் இடம் :-**
*ரவீந்திரன் ஆரூரன், தரம் 4சு,*
*புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.*

• **மூன்றாம் இடம் :-**
*ஜூன் சிஸ்ரா,*
*தரம் - 4பி,*
*சண்டுக்குளி மகளிர் கல்லூரி.*

# படித்ததில் இருந்து சிந்திக்க... 03

படைப்புக்கள் பல வெறும் பார்வைகளுக்கு
அப்பால் சிந்திக்க வைக்கும் ஆற்றல் கொண்டவை
அந்த வகையில்....
மிகவும் நுணுக்கமாக மனித உணர்வுகளை
உள்ளார்ந்தமாகப் படைக்கும் ஆற்றல் கொண்ட
கவிக்கோ அப்துல் ரகுமானின் 'ஆலாபனை'
என்ற கவிதைத் தொகுப்பு உண்மைகளை உயிர்ப்புடன்
காட்டி நிற்பதைக் காணலாம்.
'படிப்பு' என்ற 'வெறும் வாசிப்பை' விடுத்து
வாசிப்பவர்களை சிந்திக்க வைக்கும்
ஆற்றல் கொண்டதே "கனவு"... படிப்போம்...
சிந்திப்போம்....

- அக்கினிக் குஞ்சு

## கனவு

கனவு காணாதவர் யாரும் இல்லை
இயற்கையும் கூடக்
கனவு காண்கிறது

மேகத்தின் கனவு வானவில்
இரவின் கனவு நட்சத்திரங்கள்
பூமியின் கனவு பூக்கள்
சூரியனின் கனவு நிலவு
ஆணின் கனவு பெண்
கண்ணீரின் கனவு புன்னகை
சொற்களின் கனவு கவிதை
உண்மையின் கனவு பொய்
கடவுளின் கனவு நாம்
எனவே, நமது கனவு
கனவின் கனவு.

கனவு, கண்மூடிக் காணும் காட்சி
உறக்கத்தில் விழிப்பு
தூக்கம் போடும் புதிர்

ஆசைகளின் அந்தரங்க நீலப்படம்
காயங்கள் முகம் பார்க்கும் கண்ணாடி
நினைவுகளில் உளறல்
சொர்க்கத்தின் சாளரம்
நமக்கு நாமே பேசும் புரியாதமொழி
மரபு இலக்கணம் வெறுத்த மனம்
எழுதும் புதுக்கவிதை
மனிதனின் அமானுஷ்யம்

கனவு பொய்யல்ல
அது உண்மையின் நிர்வாணம்

கனவு மனிதனின் அந்தரங்க அறை
அங்கேதான் அவன்
தன் நாடக வேடங்கள்
அனைத்தையும் களைந்து விட்டு
நிஜமாக இருக்கிறான்

கனவுகளே நம்மை அடை காத்தன
கனவுகளே நமக்குச் சிறகுகள் தந்தன

கனவுகளே நம்மைப்
புதிய கரைகளை நோக்கி அழைத்த
கலங்கரை விளக்குகளாய் இருந்தன

கனவுகளே
நம் கறுப்பு வெளுப்பு வாழ்க்கைக்கு
வர்ணங்கள் தீட்டுகின்றன

வாருங்கள்!

கனவுகளால் வாழ்கின்றவர்களை
வாழ்த்துவோம்
கனவுகளில் வாழ்கிறவர்களுக்காக
அனுதாபப்படுவோம்

*ஆலாபனை (கவிதைத்தொகுப்பு), கவிக்கோ அப்துல் ரகுமான்*
*வெளியீடு - 1995-பெப்.பக்கம் -14-16*

# கடன்

## கடுகுக்கதை

"ஐயா இந்த ஒரு வாயையும் பிடியுங்கோ" இடியப்பத்தையும் சொதியையும் பிசைந்து ஊட்டினான். துவாயை எடுத்து சுடுநீரில் நனைத்து ஒற்றி முகத்தைத் துடைத்தான்.

"காணும் தம்பி இப்ப கொஞ்சம் லேசா இருக்குது. நீ போய்ச் சாப்பிட்டிட்டு வாவன்"

"இல்லை... எனக்கிப்ப பசிக்கேல்லை" என்றவன் சிறுநீர் நிரம்பியிருந்த பையை ஊற்றுவதற்காக சலகூடப்பக்கம் போனான்.

'வாட்டி'லை இருக்கிறவையளை விட உதவிக்கு நிற்கிறவையளுக்குத்தான் சிரமம் கூட... பெடியன் இரவு நித்திரை கொள்ளவேயில்லை. நுளம்புத் தொல்லை வேறு...

"படுத்திருங்கோ நான் குடிதண்ணீர் எடுத்து வாறன். தனிய எழும்பி நடக்க வேண்டாம்"

அன்புக் கட்டளையுடன் வெளியே போய்விட்டான்.

இப்பவும் நன்றாக நினைவிருக்கிறது அவன் வந்த கோலம். தாயில்லை. தன்ரை தகப்பன் குடிகாரனென்றும். தனக்கு ஏதாவது வேலை தருமாறும் கேட்டு வந்தவன்தான். இன்றுவரை நேர்மையாக எங்களுடனேயே இருக்கிறான். எனது நான்கு பிள்ளைகளும் வளர்ந்து ஒவ்வொரு காரணத்திற்காகவும் வெவ்வேறு கண்டங்களில் வாழ்கிறார்கள்.

திடீரென எனக்கு இடுப்பிற்குக் கீழே செயலிழந்துவிட்டது. பெற்ற பிள்ளைகள் காசை அனுப்பினார்களே தவிர வேறெதையும் செய்ய முடியவில்லை. மூன்று மாதமாகவும் என்னைச் சுற்றிச் சுற்றிப் பணிவிடை செய்கிற அவனையும் பிள்ளைகளையும் ஒரு விதத்திலும் சமப்படுத்த முடியவில்லை.



டாக்குத்தர்மாருக்குக் கரைச்சல் கொடுத்து ஒவ்வொரு மாற்றத்தையும் கூட்டி வந்து காட்டுவான். இப்போது ஓரளவு நடக்குமளவிற்குத் தேறியிருக்கிறேன்.

"ஐயா! நாங்கள் இண்டைக்கு வீட்டை போகலாம். துண்டு வெட்டிப்போட்டினம்."

"உண்மையாகவா?" என்பது போலப் பார்த்தேன். ஆமென்று மீண்டும் தலையசைத்தான்.

சிறையிலிருந்து விடுதலையடைபவனை விட பத்து மடங்கு மகிழ்ச்சி எனக்கு.

எங்கள் வீட்டு நாய் "எங்கே இவ்வளவு காலமும் போயிருந்தாய்?" என்று கேட்பது போல் தாவல்போட்டு - மகிழ்ந்து செல்லமாகக் குரைத்தது.

பின்வளவை எட்டிப்பார்த்தேன்.

நான் கட்டிவளர்த்த தென்னம்பிள்ளைகளிலிருந்து பாளை வரமுன்னரே, ஓலைகளை வெட்டி விட்ட வடலி நான்கு பக்கமும் நுங்குக் குலைகளைத் தள்ளி தாகம் தீர்க்கத் தயாராக நின்றது. இவனைப் போலவே.....!

ந.விநோதரன்
ஓட்டுவெளி

# இராப் போஷணம்...!

உனக்கும் எனக்குமான
சமன்பாடுகளில்
'சரிவு' வந்துவிட்டது
அசாதாரணங்களின்
அடம்பிடிப்புகளால்...

உன்னை நானும்
என்னை நீயும்
'அடியோடு'
மறந்துவிட
முயற்சிப்போம்
எங்களுக்கான
மரணங்கள்வரை.

எங்களுக்கான
'இறுகிய உறவு'
எதையோ
அச்சுறுத்தல்
செய்யுமெனில்
அதை அறுத்துவிடல்
நமக்கே நல்லது

உன்தோள்களில்
நான் கைபோட்டுக் கொண்டதும்
உன்னால்
என் கண்ணீர்
துடைக்கப்பட்டதும்.

ஒரு 'துரதிஷ்டக்காரனாய்'
எனக்குள்
நானே கண்ட
கனவாய்ப் போகட்டும்...

அதெப்படி
என்னை சிலுவையில்
அறையப்போகிறார்கள்
என்றதும்
உன்னால் என்னை
உதற முடிந்தது
என்னால் இயலாதிருக்க.

எங்களுக்குள்
நிகழ்ந்து முடிந்த
இந்த
'இராப்போஷணத்தை' மட்டும்
அடிக்கடி நினைத்துப்பார்
'நாம்' இருப்போம்
நமக்குள்...!

கு.பா.தீபச்செல்வன்

# பூத்த கொடி பூக்களின்றி...

(IIஆம் பக்கத் தொடர்ச்சி)

**முதியோர் இல்லங்களை நாடாதீர்கள்!**

இன்றைக்குப் பெரும் பணம் படைத்தவர்கள் கூட தமது பெற்றோரை முதியோர் இல்லங்களில் கொண்டுபோய் சேர்த்து விட்டு தம்பாட்டில் ஜாலியாக இருந்து விடுகிறார்கள்.

இந்த நிலை மாறவேண்டும். உங்களைப் பெற்று ஆளாக்கிய அந்த தெய்வங்களுக்கு நீங்கள் இறுதிக்காலத்தில் செய்யக்கூடிய கைம்மாறு இதுதானா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

இத்தகைய பரிதாப நிலையினை நாளைக்கு நீங்கள் முதியவர்கள் ஆன பின்னர் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு உண்டுபண்ணக்கூடிய சூழ்நிலையும் உருவாகலாம்.

இன்றைக்கு யாழ்ப்பாணத்தி லுள்ள முதியோர் இல்லங்களுக்கு ஒரு தடவை சென்று பாருங்கள். அங்குள்ள முதியவர்களில் எதிர்பார்ப்புகளும், ஏக்கங்களும் தமக்கு சாகும் நேரத்தில் கூட ஒரு நல்ல தூய்மையான அன்பு கிடைக்கவில்லையே என்கின்ற பரிதாபநிலை.

பெற்ற பிள்ளைகளாலே நாம் புறந்தள்ளப்பட்டு விட்டோமே என்கின்ற ஓர் ஆதங்கம் அவர்களின் அடிமனதில் ஆழமாய் பதிந்துள்ளது என்பது மறைக்க முடியாத யாதார்த்தம்.

சிலர் முதியவர்கள் வீட்டில் இருப்பது கூட நாகரிகமில்லை என்கின்ற நிலைப்பாட்டுக்குக் கூட வந்துவிட்டார்கள்.

**வெளிநாட்டு மோகமும் காரணம்**

'பூத்தகொடி பூக்கள் இன்றி தவிக்குதம்மா...' என்று ஈழத்துக் கவிஞன் பாடியது போல இன்றைக்கு பல முதியவர்கள் தனித்து வாழுகின்ற அவலநிலை.

பிள்ளைகளைளெல்லாம் வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்து விட்டு தன்னந்தனியாக தம் வாழ்வை ஓட்டுகிறார்கள் பல முதியவர்கள்.

உண்மையில் வெளிநாட்டில் வாழுகின்ற பிள்ளைகள் தம் பெற்றோரையும் வெளிநாட்டுக்கு அழைக்கக் கூடிய வாய்ப்பிருக்கிறது.

தாய், தந்தையர்களை தம்முடன் அழைத்து அங்கு வைத்துப் பராமரிக்கக்கூடிய வசதி வாய்ப்புகளை வெளிநாடுகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

ஆனால், எந்தப் பிள்ளையும் தமது பெற்றோரை வெளிநாட்டுக்கு அழைப்பதில்லை. காரணம் அவர்கள் தமக்கு இடையூறாக இருப்பார்கள் என்பதும் அத்துடன், தமது ஊரில் உள்ள சொத்துகளை - வீடுகளை அவர்கள் கவனிக்கட்டும் என்ற எண்ணமும்தான் காரணம்.

இவ்வாறுதான் பெற்ற பிள்ளைகள் அருகில் இன்றி தனித்து வாழக் கூடிய சூழ்நிலையில் நோய் வாய்ப்பட்டுள்ள அவர்களை நல்லமுறையில் - அன்பாக பராமரிப்பதற்குரிய ஆளணியில்லாததால் அவர்கள் தற்கொலைக்குச் செல்கிறார்கள்.

**முதியோர் பாதுகாப்புத் திட்டம் வேண்டும்**

சிறுவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளது போல இந்த முதியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது அவசியம்.

குறிப்பாக கிராம மட்டங்களில் இருந்து இந்தத்திட்டத்தை கிராம சேவையாளர்கள், பிரதேச செயலகர்கள் முன்னெடுக்க வேண்டும்.

இதன் மூலம் உண்மையில் எமது பாரம்பரிய முதுசங்களான முதியவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட வழி கிட்டும்.

இன்றைக்கு கிராம மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் முதியோர் தினவிழா கொண்டாடப்பட்டாலும் அதன் பயன்தான் என்ன? வெறுமனே ஒரு முதியவரை அழைத்து அவருக்குப் பொன்னடை போர்த்தி வேட்டி, சால்வை கொடுப்பதுதான் மிச்சம். ஆனால், அவர்களுக்கு பின்னாலே எத்தனை பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்கு தூய்மையான அன்பு கிடைக்கிறதா? என்பதுபற்றி யாரும் சிந்திப்பதில்லை.

**கலாசார சிதைவுக்கு வழிகோலுகிறது.**

எமது கலாசாரத்தின் பிரதான அங்கமாக கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை உள்ளது. அதிலும் அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் என்கின்ற மகத்தான புனித தத்துவம் அடங்கியிருக்கிறது.

அந்தக் கலாசார விழுமியம் இன்று சறுக்கிக் கொண்டு போகிறது என்றுதான் சொல்லாம்.

பெற்ற தாயை சுமையெனவும் வளர்த்த தந்தையைப் பாரமாகவும் நினைத்து அவர்களின் உள்ளக்கிடக்கைகளை அறியாமல் - தெரியாமல் - தூக்கி எறியும் இளம் சமுதாயமே கொஞ்சம் நில்லு! இதற்குப் பதில் சொல்! உன்னை உலகிற்கு அறிமுகம் செய்த அந்த தெய்வங் களையே நீ உதாசீனம் செய்கிறாயே இது உனக்கே நியாயமா?

வாழும் அந்த இறுதிக் காலத்தில் அன்போடு நடந்து உன் கடமைதனை இறுதிவரை செய்வாயாக! ஏனெனில், உன் வாழ்வின் முதல் அத்தியாயத்தைப் புரட்டித் தந்தவர்களே அவர்கள்தான்.

# சோதனையா? கொள்ளையா?

கடந்த வருடம் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்து தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பதற்றம் நிலவியது. கிளைமோர் தாக்குதல்கள், கிரேனேட் தாக்குதல்கள் என்பவற்றால் படையினர் பலியாகினர். படையினரின் மிலேச்சனத்தனமான பதில் தாக்குதல்களில் பல பொதுமக்களும் பலியாயினர். கண்ட கண்ட இடங்களில் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் படையினரால் தாக்கப்பட்டனர்.

இரவு நேர ஊரடங்கு நடைமுறையில் இல்லாவிட்டாலும் மக்கள் பறவைகள் போல் இருள் சூழ முன்னரே தங்கள் வீடுகளைச் சென்றடைந்தனர். இராணுவம் எங்கும் குவிக்கப்பட்டிருந்தது. இராணுவத்தினரில் பலர் தங்கள் முகங்களைக் கறுப்புத் துணியால் மூடிக்கட்டிக் கொண்டு முக்கிய சந்திகளில் நின்றனர். அவ்வாறானவர்கள் இராணுவ வாகனங்களில் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

வாகனங்கள் நிறுத்தப்பட்டுச் சோதிக்கப்பட்டன. அதேபோல பாதசாரிகளும் சோதிக்கப்பட்டனர். சுமார் 25 வருடங்களாக இராணுவச் சோதனைகளுக்கு மக்கள் பழக்கப்பட்டுள்ளனர். வாகனங்களோ பொதுமக்களோ நிறுத்தப்பட்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்படும் போது, அவ்வாறு அவர்களை நிறுத்திச் சோதனைகளை மேற்கொள்பவர்கள் யார் என்பதை, சோதனையை மேற்கொள்வோர் இனங்காட்ட வேண்டும்.

தென்பகுதியில் பாதாள உலகக் கும்பல்களால் வாகனங்கள் மறிக்கப்படுகின்றன, கொள்ளையடிக்கப்படுகின்றன. அவ்வாறான சம்பவங்களின் போது அந்தக் கொள்ளையர்கள் தங்கள் முகத்தை முகமூடி அணிந்து அல்லது சீலையால் மூடிக்கட்டி மறைத்துக் கொள்கின்றனர். தங்களை யார் என இனங்காட்டாமலேயே கொள்ளைகளை மேற்கொள்ளுகின்றனர். அந்தக் கொள்ளையர்கள் அரச ஊழியர்கள் அல்லர். மக்களின் வரிப் பணத்தில் சம்பளம் பெறுபவர்களும் அல்லர். மேலும் தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை (கொள்ளை, கொலை) சட்ட விரோதமானவை என்பதை அவர்கள் அறிவர். எனவே, தங்களை இனங்காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக அவர்கள் தங்கள் முகத்தை மறைக்கின்றார்கள்.

முப்படைகளும் பொலிஸாரும் அரச ஊழியர்கள். மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெறுபவர்கள். மக்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றப் பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். எனவே அவர்கள், தாங்கள் பாதுகாப்புத் தரப்பினர் என்பதைச் சர்ச்சைக்கிடமின்றி உறுதி செய்தல் வேண்டும்.

தங்கள் வாகனங்களை நிறுத்துபவர்கள், தம்மைச் சோதனைக்காக நிறுத்துபவர்கள், பாதுகாப்புத்தரப்பினர் தான் எனச் சந்தேகத்திற்கிடமின்றித் தெரிந்தால் மாத்திரமே மக்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்ற பூரண ஒத்துழைப்பை வழங்குவர். தன்னை அல்லது தனது வாகனத்தை அல்லது தனது வீட்டைச் சோதனையிடுபவர் பாதுகாப்புத் துறையினரே என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றித் தெரிந்தால் மாத்திரமே யாரும் பாதுகாப்புத் துறையினருக்கு ஒத்துழைப்பை வழங்குவர்.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பல பிரதேசங்கள் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அங்கெல்லாம் இராணுவ முகாம்கள் பல உள்ளன. சந்திக்குச் சந்தி இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பாதுகாப்புப் படையினரால் மக்களுக்குப் பாதுகாப்பில்லை.

வஞ்சகமில்லாமல் தெற்கைப் போலவே வடக்கு- கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் வழிப்பறிகள், களவுகள், கொள்ளைகள், வாகனக் கடத்தல்கள் எல்லாம் இடம்பெறுகின்றன. இந்த வன்செயல்களில் சம்பந்தப்பட்டோர் ஏதோ ஒரு விதத்தில் தங்களை இனங்காட்டிக் கொள்வதில்லை. முகமூடி அணிகிறார்கள் அல்லது தங்கள் முகங்களைத் துணியால் மூடிக்கட்டித் தங்கள் அடையாளங்களை மறைக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்களால் அந்தச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களை இனங்காண முடியவில்லை. குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. அவர்களால் மேற்கொள்ளக் கூடியது ஒன்றே ஒன்றுதான். பொலீஸில் முறையிடலாம். முறைப்பாட்டின் உறுதி செய்யப்பட்ட பிரதியைப் பெற்று வைத்திருக்கலாம்.

**யாழ் நகர விபத்து**

இதற்கிடையில் கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ். நகரில் கன்னாதிட்டிப் பகுதியில் விபத்துச் சம்பவம் தொடர்பாக விபத்திற்குள்ளான வாகனத்தை ஓட்டிச் சென்ற கோப்ரல் பி.எம். முனசிங்க, யாழ். நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் ஆஜர் செய்யப்பட்டார். இந்த வழக்கில் கோப்ரலின் நலனைக் கவனிக்க படை அதிகாரி ஒருவர் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார்.



இந்த விபத்துச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிப்பாயை இனங்கண்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருக்க வேண்டிய பொறுப்பு படைஅதிகாரிகளுக்கு உரியது. ஆனால், படை அதிகாரிகள் அவ்வாறு செயற்படவில்லை. சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டே சந்தேக நபரை இனங்காண முடிந்தது.

படையினர் கறுப்புச் சேலைத் துணிகளால் தங்கள் முகத்தை மறைத்துக் கட்டி உருமறைப்புச் செய்து கொண்டு நடமாடுவதால் அவர்களில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இலகுவில் அடையாளம் காணமுடியாமல் போகிறது.

# தேடுதலா? திருட்டா?

குற்றமிழைத்த படையினர் எவராயினும் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டிய பொறுப்பு படை உயரதிகாரிகளுக்கு உண்டு. எதிர்காலத்தில் குற்றமிழைக்கும் படையினரை உடனடியாகவே நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என நீதிவான் அறிவுறுத்தினார்.

இந்த விபத்துச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிப்பாயைக் காலதாமதமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்தமைக்காக மன்னிப்புக் கோரிய அந்த இராணுவ அதிகாரி, சிப்பாய்கள் கறுப்புத் துணியால் தங்களை உருமறைப்புச் செய்யும் நடைமுறை இப்போது இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சிப்பாய் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாவும் நஷ்டஈடு வழங்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணையின் போது இராணுவ அதிகாரி அளித்த விளக்கத்தின் படி கறுப்புத்துணியால் இராணுவத்தினர் தம்மை உருமறைப்புச் செய்யும் நடைமுறை இப்போதில்லை. இராணுவ அதிகாரியின் கூற்றுப்படி தற்போது கறுப்புத்துணியால் இராணுவத்தினர் தங்கள் முகத்தை மூடி மறைப்பதில்லை. அதாவது அவ்வாறான தோற்றத்தில் யாரும் காணப்பட்டால் அவர்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். எனவே நீதிமன்றத்தில் இராணுவ அதிகாரி அளித்த வாக்குமூலத்தின்படி இராணுவத்தினர் எவரும் கறுப்புத்துணியால் முகத்தை மூடிக்கட்டுவதில்லை.

அந்த அதிகாரி நீதிமன்றத்தில் அப்படித் தெரிவித்த பின்னரும் குடாநாட்டில் பரவலாக இராணுவத்தினர் தங்கள் முகங்களைக் கறுப்புத்துணியால் மூடிக்கட்டி நடமாடுவதைக் காண முடிகிறது. இதன்படி கீழ்க்கண்டவை குறித்து நாடும், அரசும், மக்களும் தீர்மானத்திற்கு வரவேண்டும்.

- இராணுவ அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி நீதிமன்றில் என்ன கருத்தையும் தெரிவிக்கலாம்.
- இராணுவம் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டது. அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை.
- சாதாரண நடவடிக்கைகளுக்கு அப்பால் பாரதூரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே கறுப்புத் துணியால் தங்கள் முகத்தை மூடிக்கட்டி அடையாளத்தை மறைக்க முயல்கிறார்கள்.
- குடாநாட்டில் பல இடங்களில் களவுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்தக் களவுகளை மேற்கொண்டவர்கள் கறுப்புத்துணியால் முகத்தை மூடிக்கட்டித் தங்கள் அடையாளத்தை மறைத்துள்ளனர். எனவே, அந்தக் களவுச் சம்பவங்களை இராணுவமே மேற்கொண்டது.
- தற்போது யுத்தம் இடம்பெறவில்லை. காட்டுப் போரின் போதே (Jungle war) இரு தரப்புகளும் உரு மறைப்பை மேற்கொள்வது வழக்கம். தற்போது அவ்வாறான நிலை இல்லை. எனவே உள்நோக்கத்துடனேயே முகத்தை கறுப்புத்துணியால் மூடிக் கட்டி தங்கள் அடையாளத்தைப் படையினர் மறைக்கிறார்கள் என மக்கள் சந்தேகிப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

கடந்த 15 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் உள்ள உடுவில், அம்பலவாணர் வீதியில் பட்டப்பகலில் தனியே வீட்டிலிருந்த இளம் பெண்ணைக் கட்டிப் போட்டு 15 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கறுப்புத்துணியால் முகத்தை மூடிமறைத்துக் கொண்ட அந்தக் கொள்ளையர்களில் இருவர் பெண்கள். வீட்டுக்குள் திடீரெனப் புகுந்த நால்வர் குறிப்பிட்ட பெண் மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். தாக்குதல் காரணமாக அந்தப் பெண் நிலத்தில் வீழ்ந்ததும் வாயினுள் துணியைத் திணித்து கைகளைப் பின்புறமாகக் கட்டினர். அந்தப் பெண் அணிந்திருந்த நகைகளை அபகரித்த அந்தக் குழுவினர் அந்தப் பெண்ணின் குழந்தையின் நகைகளையும் கழற்றி எடுத்தனர். தங்களது தேவைகளை நிறைவேற்றிய பின்னர் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றனர். உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த தபேந்திரன் செல்வநாயகி (வயது 27) என்ற அந்தப் பெண் சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரது கழுத்து நெரிக்கப்பட்ட காரணத்தினால் அந்தப் பெண் நீராகாரத்தை மட்டுமே இப்போது அருந்தி வருகிறார்.

தன்னைத் தாக்கி தனது உடைமைகளை அபகரித்தவர்களைக் கைது செய்து அடையாள அணிவகுப்பை நடத்தினாலும் அந்தப் பெண்ணால் எவரையும் அடையாளம் காண முடியாது. காரணம் அந்தக் கொள்ளையர்கள் அவர்களின் முகத்தைக் கறுப்புத்துணியால் கட்டித் தமது அடையாளத்தை மறைத்திருந்ததே ஆகும்.

கடந்த 24ஆம் திகதியன்று யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தியாக தீபம் அன்னை பூபதியின் 18 ஆவது நினைவுதின நிகழ்வுகள் நடைபெற்றன. அவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டாம் எனப் படைத்தரப்பினர் அந்த நிறுவனத்துக்குள் புகுந்து அறிவுறுத்திய நிலையிலும் மாணவர்கள் நினைவுதின நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தி வந்தனர்.

இந்நிலையில் கடந்த 24 ஆம் திகதி காலை 8 மணிக்கு அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வுகள் மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் தமிழீழத் தேசியக் கொடியும் ஏற்றப்பட்டது. இதனையறிந்த சீருடையினர் முகத்தை கறுப்புத்துணியால் மறைத்து மூடிக் கட்டியவாறு தொழில்நுட்ப நிறுவனத்திற்குள் திடீரெனப் புகுந்து நிறுவன இயக்குநரின் அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் அடித்து நொறுக்கினர்.

கைகளில் கொட்டான் பொல்லுகளை வைத்திருந்த கறுப்புத் துணியால் தங்கள் முகந்தை மூடிக் கட்டிய படையினர் மாணவர்களைத் தேடித் தேடித் தாக்கினர். சில மாணவர்களைப் படையினர் சப்பாத்துக் கால்களால் மிதித்தனர்.

அந்தச் சமயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அங்கு பிரசன்னமாயிருந்தனர். படையினர் கறுப்புத்துணியால் அவர்களது முகங்களை மூடிக்கட்டிக் கொண்டிருந்ததை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் கண்டுள்ளனர்.

'சங்கதி' என்ற இணையத்தளத்தில் 26.03.2006 அன்று வெளியிட்ட தகவலில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது-

" யாழ்ப்பாணம் வடமராட்சியில் மாதனை, கலட்டி ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில்பொதுமக்களின் வீடுகளுக்குச் செல்லும் படைத்தரப்பினர் அவர்களுக்குத் தொல்லை அளித்து வருகின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்."

"இரவு வேளைகளில் செல்லும் படையினர் பணம் கேட்டு மிரட்டுவதுடன் சில வீடுகளில் பெண்களின் விவரங்களைப் பற்றியும் கேட்டு வருகின்றனர்."இவ்வாறான நடவடிக்கைகளில் கற்கோவளம் முகாமைச் சேர்ந்த ஐந்து படையினர் ஈடுபடுகின்றனர் என இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

" வருபவர்களில் இருவர் படைச்சீருடையில் உள்ளனர் எனவும் நன்றாகப் பொதுமக்களுடன் தமிழில் உரையாடுகின்றனர் எனவும் தெரியவருகிறது. குறிப்பிட்ட அந்த 5 படையினரும் பொதுமக்களின் வீடுகளுக்குள் நுழையும் போது முகத்தைக் கறுப்புத்துணியால் மறைத்திருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது." என அந்தத் தகவல் தெரிவிக்கிறது.

அர்த்த இராத்திரியில் கறுப்புத் துணியால் முகத்தை மூடி மறைத்துக் கட்டிக் கொண்டு வந்து வீட்டின் கதவை தட்டுபவர்கள் வீட்டைச் சோதனையிட வரும் படையினரா அல்லது கொள்ளையடிக்க வந்திருக்கும் கொள்ளையர்களா என்பதைக் கண்டறிய முடியாத நிலையில் அச்சம் காரணமாகக் கதவைத் திறக்கிறார்கள் மக்கள். கொள்ளையர்கள் வீட்டுக்காரர்களைக் கத்திமுனையில் அல்லது துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி பணம், நகை என வீட்டைச் சுத்தம் செய்து வெளியேறுகிறார்கள்.

இம்மாதம் 27 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவில் பின் வீதியில் - இராணுவ காவலரணில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள்- பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்த கொள்ளையர்கள், 110 பவுண் நகைகள் இரும்புப் பெட்டகத்தில் இருந்த பணம் என்பவற்றை (2 கோடி பெறுமதியான) கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

**ஆகாஷ்**

கொள்ளையர்கள் கறுப்புத் துணியால் தங்கள் முகத்தை மூடி மறைத்து வருவதால் - அவர்கள் கொள்ளையர்கள் தானா அல்லது படையினரா - என்பதை உறுதிப்படுத்த முடியாத காரணத்தால் அச்சம் காரணமாக அயலவர்கள் கூடிக் கொள்ளையைத் தடுக்க முடியவில்லை.

உண்மையில் படைத்தரப்பினர் சோதனையை மேற்கொள்ள வீட்டுக் கதவை வந்து தட்டுகிறார்கள் என வைப்போம். கதவைத் தட்டினால் திறக்க வேண்டும். திறக்காவிட்டால் அது வேறு பிரச்சினை. அப்படித் திறக்கும் போது வந்தவர்கள் படையினரல்லாவிடின் (கொள்ளையர்கள் எனின்) சரித்திரம் முடிந்தது. " ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம். யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்."